பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை
ரூபா
10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 18 புதன்கிழமை (02.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :96

# பல்கலைக்கழக முன்றிலில் இருந்து செயலகம் நோக்கி இன்று பேரணி!

## பல்லாயிரக் கணக்கான மக்கள் அணி திரள்வர்

யாழ்ப்பாணம்,மார்ச்2

போரை ஓய்வுக்குக் கொண்டுவந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்றாண்டுகள் கடந்தபின்னரும் அதன் பயன்கள் தமிழ்மக்களுக்கு எட்டாமல் இருப்பதைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டும் மாபெரும் மக்கள் பேரணி இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது.

யாழ்.பல்கலைக்கழக முன்றிலில் இருந்து முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாக வுள்ள இந்தப் பேரணி, அங்கிருந்து நகர்ந்து யாழ். அரச செயலகம் வரை செல்லும்.

குடாநாட்டின் நாற்திசைகளிலும் இருந்தும் பேரணியில் கலந்துகொள்ள வருவோர் குறிக்கப்பட்ட உப வீதிகளூடாக வந்து பிரதான பேரணியுடன் இணைந்துகொள்வர்.

இந்தப் பேரணிக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டிருப்பதாகப் பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிதிரள்வர் என்று எதிர்பார்க்கப்படுவதால் அவர்கள் பேரணி முடிந்ததும் சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு வாகன வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகவும் பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவிக்கிறது.

பல்கலைக்கழக முன்றிலில் ஆரம்பமாகும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பெண் போராளிகள் மீதான தாக்குதல்:

# புலிகள் மீண்டும் சீற்றம்!

## கொலைகள், சூடுகள் தொடர்வது அமைதிக்குப் பங்கம் என தமிழ்ச்செல்வன் நோர்வே அரசுக்கு அவசரமாக அறிவிப்பு

கிளிநொச்சி,மார்ச் 2

**மட்டு. - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் நேற்றுமுன்தினம் அம்பாறையில் சுட்டுப் படுகாயப்படுத்தப்பட்ட சம்பவம் விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.**

**தமது மூத்த அரசியல் போராளிகள் கொல்லப்படுவதும் சுடப்படுவதும் தொடர்ந்து இடம் பெறுவது மிக ஆபத்தானதும் அமைதியைக் குலைப்பதுமான செயல் என்று புலிகள் நேற்றிரவு நோர்வே அரசுக்கு அவசரமாக அறிவித்துள்ளனர்.**

கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஊடாகத் தமது சீற்றத்தைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நோர்வே அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

மட்டு. - அம்பாறை மாவட்டங்களில் தமது போராளிகள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து வருவது குறித்துப் புலிகள் ஏற்கனவே ஆத்திரமடைந்திருந்தனர். இத்தகைய சம்பவங்களுக்கு அரச படையினரே பொறுப்பு என்றும், இவை உடன் தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் தெரிவித்துவந்தனர்.

இந்த நிலையிலேயே குவேனி உட்படப் பெண் போராளிகள் மீதான தாக்குதல் இடம்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினர் வவுனியாவில் அத்துமீறல்!

வவுனியா, மார்ச்2

வவுனியாவில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்திற்குள் புகுந்து சோதனையிடுவதாகக் கூறி நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அத்துமீறி நடந்துகொண்டனர் என்று புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் தெரிவித்ததாவது-

நேற்று மாலை 2 மணியளவில் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவு

(16 ஆம் பக்கம் பார்க்க)

**ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்து ஆசிரிய நியமனம்பெற்ற 630 பேரின் பெயர் விவரங்கள் 3 ஆம், 15 ஆம் பக்கங்களில்.**

## மட்டக்களப்பில் சுடப்பட்டவர் நேற்று மரணமானார்

ஏறாவூர்.மார்ச் 2

மட்டக்களப்பு தலைமையகப் பொலீஸ் பிரிவிற்குட்பட்ட பார் வீதியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் பின்னர் வைத்தியசாலையில் மரணமானார்.

சுப்பிரமணியம் - தயாநிதி (வயது 48) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். இரவு 8.50 மணியளவில் இவர் சுடப்பட்டார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகக் கல்லடி திருச்செந்தூர் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து மட்டக்களப்பு நகரில் நலன்புரி நிலைய

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. - அம்பாறையில் தொடர்ந்து நடந்துவரும்

# புலிகள் மீதான தாக்குதல்கள் குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு

கொழும்பு,மார்ச்2

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிப் போராளிகள் மீது அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் தாக்குதல்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளார்.

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இருவரைக் கொண்டதாக அமைக்கப்படும் இந்த ஆணைக்குழு உடனடியாகச் செயற்படத் தொடங்கும் என்று ஜனாதிபதி செயலகம் நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழு கிழக்கில் நடந்த சம்பவங்கள் குறித்து விசாரிப்பதுடன், அவற்றின் பின்னணியிலுள்ள காரணங்கள் - நோக்கங்கள் - குறித்து விசாரித்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு ஜே.வி.பி. நிபந்தனை!

கொழும்பு.மார்ச்2

வடக்கு - கிழக்குக்கென இடைக்கால அதிகார சபை ஒன்றை வழங்கும் திட்டம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முடிவு அல்ல. எனவே, அத்தகைய திட்டம் எதையும் நடைமுறைப்படுத்தும் எண்ணம் தமக்கு இல்லை என்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடனடியாகப் பகிரங்கப்படுத்தவேண்டும் என ஜே.வி.பி. நிபந்தனை விதித்துள்ளது என்று அறியவருகின்றது.

வடக்கு - கிழக்கு மக்களின் உடனடி மனிதாபிமானத் தேவைகளையும், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் கவனிப்பதற்காக இடைக்கால நிர்வாக சபை குறித்து முதலிலும், இறுதித் தீர்வு குறித்து அதைத் தொடர்ந்தும் புலிகளுடன் பேச அரசு தயார் என்ற சாரப்பட அரசுத் தரப்பிலிருந்து வெளியிடப்பட்டிருக்கும் அறி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## குவேனியைச் சுட்டவர் கைது?

மட்டக்களப்பு,மார்ச் 2

குவேனி உட்பட பெண் போராளிகளைச் சுட்டவர் என்று கருதப்படும் நபர் ஒருவர் நேற்று விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டு கல்முனைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என ஒரு தகவல் தெரிவித்தது. கல்முனைப் பொலீஸார் அதனை உறுதிப்படுத்தினர்.

சுடப்பட்ட குவேனியும் ஏனைய பெண் போராளிகளும் கல்முனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று வைத்தியசாலைக்குச் சென்று அவர்களைப் பார்வையிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் குவேனியும் ஏனைய போராளிகளும் சுடப்பட்ட சமயம் அவர்களின் பின்னால் வந்த ஆண் போராளிகள் சுட்ட நபரை அடையாளங்கண்டு துரத்திச் சென்றனர் என்று

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மாவின் விலை 6 1/2 ரூபாவால் உயர்வு

பிறிமா நிறுவனத்திற்கான கோதுமை மா மானியத்தை அரசு ரத்துச் செய்ததை அடுத்து கோதுமை மா விலையை 6 ரூபா 50 சதத்தால் அந்த நிறுவனம் அதிகரித்திருக்கின்றது.

இந்த விலை அதிகரிப்பு நேற்றுமுதல் அமுலுக்கு வந்துள்ளது.

கோதுமை மாவிற்கான மானியம் ரத்துச் செய்யப்பட்டதையடுத்து இவ்வாறு விலை அதிகரிப்பை மேற்கொள்ளவேண்டியேற்பட்ட தாகக் கூறும் பிறிமா நிறுவனத்தின் விற்பனை அதிகாரியான அப்துல் காதர், இதுகுறித்து திறை சேரிக்கும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

# தன்மானத்துடனும் தற்பாதுகாப்போடும் இணைந்த அமைதியே தமிழர் விருப்பம்

## இதனை வெளிப்படுத்த அழைக்கிறார் ஈழவேந்தன் எம்.பி.

யாழ்ப்பாணம்,மார்ச் 2

தற்பாதுகாப்போடும் தன்மானத்துடனும் இணைந்த அமைதி நிலைமையையே தமிழ்மக்கள் விரும்புகின்றார்கள்.

இந்த உண்மையை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துரைப்பதற்காக இன்று நடைபெறுகின்ற பேரணியில் அனைத்துத் தமிழ் மக்களும் அணிதிரள வேண்டும்.

- இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன்.

இன்றைய பேரணி தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தாகி 3 ஆண்டுகள் உருண்டோடிய நிலையிலும் ஈழத்தமிழரின் எதிர்காலம் ஏக்கம் நிறைந்ததாகவே விளங்குகின்றது. இந்த ஒப்பந்தம் உருவாகிய காலகட்டத்தில் சிங்களத் தலைவர்களிடமும் சிங்கள மககளிடையேயும் ஒரு பெரும் மனமாற்றம் ஏற்பட்டிருப்பதுபோல் ஒருதோற்றம் விளங்கியது.

கடந்த 3 ஆண்டு காலமாக இடைக்கால அரசை உருவாக்குங்கள் என்றும், அப்பொழுதுதான் உண்மையான அமைதி நாட்டில் ஏற்படமுடியும் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழ் அரசியல் அறிஞர்களும் நாட்டின் நலன் கருதும் கல்விப்பேரறிஞர்களும் பணிவோடும், இடித்துரைத்தும் கூறினர்.

ஆனால், சிங்கள வெறியாட்டம் தலைதூக்கி தொடர்ந்தும் தமிழர்களை ஏமாற்றி இடைக்கால அதிகாரசபையை நடைமுறைப்படுத்த விருப்பமற்ற நிலையில், இந்த எடுத்துரைப்பு சிங்கள அரசினால் இழுத்தடிக்கப்படுகிறது.

இந்த 3 ஆண்டுகளுக்கிடையில் நாட்டில் உண்மையான அமைதி ஏற்படவில்லை. மாறாக, 'போலிப் பாதுகாப்பு உணர்வு' தான் (False Sense of Security) இன்று நாட்டில் நிலவுகின்றது.

அத்தோடு, போர் வெடிக்கலாம் என்ற அச்சமும் ஏக்க உணர்வும் நாட்டின் அனைத்து மக்களிடையேயும் நிலவுகின்றது.

அமைதியைச் சிங்கள மக்களும் விரும்புகின்றார்கள். தமிழ் மக்களும் விரும்புகின்றார்கள். ஆனால், தமிழ் மக்கள் விரும்புகின்ற அமைதி தற்பாதுகாப்போடும், தன்மானத்தோடும் இணைந்த அமைதியே ஆகும். சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் தங்கள் ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் தடையின்றி நடைபெற, தமிழர் எக்கேட்டிற்கு ஆளானாலும் கவலையற்ற நிலையில் தங்கள் வாழ்வு மட்டும் வளம்பெறும் அமைதியை அவர்கள் விரும்புகிறார்கள்.

போர்நிறுத்த உடன்பாடு உருவாகி 3 ஆண்டுகள் முற்றுப்பெற்ற நிலையிலும் அழிவின் விளிம்பிற்குத் தமிழினத்தைத் தள்ளுகின்ற அரசினை எதிர்த்து நாம் இன்று நடத்துகின்ற கண்டனப் பேரணியில் அனைத்து மாறுபாடுகளையும், வேறுபாடுகளையும் மறந்து ஒன்றுபட்டு, அரசிற்கு எம் எதிர்ப்பைக் காட்டவேண்டியது தமிழ் மக்கள் அனைவரினதும் கடமை ஆகும்.

எனவே, அனைவரும் அணிதிரள்வீர் விழிப்போடு இருப்பதுதான் நாம் விடுதலைக்குக் கொடுக்கின்ற விலை என்பதை நாம் அனைவரும் என்றும் மறவாது 'செய் அல்லது செத்துமடி' என்று குரல் எழுப்பி உலகெங்கும் எங்கள் போர்க் குரல் கேட்க உறுதிபூண்வோமாக - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

## பேரணி முடிந்ததும் மக்கள் திரும்பிச்செல்ல வாகன வசதி

யாழ்ப்பாணம்,மார்ச்2

இன்றைய கண்டனப் பேரணி யாழ்.செயலகத்துக்குச் சென்று முடிவடைந்ததும் அதில் கலந்துகொண்ட பொதுமக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதேச ரீதியாக மக்கள் ஒன்றுகூடி வாகனங்களில் ஏறிச் செல்வதற்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் வருமாறு -

★ தீவுப்பகுதி மக்கள் - யாழ்.பழைய பூங்கா வீதி.

★ நல்லூர், யாழ்ப்பாணம் பகுதி மக்கள் - சோமசுந்தரம் வீதி.

★ தென்மராட்சி மக்கள் - கண்டி வீதியில் மாம்பழம் சந்தி அருகே.

★ மாணவர்கள் - யாழ்.செயலகம் அருகில்

★ வடமராட்சி, கோப்பாய் அச்சுவேலி மக்கள் - கச்சேரி - நல்லூர் வீதி.

★ காரைநகர், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை, உடுவில் மக்கள் - ஆஸ்பத்திரி வீதி, கண்டிவீதிச் சந்தி.

(ஐ-12-15-17-86)

# யாழ். மக்களின் நலன்கருதி பளையில் தமிழீழ நீதிமன்று

யாழ்ப்பாணம்,மார்ச் 2

யாழ்.மாவட்ட மக்களின் நன்மைகருதி தமிழீழ நீதிமன்றம் ஒன்று பளையில் விரைவில் இயங்கவுள்ளது.

தமிழீழ நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா இதனை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சியில் உள்ள எமது நீதிமன்றங்களுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களால் பல வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டு வருகின்றன. அந்த வழக்குகளின் விசாரணைக்கு வருபவர்கள் போக்குவரத்து நெருக்கடிக்குள் சிக்குகின்றனர். அத்துடன், வன்னியில் வந்து தங்கவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

வழக்குத்தாக்கல் செய்பவர்கள் விடுத்த கோரிக்கையை ஆராய்ந்து, அவர்களுக்கு எமது நீதி, நிர்வாகச் சேவை கிடைக்க வசதியாக பளையில் தமிழீழ நீதிமன்றம் ஒன்றை ஆரம்பிக்க முடிவுசெய்துள்ளோம்.

இந்த நீதிமன்றம் விரைவில் இயங்கத் தொடங்கும். இங்கு யாழ். மாவட்ட மக்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய வாய்ப்புக் கிட்டும்.

குறிப்பாக, யாழ். பிரதேச மக்கள் தமது கடன், கொடுக்கல் வாங்கல், காணிப்பிரச்சினை, மணமுறிவு போன்றவை தொடர்பான வழக்குகளையே கூடுதலாக எமது நீதிமன்றத்தில் தாக்கல்செய்கின்றனர். விரைவான தீர்ப்பைப் பெறுவதற்காகவே அவர்கள் எமது நீதிமன்றத்தை நாடுகின்றனர் - என்றார் அவர்.

(எ-13)

# தமிழ்க் குழுக்களைப் பயன்படுத்தி தமிழர் பகுதியில் அரசு அராஜகம்

## அணி திரண்டு அம்பலப்படுத்தக் கோருகிறார் மாவை

யாழ்ப்பாணம்,மார்ச்2

கொள்கை மாறிப்போன தமிழ்க் குழுக்களைப் பயன்படுத்தி தமிழர் தாயகப் பகுதியை பிளவுபடுத்தவும் ஜனநாயகவாதிகளையும் நிராயுத பாணிகளையும் கொன்றொழிக்கவும் அரசு மறைமுகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றது.

இந்த அராஜகப் போக்கினை உலகிற்கு அம்பலப்படுத்துவதற்காக இன்றைய பேரணியில் அனைத்துத் தமிழ் மக்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஒப்பந்தம் ஏற்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. பேச்சு நின்று 22 மாதங்களாகிவிட்டன. ஒஸ்லோ தீர்மானம், ரோக்கியோ பிரகடனம் எனும் பின்னணியில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்றைத் தமிழ் பேசும் மக்கள் தாயகத்தில் - வடக்கு - கிழக்கு மாநிலத்தில் நிறுவிப் போரினால் பாதிக்கப்பட்ட தேசத்தினதும் மக்களினதும் புனர்வாழ்வு, புனர்நிர்மாண நடவடிக்கைகளை முன்னெடுக்க, சிங்களப் பேரினவாதம் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை நிறுவப்பட்டிருந்தால் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு, தமிழர் தாயக மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும் சர்வதேச நாடுகளின் உதவிகள் நேரடியாகக் கிடைக்கவும், பயன்படுத்தவும் முடிந்திருக்கும்.

போர்நிறுத்த காலத்தில் அரசின் நடவடிக்கை தமிழர் தரப்பின் சம்பவத்தைக் குலைப்பதாகவுள்ளது. கொள்கை மாறிப்போன தமிழ்க் குழுக்களைப் பயன்படுத்தித் தமிழர் தாயகத்தைப் பிளவுபடுத்தவும், ஜனநாயக சக்திகளையும், இராணுவ பலத்தையும் சீர்குலைப்பதில் அரசும், அதன் புலனாய்வுத்துறையும் செயற்பட்டு வருகின்றன.

இச் சூழ்நிலையில் தமிழ்த் தேச மக்கள் சர்வதேசத்தின் கவனத்தை மேலும் ஈர்க்கவேண்டும். சுனாமிப் பேரலையால் பாதிப்புற்ற மக்களின் மனிதாபிமான அடிப்படைத் தேவைகளைக் கூட இப்பேரினவாத அரசு நிறைவேற்ற மறுக்கிறது என்பதை மேலும் வெளிப்படுத்த வேண்டும். இதற்காக இன்று வடமாநில மக்களை அணி திரண்டு பேரணியில் எழுச்சியுடன் உரிமைக் குரல் எழுப்புமாறு அழைப்பு விடுக்கின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# தூர இடங்களில் இருந்து வருவோர் பேரணியில் இணைவதற்கான பாதைகள்

யாழ்ப்பாணம்,மார்ச்2

இன்று நடைபெறுகின்ற கண்டனப் பேரணியில் கலந்துகொள்வதற்காக வரும் பொதுமக்கள் பிரதேச ரீதியாக பிரதான பேரணியுடன் இணைந்து கொள்வதற்கான பாதைகள் தொடர்பான விவரங்களைப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டிருக்கின்றது.

இதன்படி-

யாழ்.நகரம் மற்றும் அதனையண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் யாழ்.இந்துக் கல்லூரியில் ஒன்றுகூடி அங்கிருந்து கந்தர் மடம் சந்திக்கு வந்து பேரணியில் இணைவர்.

நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் பலகலைக் கழகத்துக்கு அருகே உள்ள குமார சுவாமி வீதியூடாக வந்து பல்கலைக் கழக முன்றிலில் பேரணியுடன் இணைவர்.

மாணவர் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் பழம் வீதியூடாக வந்து நல்லூர் அரசடி வீதியில் பேரணியுடன் இணைந்துகொள்ள ஏற்பாடாகி உள்ளது.

வடமராட்சி தீவகம், வலிகாமம் (காரைநகர், தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, அச்சுவேலி, கோப்பாய்) ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் நேரடியாகப் பேரணி ஆரம்பிக்கும் இடத்துக்கு வருவர்.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் சிவன், அம்மன் வீதியாக வந்து பலாலி வீதியில் பேரணியுடன் இணைவர்.

(ஐ-12-86-15-17)

# சமூக, அரசியல், பொருளாதார, வளங்களில் தமிழருக்கு சமபங்குண்டு என்பதை உணர்த்துவோம்!

## பொது அமைப்புகள் மக்களுக்கு அறைகூவல்

கரவெட்டி,மார்ச்2

இலங்கைத்தீவில் சமூக, இன, அரசியல், பொருளாதார வளம் என்பவற்றில் தமிழ் மக்களுக்கு சமபங்குண்டு என்பதை உணர்த்த இன்றைய பேரணியில் அணி திரள்வோம்!

நாளைய பேரணி தொடர்பாக மேலும் சில பொது அமைப்புக்கள் வெளியிட்டிருக்கின்ற அறிக்கைகளில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கைகளின் விவரம் வருமாறு-

**தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களின் தலைமைச் செயலகம்**

இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்கு தமிழர்களின் பூர்வீக நிலப்பரப்பென்றும், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து அதுவே தமிழர்களின் தாயகமென்றும் தொல்லியல் வரலாறுகள் தெளிவாக்கி வருவதும், புதைபொருள் படிவுகள் இதனை உறுதிப்படுத்துவதும் யாரும் மறுக்க முடியாது. இந்நிலையை சிங்கள பௌதத பேரினவாத அரசு ஜீரணிக்க முடியாத நிலையில் ஒரு தமிழரின் கலை, கலாசார பாரம்பரிய, பண்பாட்டு அடையாளங்களை அழித்துவருவதும், இனவாத வெறியால் காலத்துக்குக் காலம் தமிழர்கள்மீது பயங்கரவாத நடவடிக்கைகளைக கட்டவிழ்த்து விட்டுத் தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளை அழித்து வருவதும் தமிழர்களாகிய எங்களுக்குத் தன்னாட்சி உரிமையின் அவசியத்தை உணர்த்தி வருவதும் தவிர்க்க முடியாதது.

கடல் வலயம் மற்றும் குடியிருப்புக்கள், பொருளாதார நிலைகள் யாவும் இராணுவப் பரம்பல் அகற்றப்பட்டு இயல்பு வாழ்க்கை உருவாக ஏற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்க அனைவரையும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுகின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்**

தமிழ் மக்களின் கோரிக்கைகளை சர்வதேச சமூகத்திற்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் யதார்த்தமாக புரியும்படி செய்யவேண்டுமென்ற உயர்ந்த நோக்குடன் யாழ்.மாவட்டப் பொது அமைப்புக்கள் ஒன்றியம் முன்னெடுத்துள்ள இப்பேரணி காலத்தின் கட்டாய தேவையே!

புலிகள் இயக்கத்திற்கும்-ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு 3 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இடையில் வெளிநாடுகளில் இருதரப்பினருக்கும் 6 தடவைகள் பேச்சுக்களும் நடைபெற்று எத்தனையோ விடயங்களில் இணக்கங்கள் காணப்பட்டன. ஆயினும், இன்றுவரை யாவும் ஏட்டளவிலேயே உள்ளன.

அரச தரப்பின் சமாதான முயற்சிகள் ஸ்திரத்தன்மையின்மை, தமிழ் மக்கள் மத்தியில் வசனத்தையே ஏற்படுத்துவதாக உள்ளது. வரலாற்றுத் தனித்துவம்- பாரம்பரிய பிரதேசம்-சுயநிர்ணய வலிமை என்பனவற்றைக் கொண்ட தமிழ்த் தேசிய இனமே சகல வழிகளிலும் புறம் தள்ளப்பட்டு வருகின்றது.

தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களிலேயே அகதி வாழ்க்கை வாழ்வதையும், போரின் கொடுமையாலும், இயற்கை அனர்த்தத்தாலும் புலம் பெயர்ந்து வாழும் மக்களைத் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வாழ அவர்களுக்கான மீள்குடியமர்த்தல் மிகவும் அவசியமானது.

இன்றைய பேரணியில் சகல மக்களும் பங்குபற்றி கோரிக்கைகளுக்கு வலுச்சேர்க்க வேண்டும. இன்றைய பிரமாண்டமான மக்கள் பேரணி வெற்றியளிக்கவும், நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிறைந்த சுபீட்ச வாழ்வு அமையவும் சகல இந்து மத குருமார்கள் சார்பாக சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் தனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது - என்றுள்ளது.

**தொழில்நுட்பக் கல்லூரி பகல்நேர மாணவர் மன்றம்**

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள சமாதான ஒப்பந்தத்தினை ஆயுதமாக வைத்துக்கொண்டு சிறிலங்கா பேரினவாதிகள் எமது மக்களையும் உலகினையும் ஏமாற்றி வருகின்றது எனும் கருத்தினைத் தற்போது ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவின் கருத்துக்களில் இருந்து தெளிவாக விளங்குகின்றது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் கூட, சிறீலங்கா அரசினால் எமது மக்களுக்கு எதுவித நன்மைகளும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, இன்று காலை 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வாயிலில் இருந்து ஆரம்பமாகும் மாபெரும் கண்டனப் பேரணியில் இணைந்து கொள்வோம்.

எமது உரிமைக் கோஷங்களை உரத்துக் கூறுவோம். எமது உரிமைகளை நாமே வென்றெடுப்போம். இன்று நடைபெறும் பேரணியில் அலை அலையாக அணிதிரள்வோம் - என்றுள்ளது.

# ஆசிரிய நியமனம் பெற்ற 630 பேரின் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

வடக்கு - கிழக்கில் ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்து நேற்றுமுதல் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்ட 630 பேரின் விவரங்களை மாகாணக் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

மாகாணக் கல்வியமைச்சினால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற ஆயிரத்து 500 பேர் முதல் கட்டமாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் தகுதியான 630 பேருக்கு நேற்று நியமனம் வழங்கப்பட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்டவர்களின் பெயர் பாடசாலை விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தன. எனினும் மேற்படி நியமனத்தினுள் உள்ளீர்க்கப்பட்ட அனைவரது விரைங்கள் நேற்றையதினம் உதயனுக்குக் கிடைத்திருந்தன.

எனவே, ஏற்கனவே பெயர் விவரம் வெளியானவர்களின் விவரங்களை உள்ளடக்கியதாக நியமனம் பெற்ற 630 பேரின் பெயர் விவரங்கள் இன்றைய உதயனில் பிரசுரமாகின்றன.

பாடரீதியாக நியமனம் பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

### மின்பிடியியல் டிப்ளோமா

அருமைத்துரை பிறேமதாஸ் (மாதகல்), செந்தில்நாதன் மயூரதாசன் (கொழும்பு - 06), மாலதி பரமலிங்கம் (கரவெட்டி), வரதலிங்கம் ரமணசுதன் (தொண்டைமானாறு), கனகசிங்கம் முரளிதரன் (உரும்பிராய்), பிரபானந்தினி கிருஷ்ணபிள்ளை (புலோலி), ஜென்சி மரியநாயகம் (புலோலி), மகேந்திரம் பிரதீஸ் (மந்துவில்), முருகேசு நீதன் (உடுப்பிட்டி), சிங்கராசா அப்பன் வசந்தரூபன் (கல்வியங்காடு) -

கந்தசாமி சிவனேசன் (தாளையடி), விஷ்வலிங்கம் மன்மதகுமார் (தாளையடி), மேரி ராதிகா அந்தோனிப்பிள்ளை (பருத்தித்துறை), செபஸ்ரியாம்பிள்ளை டெனோசன் புஸ்பாகரன் (பண்டத்தரிப்பு), ஒபக்கா கற்பகநாயகம் (கரவெட்டி), கோபாலகிருஷ்ணன் ருசியந்தன் (உடுப்பிட்டி), சிவதர்சினி இராமச்சந்திரன் (அச்சுவேலி), பிரபாலோஜினி கந்தையா (கொடிகாமம்), பாக்கியநாதன் கமலக்கண்ணன் (பருத்தித்துறை), கந்தப்பு பரமேஸ்வரி (கரவெட்டி) -

தம்பிராசா கலையமுதன் (தொண்டைமானாறு),அருணாசலம் சுதர்சினி (மானிப்பாய்), சுப்பையா, இளங்கோவன் (உரும்பிராய்), தாவீதுராசா டேவிட் (அக்கராயன்), சோமசுந்தரம் சோமச்சந்திரன் (பருத்தித்துறை), நவரட்ணம் சதீஸ்வரன் (புதுக்குடியிருப்பு), சின்ராசா கபிலன் (அல்வாய்), வசந்தகுமார் ஸ்ரீதரன் (கனகபுரம்), முஹம்மட் கஸீபா ஜூபா (கிண்ணியா - 06), விவேகானந்தா நிறைஞ்சன்(சுண்டுக்குளி) -

தெய்வேந்திரம் புதியராஜ் (மானிப்பாய்), தியாகராஜா ஜெயப்பிரகாஷ் (தொண்டைமானாறு), நந்தினி நடராஜ் (அச்சுவேலி), சின்னக்கிளி சுஜாத்தா (தொண்டைமானாறு), நவரட்ணம் ஜெகநந்தன் (தொண்டைமானாறு), வீரசிங்கம் ரட்ணகாந்தன் (தொண்டைமானாறு), பரமநாதன் விஜயகுமார (மானிப்பாய்), ஆறுமுகம் ராஜ பாலசிங்கம் (கோப்பாய்), றோக் அல்மஸ் வின்சன் ஆர்சைன் (பாஷையூர்), கலாநிதி வெற்றிவேலு (பருத்தித்துறை) -

டென்சில் சேவியர் சுவைனஸ்(குருநகர்), சபாரட்ணம் யசோதரன் (கொக்குவில் கிழக்கு), சிவலிங்கம் அருட்குமரன் (தொண்டைமானாறு), வதனராணி நந்தகோபால் (கரவெட்டி), விஷ்வநாதன் பகீரதன் (பருத்தித்துறை), சிங்காரவேல் சங்கர் (திருகோணமலை), தேவன் அகிலன் (உடுப்பிட்டி), தங்கவேல் ரூபரஞ்சன்(உடுப்பிட்டி), திருச்செல்வம் தவரட்ணம் (சுழிபுரம்), அரியரஞ்சினி நவநீதராசா(தாளையடி) -

சுப்பிரமணியம் வீரசுதாகரன் (மீசாலை), ஸ்ரீபன் நியூட்டன் (குருநகர்), வைத்தீஸ்வரன் சிவதரன் (குப்பிளான் தெற்கு), கிருஷ்ணமூர்த்தி வாணி (அல்வாய்), பொன்னம்பலம் கோகுலன் (பருத்தித்துறை), அருளானந்தம் அருள்ஜெயதரன் (மானிப்பாய்), கஜேந்திரதேவி சர்வேந்திரன் (கல்மடுநகர்), சிவாந்தினி ஆனந்தசிவம் (அல்வாய்), கனகரட்ணம் சச்சிதானந்தன் (அல்வாய்), ஏ.எம்.ஜெனோவா நியூரினி (பருத்தித்துறை) -

சிவஞானம் பாலமுரளி (வல்வெட்டித்துறை), சஞ்சுவம் அன்ரன் ஜெனோஜோஜ் (மன்னார்), சதாசிவம் குமாரகுருபரன் (உடுப்பிட்டி), ஜேசுராசா அமலநாதன் (கோப்பாய்), சுவாம்பிள்ளை அற்புதா செல்வநாயகி (பருத்தித்துறை), ஜெயதீஸ்வரி சந்திரமோகன் (உடுப்பிட்டி), வாசுகி சின்னத்துரை (அச்சுவேலி), சிவக்கொழுந்து சிவானந்த பிரகாஷ் (கரவெட்டி) -

### உடற்கல்வி

பாலகிருஷ்ணன் தங்கவேல் (ஆண்டித்தோட்டம், அல்வாய்), துசியா திருச்செல்வம் (மட்டுவில் தெற்கு), இராமச்சந்திரன் முகுந்தன் (மாலுசந்தி, அல்வாய்), யோகேஸ்வரன் விமலன் (3 ஆம் கட்டை, கல்வியங்காடு), திருநாவுக்கரசு சாமினி (ஆனைக்கோட்டை), யூலிப்பிரகாசராசா (குருநகர்) -

இராசலிங்கம் கஜமுகன் (மல்லாகம்), மகேந்திரம் சசிகுமார் (அச்செழு), பவளகாந்தன் ஜெயகரன் (கரணவாய் மத்தி), பரராஜசிங்கம் பார்த்தீபன் (அல்வாய் வடக்கு), விவேகானந்தன் சாரங்கன் (அல்வாய் தெற்கு), சாந்தநாதன் பிரியங்கன் (அல்வாய் தெற்கு), தங்கவேலு புஷ்பரட்ணம் (கரவெட்டி), பாலசிங்கம் வாசுதேவன் (திருநெல்வேலி வடக்கு) -

துரைராஜசிங்கம் வாகீஸ்வரன் (திருநெல்வேலி வடக்கு), செல்வநாயகம் சாள்ஸ் இன்பதாஸ் (நெல்லியடி), காந்தலீலா நடராஜா (ஆடியபாதம் வீதி), நவரெட்ணம் சஞ்சீவ் (யாழ்ப்பாணம்), செல்வநாயகம் சிவபாதசுந்தர் (நல்லூர் வடக்கு), அம்புரூஸ் பெனடிக்ற் குரூஸ் (பேசாலை), நவரட்ணம் சுகந்தன் (கொழும்பு) -

தங்கராசா விமலன் (அல்வாய் தெற்கு), தனபாலசிங்கம் ராதாகிருஷ்ணன் (சுதுமலை தெற்கு), அழகர்சாமி தம்பிராசா (மாங்குளம்), விக்னேஸ்வரன் பாலசேந்தன் (அச்சுவேலி), கனகரட்ணம் சசிக்குமார் (மாரீசன்கூடல், இளவாலை), நவராஜசிங்கம் சுரேஸ்குமார் (கொய்யாத்தோட்டம்), பாலசுந்தரம் ஜெயரூபன் (மானிப்பாய்), முத்தையா கந்தசெல்வன் (சுழிபுரம் கிழக்கு), பொன்னம்பலம் ரஜிந்தன் (கரணவாய் வடக்கு) -

சின்னத்துரை வசந்தகுமார் (கரவெட்டி), ஜெயலிங்கம் ஜெயகாந் (கோப்பாய் வடக்கு), ஜெயதர்சினி ஜெயபாலரத்தினம் (யாழ்ப்பாணம்), சரவணை சுவேந்திரன் (கரவெட்டி), சுந்தரலிங்கம் சுயேந்திரன் (மீசாலை வடக்கு), சிவசுப்பிரமணியம் ஸ்ரீதரன் (விசுவமடு மேற்கு), கார்த்திகா கனகரட்ணம் (சாவகச்சேரி), நடேசு செந்தூரன் (தெல்லிப்பழை கிழக்கு) -

கனகரட்ணம் கனகராஜா (நெல்லியடி), விமலேந்திரநாதன் வில்லியம் ஜெயநேசன் (வரணி), மரியநாயகம் டெனிஷ்ரன் விஜயகுமார் (இளவாலை), மடோனா மரியதாஸ் (குருநகர்), பாலேந்திரன் சசிகரன் (கரவெட்டி), விநாயகமூர்த்தி ஐங்கரன் (அச்சுவேலி தெற்கு), ஜேசுதாசன் மகிந்தன் (ஆனைக்கோட்டை), மடோனோ செல்வரட்ணம் (யாழ்ப்பாணம்), ரேவதி யோகீந்திரன் (சுதுமலை தெற்கு) -

பாலசிங்கம் பிரதீபன் (அளவெட்டி), மரியதாஸ் மதிவதனன் (தும்பளை), பெரியதம்பி ராஜமனோகரன் (கரவெட்டி மத்தி), லோகேஸ்வரன் பிரேம்குமார் (கந்தர்மடம்), இரத்தினசிங்கம் பரணிதரன் (பண்ணாகம் தெற்கு), முத்தையா நவதீபன் (ஜெயபுரம், பூநகரி).

### கணிதம்

சாமினி குணரத்தினம் (சுன்னாகம்), தர்சினி பாலச்சந்திரன் (கரவெட்டி வடக்கு), சுதர்சினி சுதந்திரன் (தாளையடி), துவாரகா கிருஷ்ணராஜா (கரவெட்டி மத்தி), பகவத்சிங் சேவரல் (ஆரையம்பதி), பிரியதர்சினி நடராஜா (சிறுப்பிட்டி மேற்கு), சின்னையா சிவராஜன் (அல்வாய் கிழக்கு) -

ஐயாத்துரை மோகன்ராஜ் (தம்பிலுவில் 2), தங்கராஜா பகீரதன் (சாவகச்சேரி), சிவசுந்தரம் குணசீலன் (அராலி மத்தி), சுபஉமா பாலசிங்கம் (சுதுமலை வடக்கு), குலசேகரம் இளங்குமரன் (விடத்தற்பளை), பகீரதி சிவநாதன் (கரவெட்டி), இராமநாதன் ரமேஸ் (கரணவாய் தெற்கு), குணரட்ணம் சுரேஷ் (வண்ணார்பண்ணை மேற்கு), தவரட்ணசிங்கம் தர்சிகன் (புலோலி தெற்கு), ஆறுமுகம் யோகலிங்கம் (திருநெல்வேலி), வல்லிபுரம் ஐங்கரன் (கொடிகாமம்), அன்ரனி கிறேசியன் புஷ்பராஜா (முல்லைத்தீவு), ஜெயமதி புவனேஸ்வரன் (வண்ணார்பண்ணை), அமிர்தலிங்கம் வத்சலன் (ஊர்காவற்றுறை), உமா கனகசுந்தரம் (தும்பளை), அனுரலுள்ளா மொகமட் அக்ரம் (புத்தளம்), நிமாலினி சண்முகவடிவேல் (சங்கரத்தை), பகீரதி ரங்கநாதன் (புலோலி தெற்கு), செல்வராசா ஜெயசீலன் (நெல்லியடி கிழக்கு), செல்லையா ஜெயராஜா (சுன்னாகம் தெற்கு)-

றமணி ரட்ணம் (அல்வாய் கிழக்கு), சோமசேகரம் கஜேந்திரன் (கொழும்பு 6), தர்மகுலம் சுமன் (அல்வாய் வடக்கு, திக்கம்), சுந்தரம் ஜெகதீஸன் (கரவெட்டி), சிவதாஸ் பிரசாத் (சண்டிலிப்பாய் வடக்கு) -

### விஞ்ஞானம்

முஹம்மட் சலீக்கியூ பாத்திமா பெனாசீர் (புத்தளம்), முஹம்மட் புகாறி முஹம்மட் முகாறக் (ஒட்டமாவடி), சாமித்தம்பி சாந்தகுமார் (மட்டக்களப்பு), எம்.தர்மசாந்தினி (மானிப்பாய்), சொர்ணலிங்கம் தேவலிங்கம் (கோண்டாவில்), கவிதா நடராசலிங்கம் (கனகராயன்குளம்), மொகைதீன் சாம்சயத் நாகிஹா பேகம் (புத்தளம்), ஆதம்பாவா கிஸ்மினி (கல்முனை), ஹாஜா முஹைறதீன் குறைசியா உம்மா (வாழைச்சேனை), முஹகட் நஸ்பார் (வாழைச்சேனை) -

கனகாம்பிகை பரமசோதி (புலோலி), சிவகௌரி உமாபதி (நல்லூர்), தயாளினி ரத்தினவடிவேல் (வண்ணார்பண்ணை), அம்பிகாவதி ஐயன் (அல்வாய்), எம்.ஹரிதா நஷைத் (புத்தளம்), பகீர் முஹைறதீன் பாத்திமா ரிதான (சம்மாந்துறை), எம்.முஹம்மட் நஹீம் (தோப்பூர்), சதாசிவம் வசீதரன் (யாழ்ப்பாணம்), சுவிதா சரவணபவானந்த சத்தியநாதன் (வவுனியா), முஹம்மட் யுனைத் சிஜானா (ரத்மலாயாய) -

கிருபைராசா செந்தூரன் (காரைதீவு), காசி முஹம்மட் முஹம்மட் பகீமா (காத்தான்குடி), அப்துல் லதீப் நஸ்மியா (காத்தான்குடி), ரூபினி முத்துலிங்கம் (கல்முனை), உவியூடைரா பானு (கல்முனை), சுந்தராஜன் கிரிசுதன் (மட்டக்களப்பு), சுந்தரேஸ்வரன் சுதர்சன் (இளவாலை), நிசாயினி பரமசாமி (அளவெட்டி), பாமினி திருநாவுக்கரசு (கிளிநொச்சி) -

### விவசாயம்

நவநாயகமூர்த்தி பிரசன்னா (அக்கரைப்பற்று), தனுஸ்கோடி ஜெயக்குமார் (கிளிநொச்சி), எம்.எஸ். அப்துல்றஹீம் (பொத்துவில்), அந்திரோஸ் ஞானசேகரம் (மன்னார்), கே.மகாலிங்கம் ஹரிராஜ் (அக்கரைப்பற்று), மகாலிங்கம் சுதாகரன் (மட்டக்களப்பு), விநாயகமூர்த்தி சுயாதரம் (மட்டக்களப்பு), விவேகானந்தராஜா புவிதராஜன் (தம்பிலுவில்), ஜெயசுந்தரா யசோதரன் (மட்டக்களப்பு).

### நடனம்

எஸ்.சுகிர்தா (வவுனியா), ஆர்.டொறின் சுதர்சினி (சுன்னாகம்), வை.பிரசன்யா (மட்டக்களப்பு), வி.பத்மா (மட்டக்களப்பு), பி.கமலப்பிரியா (கொழும்பு - 13), கே.கிருஷாந்தினி (கரவெட்டி), பி.கல்யாணி (அரியாலை), ஆர்.சுதாசினி (மீசாலை), எஸ்.திருச்செந்தூரன் (கோப்பாய்), வி.இன்பநிதி (சுன்னாகம்), எஸ்.புஸ்பகுமாரி (மன்னார்), பி.ஜீவாஜினி (யாழ்ப்பாணம்), பி.பாலமயூரா (ஆனைக்கோட்டை).

### சித்திரம்

பொன்னுத்துரை ராஜசிங்கம் (சம்மாந்துறை), இராமச்சந்திரன் சுகந்தன் (வட்டுக்கோட்டை), எம்.எம்.எம்.அக்லாம் (குறிஞ்சிப்பிட்டிய), மாரியப்பன் சுகந்தன் (உருத்திரபுரம்), சின்னத்தம்பி சுபாகரன் (இராமநாதபுரம்), எஸ்.எல். பரீஷா (நுறைச்சோலை), ஆதம்பாவா நினோஷா (நிந்தவூர்), செல்வராசா விஜிதரன் (வட்டுக்கோட்டை), சின்னையா முத்துக்குமாரு (வட்டுக்கோட்டை), சிவபாதசேகரன் கோபாலன் (உரும்பிராய்), இளையவன் தங்கபூரணன் (முள்ளியான்).

### மனைப்பொருளியல்

சித்திரா சின்னத்தம்பி (மட்டக்களப்பு), குணவதி தர்மராஜா (கல்லடி), எம்.எஸ்.சித்திசபீகா (கிண்ணியா), அனிதா சச்சிதானந்தம் (ஆரையம்பதி), எஸ்.எம்.உஸ்வெல்ஷாசானா (மூதூர்), ஆனந்தி நல்லரட்ணம் (ஆரையம்பதி), கஜவள்ளி கிளின்ரஸ் (யாழ்ப்பாணம்), லோகேஸ்வதி தர்மகுலசிங்கம் (வட்டக்கச்சி).

### சங்கீதம்

டிலோசினி ஸ்ரான்ஸ்லோஸ் (யாழ்ப்பாணம்), நிறைஞ்சினி டிஸ்கந்தராஜா (ஒட்டுசுட்டான்), ஜெயகலா புஸ்பராசா (கிரான்), ஜெயசூரியா தர்மலிங்கம் (சாவகச்சேரி), வசந்தமலர் சின்னத்தம்பி (இயக்கச்சி), ரதி கார்த்திகேசு (ஒட்டுசுட்டான்), கவிதா சொர்ணலிங்கம் (பருத்தித்துறை), தட்சாயினி ரகுநாதன் (யாழ்ப்பாணம்), டிஸ்னா சோபியா கிறிஸ்ரியன் றெறீஸ் (மன்னார்).

### ஆங்கிலம்

பிரான்ஸிஸ் ஜெபசெல்வன் (திருகோணமலை) திருவிளங்கம் ஐங்கரன் (ஏழாலை மேற்கு), மோகனா குயின்ரஸ் ஜீவன் (யாழ்ப்பாணம்), நலீபா அப்துல் அசீஸ் (காத்தான்குடி), ஆதம்லெப்பை மொகமட் கியாஸ்தீன் (பாலமுனை), நிருசினி பதிநாதன் (மட்டக்களப்பு), லோகாகினி சிவராஜரட்ணம் (மட்டக்களப்பு), ஜலாடீன் மொகமட் நிஷ்றவ் (கற்பிட்டி) -

சியானா அப்துல் அசீஸ் (நிந்தவூர்), சுப்பிரமணியம் விவேகானந்தராஜா (தம்பிலுவில்), பாத்திமா ரிஷானா புஹாரி (திருகோணமலை), ராஜயோகன் ராஜசேகரம் (ஆனைக்கோட்டை), ஏ.சீ.ரெஜீனா கவிதா (கரவெட்டி), சத்தியவாணி மகாலிங்கம் (கந்தர்மடம்), ஏரம்பமூர்த்தி பகீரதன்(பண்ணாகம்) -

இந்திருகா திருநாவுக்கரசு (சாவகச்சேரி), சாமுவேல் பாத்தீபநாத் (தோணிக்கல்), அசானா மரைக்கார் அமானுலீலா (ஒலுவில்), தர்சினி அழகேஸ்வரராஜா (மட்டக்களப்பு), கௌசீத்கீயசதரன் (இணுவில் தெற்கு), அபர்ணா ஞானேஸ்வரன் (தெல்லிப்பழை), சற்குணசியோன் துவாரகன் (வவுனியா), வேலாயுதம் விக்னேஸ்வரன் (திருகோணமலை), துஷ்யந்தி பாலகுமாரன் (திருகோணமலை), சுப்பிரமணியம் (சுதுமலை தெற்கு), சாரங்கா பாலகிருஷ்ணேஸ்வரன் (கோண்டாவில் மேற்கு), யுடா சுகந்தி அமலதாசன் (யாழ்ப்பாணம்), டொறின் ஆனந்தி சாமிநாதன் (கிளிநொச்சி), புஷ்பராணி சிதரம்பரநாதன் (வாழைச்சேனை), அபூபக்கர் அலிகான் (வாழைச்சேனை), சர்மிளா றிகானா இப்றாலெப்பை (கல்முனை), அப்துல் மஜீத் அப்துல் அஸீத் (சம்மாந்துறை), சிறின்தாஜ் அப்துல் நஜீப்(சம்மாந்துறை), றினோஷா வைத்துல்லா (திருகோணமலை), தனுஷா லக்ஷ்மணன் (அச்செழு), கௌசியா சண்முகநாதன் (துன்னாலை), தமிழினி ஜெயக்குமார் (இணுவில் கிழக்கு) -

யசீரா பரமேஸ்வரநாதன் (கோண்டாவில் மேற்கு), தயாளினி குகராஜன் (கந்தர்மடம்), சிறில் அன்ரன் ஜெயராஜ் (யாழ்ப்பாணம்), எஸ்.ஏ.எஸ்.பஸ்பினா (காத்தான்குடி), பாத்திமா சுனோரா சியாத் (அழுத்காமம்), நிரஞ்சனா ராஜேந்திரம் (வாழைச்சேனை) மலர்ச்செல்வி கோபாலசிங்கம் (புதுக்குடியிருப்பு), யதுகைராஜமதன் (புதுக்குடியிருப்பு), தர்மலிங்கம் மனோகரன் (கிளிநொச்சி), கௌசலை பரராஜசேகரம் (கிளிநொச்சி) -

துஷியந்தினி தட்சாயணி கணேசன் (கிளிநொச்சி), முஹம்மட் சித்திக் சர்மில் (சம்மாந்துறை), எஸ்.ஜெனீட்டா சியாமினி (தெஹிவளை), துரைசிங்கம் விஜயபாஸ்கர் (அக்கரைப்பற்று), மகாலிங்கம் அகல்யா (மட்டக்களப்பு), சோமசுந்தரம் யோகநாதன் (மட்டக்களப்பு), ராஜாஜி வில்வரட்ணம் (திருகோணமலை), இலங்கைநாதன் ஜெயந்தி (சங்கானை), ஜேசுதன் பிரேமதாஸ் (உடையார்கட்டு),

சேகு உசைன் முஹம்மது சீகார் (மன்னார்), ஞானசீலன் வசந்தசீலன்(குருமன்காடு), நதசஜீதா அப்துல் அயும் (மருதமுனை), இப்ராகிம் மகீர் (அக்கரைப்பற்று), நல்லதம்பி ஜெயரட்ணம் (களுவாஞ்சிக்குடி) -

மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் (கிரான்குளம்), விமலினி குகராஜன் (பலாலி றோட், கந்தர்மடம்),ஸ்ரீபத்மப்பிரியா கோபாலகிருஷ்ண ஐயர் (வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்), சுபாங்கினி சீவரட்ணம் (உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்), கோபிநாத் சிவஞானன்(வவுனியா), முஹம்மட் முதாபா அஹமட் சபீர்(காத்தான்குடி), அஹமட் கபீர் முஹம்மட் அஸ்வர் (கண்டக்குழி, புத்தளம்), முஹம்மது அன்சார் முஹம்மது முஸ்தபா (எலவடகம, வன்னல), யாசின் பாபா முஹம்மது சிராஜ்டீன்(சம்மாந்துறை 7), பமீதா முஹம்மது ஸ்மாயில் (மருதமுனை 3), றிஸ்மியா இப்ரா லெப்பே (சம்மாந்துறை 1), பாத்திமா, இர்பானா முஹம்மது பஷீர் (அக்கரைப்பற்று 3), முஹம்மது ஹாசிம் முஹ்ரம் ஜுப்ரி, (பொத்துவில் 4), சறியா முஹம்மது ஹமீம் (சாய்ந்தமருது 12), அப்துல் அஸீஸ் பமீஸ்(அட்டாளைச்சேனை 14), ருஷானா சப்ரீ அப்துல் லத்தீப் (புதிய காத்தான்குடி 3) -

நமசிவாயம் கஜேந்திரப் பிரசாத் (மட்டக்களப்பு), தங்கவேல் தங்கேஸ்குமார், திருகோணமலை, முகம்மது கௌது முகம்மது சாரூக் (நெய்தல் நகர், மூதூர் 1), சமீனா யஸ்மின் அப்துல் மஜீத் (கிண்ணியா), மித்திலா ஆனந்தநாகேஸ்வரன் (உடுவில், சுன்னாகம்), தேன்மொழி கிரிதரன்(ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்), சிவானந்தி கிருஷ்ணசாமி (உருத்திரபுரம், கிளிநொச்சி), வியேந்தினி தங்கராசா (வவுனியா), புனிதமேரி யூடிட் அருளப்பு (தெஹிவளை), தஸ்னிம் முஹம்மது உசைன் (அக்கரைப்பற்று 1), சுலைமான் முஹம்மது சிபான் (அக்கரைப்பற்று 5), கதியத்துள் ஹைறியா முஹம்மது நசீம் (மூதூர் 6), ஹம்சநந்தி கருணாமூர்த்தி (இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்), தர்சினி மகிந்தன் (பலாலி றோட், திருநெல்வேலி), ராதிகா இராசதுரை (முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்), சிதம்பரநாதன் கதிர்முகன் (ஸ்கந்தபுரம், கிளிநொச்சி) கீதா தர்மலிங்கம்(ஸ்கந்தபுரம், கிளிநொச்சி), தேவராணி ஐயம்பிள்ளை(வவுனியா).

### ஆரம்பக் கல்வி

ஜெயவதனி பவளகாந்தன் (கரணவாய் மத்தி), தர்சினி நடராஜா (திருகோணமலை), அப்துல்ஹமீம் சித்திபரீனா (கல்முனை), ஆனந்தன் லோகேஸ்வரன் (வவுனியா வடக்கு), சர்மிளா சுகந்தி வரப்பிரகாசம் (கிளிநொச்சி), சுபாஜினி சுகுமார் (உடுப்பிட்டி), சின்னையா சிவராஜ் (தெகிவளை), முகமட் சபீ அப்துல்லா (அனுராதபுரம்), தியானா பசீர்டீன் (மருதமுனை), கந்தசாமி திலகராஜா (மட்டக்களப்பு) -

கிருஷ்ணபிள்ளை கோகுலநாதன் (தேற்றாவில்), குணபாலசிங்கம் மயூரன் (உசன்), சிறிநிசாந்தி கீர்த்திவாசன் (அக்கரைப்பற்று) -

ஜானாம்மா ஆறுமுகம் (அம்பாறை), முகமட் இப்ராகிம் முகமட் உபாலி (மகாமயவீதி), ஏகாம்பரம் சோதீஸ்வரன் (மட்டக்களப்பு), நிசாந்தினி சந்திரசேகரம் (மட்டக்களப்பு), பரினா பர்வின் டியதீன் (கிண்ணியா), அனிதா கணேசரட்ணம் (உடுவில் கிழக்கு), முகமட் பமிதாசௌவ்பனா (ஒலுவில்), மீரா தௌபிக்நவராஜா (நற்பிட்டிமுனை), மீராதௌபிக்றிபியா (நற்பிட்டிமுனை), நடேசானந்தாதேவி சுந்தரலிங்கம் (தேற்றாத்தீவு), ரதனி செல்லையா (நாயன்மார்கட்டு), பிரேமினி நடராஜா (வடக்கச்சி), திருஷியவதனி சுப்பையா (மகாறம்பைக்குளம், வவுனியா), தயாளினி ரெட்ணசிறி (வவுனியா), பொற்செல்வி பிறைசூடி (புலோலி தெற்கு), பத்மநாதன் பிரதாபன் (கோண்டாவில் மேற்கு), கவிதா சந்திரகுமார் (திருநெல்வேலி தெற்கு), வரகினி பரமநாதந்தசிவம் (கண்டாவளை), இந்துமதி சிவசுப்பிரமணியம் (திருவையாறு), கோமகள் செல்வரட்ணம் (அல்வாய் வடமேற்கு), ஜெயரூபி மயில்வாகனம் (கரவெட்டி), இராஜதுரை வீரவதனன் (சங்கானை) -

தமிழ்ச்செல்வி நடராஜா (நாயன்மார்கட்டு), சுஜிதா பத்மதாஸ் (கரவெட்டி) , சோமசுந்தரம் சிவதாஸ் (வல்வெட்டித்துறை), எல்.ஜெகநாதன் (சங்கானை), நந்தினி முருகேசு (கிளிநொச்சி), கிருஷ்ணகாந்தி சுந்தரலிங்கம் (கிளிநொச்சி), தர்மினி நடராஜா (நெடுந்தீவு கிழக்கு), இந்துவாணி பரமேஸ்வரன் (கந்தர்மடம்).

நவசாந்தினி நடேசமூர்த்தி (இணுவில் கிழக்கு), ஜாநேசராசா ரவீச்சந்திரராசா (நாவற்குழி), உஷாந்தினி கணேஷ் (மானிப்பாய்), ஆன் ஜெயச்சந்திரமணி பிரபாநந்தன் (புலோலி மேற்கு), அருள்நாதன் அன்ரன் ஜோர்ஜ் (மன்னார்), சேவியர் அஜித் றெசான் டல்மா (மன்னார்), யசோதேவி தர்மலிங்கம் (பூநகரி), சுந்தரராஜா சாந்தமூர்த்தி (புளியங்குளம்), அப்துல் அஜீஷ் பசானா (வவுனியா) -

சின்னத்தம்பி தயாபரன் (கோணாவில்), சசிகலா சின்ராஜா (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), சகாதேவன் ஈஸ்வரன் (வண்ணார்பண்ணை), தாரணி கணேசமூர்த்தி (நுணாவில் கிழக்கு), சிறிகாந்தராசா தயாளினி (சங்கானை), கணேசமூர்த்தி உதயசீலன் (அல்வாய் மேற்கு), தேவகி சதானந்தன் (அல்வாய்), விஜயசொரூபி வேலாயுதபிள்ளை (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), சிவகுரு ரெட்ணசோதி (அல்வாய் கிழக்கு).

செபஸ்ரியாம்பிள்ளை அன்ரனிகுறூஸ் (புதுக்குடியிருப்பு), நாகேஸ்வரி வரதமூர்த்தி (மன்னார்), மதனரூபா நடேசபிள்ளை (வவுனியா),

(15ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பாவிப்பிலுள்ள Sony Japan தொலைக் காட்சிப் பெட்டி, வெட்டிய மண்ணெண்ணெய் பரல் தகரம், தேக்க மரம் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு இல.19, செட்டித்தெரு ஒழுங்கை (டினேஸ் பல்பொருள் வாணிபம் அருகில்), நல்லூர். T.P.: 5238 (42549)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச் சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தஞ்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42468)

தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுகாதார முறையில் சுத்தம் செய்து தினமும் வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். 1Kg 190/-. சுத்தம் செய்யப்பட்டது. 280/-. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (42607)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, கெருடாவிலில் 28 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: விஜயன், T.P.: 0776510388, 0777 253140 (சி-41179)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் சுற்று வட்டத்தில் டச்சு வீதி, மருதடிச் சந்தியில் வீடு கட்டக்கூடிய காணி (தென்னை வளமுள்ளது) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு T.P.: 0777 676593, 0776 - 745858 S,கமலநாதன், கந்தசாமி கோயில் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (சி-41253)

## வீடு விற்பனைக்கு

இல. 55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.ராதாகிருஷ்ணன், 77, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (42547)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளிப் பகுதியில் அமைந்திருக்கும் மாடி வீடு வாடகைக்குண்டு. அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 021 - 222 5780, 0777 325545. (42587)

## வாடகைக்குத் தேவை

03 பேர் அடங்கிய ஒரு சிறிய குடும்பத்திற்கு யாழ்.நகரை அல்லது கொக்குவில் அல்லது நல்லூர் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 222 - 5062, 0777 - 161789 (42601)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் இன்று (02-03-2005) புதன்கிழமை மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: ராஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. 222 3529, 222 2867 (42547)

## தவறிவிட்டது

பெறுமதிமிக்க பவுண் (ஆண்களுடையது) கைச்சங்கிலி ஒன்று 26.02.2005 சனிக்கிழமை சங்கானைக்கும் யாழ். ஐந்து சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0777 112074 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தயவுசெய்து தொடர்புகொள்ளவும். உயர்ந்த சன்மானம் வழங்கப்படும். (42549)

அலுவலகப் பை ஒன்று ஆவணங்களுடன் 28.02.2005 அன்று ஆஸ்பத்திரி ஊழியர் செல்லும் வாயில் பகுதிக்கும் ஆஸ்பத்திரி வீதி வைரவர் கோயில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.பிரதேச செயலகத்தில் ஒப்படைத்து உதவவும்.(42600)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தில் 1979 பிறந்த, மக நட்சத்திரம், 5′ 9″ உயரமுள்ள ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற, கணக்கியல் படித்த, மெசின் ஒப்பரேட்டர் மணமகனுக்கு ஆங்கிலம் தெரிந்து சரளமாகப் பேசக்கூடிய மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சீதனம் பேசித் தீர்க்கலாம். ஜாதகக் குறிப்பு, புகைப்படம் என்பவற்றுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: விளம்பர இல.2513 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (42549)

## பெண் விற்பனையாளர் தேவை

நெல்லியடி - நெல்லை சில்க் நிறுவனத்திற்கு உடனடியாக இரண்டு பெண் விற்பனையாளர்கள் தேவை. சுயவிவரங்களுடன் 05.03.2005 சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு நேரடியாகச் சமுகம் தரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

S.அகிலதாஸ்
உரிமையாளர். (சி-41244)
(21-11-18)

## நாய் விற்பனைக்கு

நல்ல இன 3½ வயதுடைய ஆண் அல்ஷேசன் நாய் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: சி.தேவராசா
பந்தல் சேவை
நுணாவில் கிழக்கு,
கல்வயல், சாவகச்சேரி.
(சி-41254)

## சமையலாள் தேவை

கீழைத்தேச, மேலைத்தேச சமையல் தெரிந்தவர்கள் தேவை. வெளிநாட்டில் வேலை செய்த அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
உயர்ந்த ஊதியம் வழங்கப்படும்.
நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:
OLD PARK CHINESE RESTAURANT
(42604) 40, Kandy Rd. Jaffna.

## தேவை

எமது மருந்தகத்துக்கு அனுபவமுள்ள/அனுபவமற்ற பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். தங்கியிருந்து வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை. தங்குமிட வசதியும் உணவும் இலவசமாக வழங்கப்படும்.


தொடர்பு: புதிய குறிஞ்சி மருந்தகம்,
பரமேஸ்வராச் சந்தி,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(41239)

## காணி விற்பனைக்கு

கோப்பாய்ச் சந்தியிலிருந்து வடக்குப் பக்கமாக 100மீற்றர் தூரத்தில் பருத்தித்துறை வீதியில் கிணறு, பாதிக்கப்பட்ட வீடு, மலசலகூடம் மேலும் இரண்டு கடைக் கட்டடத்திற்கான பத்திரிப்பு, வான்பயிர் உட்பட 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: தம்பிஐயா சுதர்சன், கரந்தன், நீர்வேலி. T.P.: (கொழும்பு) 2718473. (சி-41149)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1920 - 10 - 20 | இறப்பு 2004 - 03 - 13

## அமரர் பரமு முத்துச்சாமி

(இளைப்பாறிய ஊழியர், புகையிரதப் பகுதி)

*நேற்றுவரை நீங்கள் வாழ்ந்த மண்ணில்*
*இன்று நீங்கள் இல்லையே...!*
*உங்களின் ஆத்ம ராகங்கள்*
*காற்றோடு கலந்து எங்கள் காதுகளில்*
*ஒலித்துக்கொண்டே இருக்கின்றன!*
*அந்த ஒலியில் எமது வாழ்க்கை என்னும்*
*சக்கரம் ஓடிக்கொண்டே இருக்கும்!*

திருமகள் வீதி,
அரியாலை. (42597)(21-11-18) -குடும்பத்தினர்.

# சுராஜ் தன்தெனிய தொழிற்பயிற்சி நிலையம்

## டோகா, கட்டார் செல்வதற்கான அரியதொரு வாய்ப்பு!

★ தற்போது 500 இற்கும் அதிகமானோர் வேலைசெய்யும் டோகா கட்டாரில் ISO 9000X2004 தராதரச் சான்றிதழுடைய கல் பெள்சிங் நிறுவனத்துக்கு கீழ்க்குறிப்பிட்ட பதவிவெற்றிடங்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குமுகமாக உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மேசன்
2. காப்பென்ரர்
3. பாபென்ரர் (கம்பி கட்டுநர்)

எனவே. உங்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 04.03.2005 ஆம் திகதி வெளிநாட்டு அதிகாரிகளால் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு:
யாழ்ப்பாணத்தில்
0776 413074 – விஜயரூபன்
0776 184 566 – மயூரதன்

யாழ்ப்பாணத்துக்கான தொழில்நுட்பப் பயிற்சிநெறிகள்
04.03.2005 வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.
தொழிற்பயிற்சி நடைபெறும் இடம் பற்றிய விவரம் அறிய
03.03.2005 உதயனில் பிரசுரமாகும் விளம்பரத்தைப் பார்க்கவும்.

சுராஜ் தன்தெனிய
தொழிற்பயிற்சி நிலையம்,
இல.53, ஒராபிபாசா மாவத்தை, மருதானை, கொழும்பு-10.
(42610)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



உதிப்பு 07 - 08 - 1940 | உதிர்வு 31 - 01 - 2005

## திருமதி தர்மன் மணி

முப்பது தினங்கள் சென்றதுவே – நின்
திருமுகத்தை நாம் பார்த்து
எப்பொழுது காண்போமென
திக்கெட்டும் தேடுகின்றோம்.
எங்கிருந்தாலும் எமைத் தேடி – வந்து
எம் துயர் தீராயோ – அம்மா?

வீரபத்திரர் கோயிலடி,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (C/41251)(21-11-18)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## இலட்சுமிப்பிள்ளை சபாபதிப்பிள்ளை

(புலோலி)

புற்றளை வளவு, புலோலி தெற்கைச் சேர்ந்த திருமதி இலட்சுமிப்பிள்ளை சபாபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (01.03.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் மகேஸ்வரி, பரமேஸ்வரி (பிரதேச செயலகம், பருத்தித்துறை), சகுந்தலை (காணிப்பதிவாளர் அலுவலகம், திருகோணமலை), சிவபாக்கியம், கணேந்திரன் (கனடா), கனகலிங்கம் (நெதர்லாந்து), கணேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் வேலும் மயிலும், கதிர்காமநாதன், பாலச்சந்திரன், இராமநாதன், தாரணி, சத்தியசீலா, நிரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் தயானந்தன், சிவகாமி, சோழன், துளசி, விஷ்ணு, அருண்யன், சிவானி, அனுமித்திரா, அபிலாஷ், யோகநாதன், மேனகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் பிரவின்னின் அன்புப் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (02.03.2005) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
ச.கணேந்திரன்

புற்றளை வளவு,
புலோலி தெற்கு
T.P. 021 2263478 (சி-41258)(21-18)

## திருமதி கிருஷ்ணர் பரிமளம்



தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணா பரிமளம் 28.02.2005 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் அவர்களின் அன்பு மனைவியும் சிவப்பிரகாசம் (சமாதான நீதிவான், பிரதிக் கல்விப் பணிப்பாளர் - துணுக்காய் வலயம்), நடராசா, திருமதி தங்கரத்தினம், செல்வி பூமலர், திருமதி அன்னராணி (யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி), திருமதி வேதி அவர்களின் அன்புத் தாயாரும் திருமதி கெங்கேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற தேவதாஸ் (கச்சேரி - மன்னார்), காலஞ்சென்ற திருமதி கேசவராணி (அரியாலை), பாஸ்கரன் (தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்), ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜெயப்பிரகாஸ் (கொழும்பு), சந்திரப்பிரகாஸ் (லண்டன்), சர்மிளா (கொழும்பு), திருமதி றஜனி (ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, கோப்பாய்), தயானந் (யாழ்.பல்கலைக்கழகம், விஞ்ஞானபீடம்), கீர்த்தனன் (யா/கனகரட்ணம் மகாவித்தியாலய மாணவன்), லக்ஷனா, தர்சனா, றமேஸ் (வவுனியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுயாந்தினியின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-03-2005) புதன்கிழமை மு.ப.11மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தொண்டைமானாறு காட்டுப்புலம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி.சிவப்பிரகாசம்
(சமாதான நீதிவான், பிரதிக்கல்விப் பணிப்பாளர், துணுக்காய் வலயம்)

சந்நிதி கோயிலடி,
தொண்டைமானாறு.
(42616)(21-18-26)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## வீறாப்பு அடங்கிய வாய்ச்சொல் வீரர்கள்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மூத்த தலைவர்கள் கடந்த சில நாள்களாகச் செய்து வந்த ஆர்ப்பாட்டங்கள் அடங்கிவிட்டன.

வெளியே ஊடகங்களிலும், மேடைகளிலும் முழுங்கிப் பெரிதாகச் சீறியவர்கள், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் முன்னால் பெட்டிப் பாம்பாய் அடங்கிவிட்டார்கள் என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

கடந்த சில நாள்களாக அரசியல் மேடைகளில் அரங்கேறிய சம்பவங்களை அவதானித்த பொதுமக்கள் - குறிப்பாகத் தமிழ் மக்கள் - இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர்கள், அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகளை இராஜினாமாச் செய்வதற்கான நாடகத்தை ஏன் ஆரம்பித்தார்கள், பின்னர் ஏன் அதைக் கைவிட்டார்கள், அதன் மூலம் என்ன சாதித்தார்கள்? - என்றெல்லாம் தெரியாமல் குழம்பிப்போய் நிற்கின்றார்கள்.

வெளியே வீறாப்புப் பேசிய தலைவர்கள் நாட்டின் தலைவியின் முன்னால் வீரம் அடங்கி, 'வாய்ச்சொல் பேச்சுமின்றி, சொன்னதைக் கேட்கும் தலையாட்டிப் பொம்மைகளானார்கள் - பெருமாள் கோயில் மாடுகள் போலானார்கள் எனச் சொல்வார்களே அவ்வாறு ஆனார்கள் - என்று தெரிகின்றது.

இ.தொ.காவினர் பேசமுற்பட்ட விடயங்கள் எல்லாவற்றுக்கும் முகத்தில் அடித்தது போல - எடுத்தெறிந்து - அதிரடிப் பதில் தந்து, 'அன்பாய்' அனுப்பி வைத்திருக்கின்றார் ஜனாதிபதி.

அவரைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற இ.தொ.காவின் பதினொரு பேர் கொண்ட குழுவில் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், எஸ்.ஜெகதீஸ்வரன், முருகன் சச்சிதானந்தன், வடி வேல் சுரேஷ் போன்ற எம்.பிக்கள் சுவாமி ஐயப்பனின் மகரஜோதி தரிசன யாத்திரைக்கு - மலைக்கு போவதற்கு கறுப்புச் சட்டை பூண்டு ஐயப்பன் மாலை அணிந்திருந்தனர்.

வழமையாக ஐயப்பனுக்கு நாற்பத்தைந்து நாள்கள் மாலை அணிந்தவர்கள் அக்காலத்தில் 'சாமியே சரணம் ஐயப்பா' என்று கோஷமிடுவது வழக்கம். 'ஆறுமுகம் அன்ட் கோ'வினர் அப்படி முழங்கினார்களோ தெரியவில்லை. ஆனால், ஜனாதிபதி குமாரதுங்கவைச் சந்தித்த சமயம் 'சாமியே சரணம் சந்திரிகா' என்ற பாணியில் நடந்துகொண்டனர் என்பது மட்டும் உண்மை எனத் தெரிகின்றது.

இ.தொ.காவினர் மலையகத்தில் பொலீஸாரின் செயற்பாடு குறித்து பிரஸ்தாபித்த போது, லிந்துலை - தலவாக்கலை நகரசபையின் சிறுவர் பூங்காவை உடைத்தெறிந்த - அரச சொத்துகளை நாசம் செய்த - ஆள்களுக்கு எதிராகவும் தான் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது எனச் சூடாகப் பதில் தந்து, தன்னுடைய உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தினாராம் ஜனாதிபதி சந்திரிகா.

தனது அரசில், தன்னுடன் சேர்ந்து இயங்க விரும்புபவர்கள் அரசில் இருக்கலாம். ஏனையோர் - சேர்ந்து இயங்க விரும்பாதோர் - அரசை விட்டு வெளியேறலாம் என்ற தனது நிலைப்பாட்டை கடந்த வாரங்களில் பகிரங்கமாக அறிவித்திருந்தார் ஜனாதிபதி குமாரதுங்க.

அவரது இந்த அறிவிப்பு, அரசுக்கூட்டமைப்புக்குள் இருந்துகொண்டு பெரும் கோணங்கித்தனம் பண்ணும் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் தலைக்கு விழுந்த தொப்பியாகவே பலரும் கருதிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், அரசுக்குள் இருந்துகொண்டு, ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அது குறித்துத் தம்மோடு முதலில் நேரில் பேசி, சுமுகமாகத் தீர்ப்பதை விடுத்து, வெளியில் - பொதுமேடைகளில் - பகிரங்கமாக - வீறாப்புப் பேசி 'அரசைவிட்டு வெளியேறுவோம்' என நாடகம் ஆடுபவர்களுக்கும் தமது அறிவிப்பு பொருந்தும் என்பதை -

நேற்றுமுன்தினம் இ.தொ.காவினர் தம்மை நேரில் சந்தித்துப் பேசிய சமயம், தமது பட்டவர்த்தனமான பதில்கள் மூலமும், செயற்பாடுகள் மூலமும் நாசூக்காக உணர்த்தினார் - வெளிப்படுத்தினார் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்பதை அறியமுடிகிறது.

தமது மக்களுக்குரியதை - நியாயத்தை - பெறுவதற்காகப் பேச்சு நடத்துவதும், பேரம் பேசுவதும் தவறில்லை. ஆனால், அது சரிசமமாய் - சமத்துவ நிலைப்பாட்டில் இருந்து - மேற்கொள்ளப்படவேண்டும். சலுகை பெறுவதற்கு - யாசகம் வேண்டுவது போல - இரப்பது மாதிரி - பேச்சு நடத்தச் செல்லுவதும், பேசுவதும் இனத்துக்கு கௌரவம் அல்ல; இனமானத்துக்கு அழகல்ல.

'உறுதியோடு அடித்துப் பேசுவோம். சரிவராவிட்டால் பிடுங்கி எடுப்போம்!' - என்ற தொனியை பேச்சு மேசையிலும் வெளிப்படுத்தத்தான் வேண்டும். ஓரினத்துக்கு அரசியல் ரீதியாகத் தலைமை வகிக்கும் போது இந்த உறுதிப்பாடு அவசியம்.

உரியதைப் பெறுவது உரிமை. ஆனால் அதை பிச்சையாய் - சலுகையாய் - பெறவேண்டியதல்ல என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

# சந்திகளில் நின்று பெண்களுக்குத் தொல்லை கொடுப்போருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

## வவுனியா நீதிபதி பொலீஸ் அதிகாரிக்குப் பணிப்பு

வவுனியா,மார்ச்2

வவுனியாவில் குறிப்பிட்ட முக்கிய சந்திகளில் கூடிநின்று, பெண்கள் - பாடசாலை மாணவிகளைக் கேலிசெய்வதிலும், வீணான தொல்லை கொடுக்கும் செயல்களில் ஈடுபடும் இளைஞர்களுக்கும் எதிராகத் தண்டனைச் சட்டக் கோவைக்கு அமைய நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா தலைமையக பொலீஸ் இன்ஸ்பெக்டருக்கு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

வீதிகளில் காரணமின்றி வெறுமனே கூடிநின்று இயல்பு நிலைமைக்கும், அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் குறிப்பிட்ட சந்திகளில் இளைஞர்கள் செயற்படுவது தொடர்பாக நீதிமன்றத்துக்குப் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என வவுனியா மாவட்ட நீதிபதி பொலீஸாருக்கு வழங்கியுள்ள அறிவுறுத்தலில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அண்மையில் வவுனியா, கந்தசாமி கோயில் வீதியில் இரு இளைஞர் குழுக்களிடையே இடம்பெற்ற மோதலின்போது கத்திகள், பொல்லுகள் பயன்படுத்தித் தாக்குதல்கள் நடத்தப்பட்டதனால் இளைஞர்கள் காயங்களுக்கு உள்ளாகினர் என்றும் -

இந்தச் சம்பவத்தையடுத்து நகரப்புற பாடசாலை மாணவர்கள் 6 பேர் உட்பட 8 பேர் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர் என்றும் -

இவர்களில் 6 பேர் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருப்பதையும், அவர்களின் பல்கலைக்கழகக் கல்வியில் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதையும் கருத்திற்கொண்டு அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டதாகவும் - நீதிபதி தமது அறிவுறுத்தலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சமபவத்தைத் தொடர்ந்து பண்டாரிகுளம் பாடசாலை மாணவர் குழுவிற்கும், இளைஞர் குழுவிற்கும் இடையில் இடம்பெற்ற மோதல ஒன்றில் இளைஞர்கள் பாரதூரமான காயங்களுக்கு இலக்காகியுள்ளதாகவும் -

காயமடைந்தவர்கள் ஆபத்தான நிலையில் அனுராதபுரம், கொழும்பு வைத்திய சாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்றும் - தெரிவித்துள்ள நீதிபதி, 4 பாடசாலை மாணவர்கள் உட்பட 6 பேர் இச்சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் -

கோஷ்டிகளுக்கிடையிலான வழி மோதல்கள் தொடர்ந்து இடம்பெறுவதையே இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுவதாகவும் -

இவ்வகையான வீதிச் சண்டைகளையும் குழு மோதல்களையும் மேலும் அனுமதிக்க முடியாது என்பதனால் சந்தேக நபர்களின் பிணை மறுக்கப்பட்டு எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் - நீதிவான் தெரிவித்துள்ளார். (எ-164)

# அஞ்சல் அடையாள அட்டை பெற்றுக்கொள்ள மூன்று வாரத்துக்கு முன்னரே விண்ணப்பியுங்கள்

## பிராந்திய அஞ்சல் திணைக்கள அதிகாரி அறிவுறுத்து

அச்சுவேலி,மார்ச்2

அஞ்சல் திணைக்கள அடையாள அட்டையை பெறவிரும்பும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபர்கள் மூலம் பிரதேச அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக விண்ணப்பங்களை மூன்று வாரங்களுக்கு முன்னரே சமர்ப்பித்து உரிய முறையில் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம் என பிராந்திய அஞ்சல் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் சம்பந்தர் சிவராஜசிங்கம் அறிவித்துள்ளார்.

கோட்டமட்ட, மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் மற்றும் உதைபந்தாட்ட, கரபந்தாட்ட, வலைப்பந்தாட்ட, உடற்பயிற்சி போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்களின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு அஞ்சல் திணைக்கள அடையாள அட்டைகள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

போட்டிகள் நெருங்கி வரும் காலப் பகுதியில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கப்படும் சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில், மாணவர்களின் விண்ணப்பங்களை உரிய முறையில் பிரதேச தபால் அலுவலகங்கள் ஊடாக முன்கூட்டியே சமர்ப்பித்து நெருக்கடியை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் -

உரிய காலப் பகுதியில் சமர்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கான அடையாள அட்டைகள் விண்ணப்பித்த தபால் அதிபர்கள் ஊடாக மாணவர்களுக்கு கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் -

அடையாள அட்டைக்காக பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு அலைய வேண்டிய அவசியம் இல்லை என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

# பயிலுநர் அதிகார சபையின் ஏற்பாட்டில் தகவல் தொடர்பாடல் கற்கை நெறி

## பயில விரும்புபவர்கள் நாளை சமுகமளிக்க வேண்டும்

யாழ்ப்பாணம்,மார்ச்2

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு வருட காலம் கொண்ட முழுநேரப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்போர் ஜீ.சி.ஈ. (சாதாரண) தரத்தில் கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருப்பதோடு இரு தடவைகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் விண்ணப்ப முடிவு திகதியன்று 16-25 வயதுக்குட்பட்டவராகவும் இருக்கவேண்டும்.

தகுதி உடையவர்களை, முழுபெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமை என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் நாளை வியாழக்கிழமையன்று கணனிப் பயிற்சி நிலையம், பாணாவெட்டி றோட், தொல்புரம் மேற்கு, சுழிபுரம் என்ற முகவரிக்கு நேரில் சமுகமளிக்குமாறு மாகாணப் பணிப்பாளர் பி.ராமநாதன் கேட்டுள்ளார். (3-202)

# சிறுதானிய விதைகளைப் பெற அலைந்து திரியும் விவசாயிகள்

வலி.தெற்கு,மார்ச்2

நெல் அறுவடையின் பின்னான சிறு தானியப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான தானிய விதைகள் கிடைக்காமையால் விவசாயிகள் தனியார் விற்பனை நிலையங்களைத் தேடி அலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென் மேற்குப் பிரதேசங்களில் உள்ள வயல் நிலங்களில் நெல் அறுவடைக்குப் பின்னர் நிலத்தில் காணப்படும் ஈரலிப்புத்தன்மையைப் பயன்படுத்தி சிறுதானியப் பயிர்ச் செய்கையை இவர்களால் மேற்கொள்ள முடியாதிருப்பதாகத் தெரியவருகின்றது.

போதிய விதை தானியங்கள் கிடைக்காமையால் பல விவசாயிகள் இம்முறை சிறுதானியப்பயிர் செய்கையை மேற்கொள்ளவில்லை.

போதிய விதை தானியங்கள் கையிருப்பில் இல்லாமையால் தனியார் கடைகளில் கூடுதலான விலை கொடுத்துத் தானியங்களைப் பெறவேண்யுள்ளது.

சணல், எள், கௌபி, பருப்பு, பயறு போன்ற விதை தானியங்கள் கிடைப்பதாக இல்லை. சில தனியார் விற்பனை நிலையங்களில் ஒரு கிலோ சணல் 80 ரூபாவாகவும், எள் 150 ரூபாவாகவும், கௌபி 70 ரூபாவாகவும் பயறு 80 ரூபாவாகவும் அதிகரித்த விலை கொடுத்து வாங்க வேண்யுள்ளது.

விதை தானியங்களைத் தேடி பல விவசாயிகள் தனியார் விற்பனை நிலையங்களுக்கும் மருந்துக் கடைகளுக்கும் என அலைந்து திரிவதைக் காணமுடிகின்றது. விதை தானியங்களைக் கையிருப்பில் வைத்துள்ள ஒரு சில விவசாயிகள் அவற்றை வயல்களில் பயிரிட்டுள்ளனர். (எ-152)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,மார்ச்2

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினர் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் வாரந்தோறும் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்வை நடத்தி வருகின்றனர்.

யாழ்.மாவட்ட இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றுவரும் இத்தொடரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் இளைப்பாறிய ஆசிரியை திருமதி அன்னபூரணி சிவசக்திவேல் 'உலகம் ஒரு நாடகமேடை' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (3-203)

### நாளை

மாசி 19
வியாழக்கிழமை
03.03.2005
திதி : ஸப்தமி
முற்பகல் 9.04 வரை
நட்சத்திரம் : அனுஷம்
பிற்பகல் 3.44 வரை
சுபநேரம் : 7.56 - 9.26
ராகுகாலம் : 1.56 - 3.26
(யாவும் பழைய நேரப்படி)

# கைத்தொழில் முயற்சியாளரை பதிவதற்கு அமைச்சு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்2

இலங்கை முழுவதிலுமுள்ள கைத்தொழில் முயற்சியாளர்களைப் பதிவு செய்வதற்கு சிறிய மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த வகையில் யாழ்.மாவட்டத்திலுள்ள கைத்தொழில் முயற்சியாளர்களைப் பதிவு செய்வதற்காக அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

கைத்தொழிலாளர்கள் அனைவரும் தத்தமது பிரதேச செயலகங்களில் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் - கைத்தொழில் அபிவிருத்தி சபையின் வடமாகாணப் பிரதிப் பணிப்பாளர் தெ.பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (எ-202)

### உதயவாக்கு

சிறு குழந்தைகளின் வேடிக்கைப் பேச்சைக் கேட்டு நாம் சிரிக்கின்றோம். ஆயினும் அந்தப் பேச்சிலே எத்தனையோ ஆழ்ந்த கருத்துகள் அடங்கியுள்ளன.

-காண்டேகர்

# சங்கக்கடையில் நிவாரணம் கொடுப்பதுபோல பட்டங்களை சுலபமாகப் பெறக்கூடிய அவலம்

இன்று மிகவும் மலிவான விலையில் எமது சமூகத்தில் வாங்கக்கூடிய பொருளாக இருப்பது பட்டங்களே ஆகும். "பட்டங்களைப் பெறுபவருக்குத் தகுதிப்பாடு இருக்க வேண்டியது போலப் பட்டங்களைக் கொடுப்பவர்களுக்கும் மிகுதியான தகுதிப்பாடு இருக்கவேண்டியது அவசியமாகும்" என்பது பண்டிதமணி கணபதிபபிள்ளை அவர்களின் கூற்றாகும். 'சிலர் மீது பெரியவர் என்ற பட்டம் திணிக்கப்படுகிறது' என்ற ஆங்கில இலக்கிய மேதை ஷேக்ஸ்பியரின் கருத்து நமது நாட்டில் மிகவேகமாகச் செயற்பட்டு வருகின்றது. சாதாரண பொதுமக்கள்தான் மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கின்றார்கள். தப்புத்தாளம் போடுகிறவர்களின் ஆட்டத்திற்கு எல்லாம் ஆடப்பார்க்கிறார்கள். குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக் குழியில் விழப் போகின்றார்கள்.

அரசால் வழங்கப்படும் சமாதான நீதிவான் பதவிகள் ஒரு காலத்தில் மிகப் பெறுமதியுடைய பதவிகளாக இருந்தன. நல்லறிவு உடையவர்கள், தனிமனித வாழ்வில் ஒழுக்க சீலர்களாகவும், சமுதாய உணர்வுடையவர்களாகவும், அறநெறி பிசகாதவர்களாகவும் வாழ்பவர்களே இப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டார்கள். இப்பதவிகள் அரசியல் மயப்படுத்தப்பட ஆரம்பித்ததும் மேற்கூறிய அடிப்படைத் தகுதிக்ள் இல்லாத பலரும் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டார்கள். குடும்பத்திலே, கிராமங்களிலே, பொது நிறுவனங்களிலே சமாதான வாழ்வைப் பேணாதவர்கள் பலரும் சமாதான நீதிவான்களாக ஆகிவிட்டார்கள். பஞ்சமா பாதகங்கள் அனைத்தையும் கூசாமல் செய்பவர்களில் சிலரும் சமாதான நீதிவான் பட்டம் பெற்றிருக்கிறார்கள்.

ஒருவர் ஒரு துறையிலே எவ்வளவு காலம் பற்றுறுதியோடு செயற்படுகின்றார் என்பதைப் பொறுத்தே அத்துறை சார்ந்த கௌரவப் பட்டங்கள் வழங்கப்படுவதுண்டு. ஆனால், இன்று சிலருக்கு அவர்கள் சார்ந்த துறைகளில் காலடி எடுத்துவைப்பதற்கு முன்பே கௌரவப்பட்டங்கள் வழங்கப்படுகின்றன. இதனால், சிலர் தன்னையும் அறியாமல் தனது நிலையையும் தெரியாமல் தவிக்கிறர்கள். தவறான நெறியில் நடப்பவர்களைவிட வழிப்படுத்துபவர்கள்தான் மிகப் பெரிய துரோகத்தினைச் செய்கிறார்கள்.




எங்களுடைய இந்து சமயத்திலே குரு என்பவர் மிகவும் முக்கியமான இடத்தினைப் பெறுகின்றார். "குருவருளின்றித் திருவருள் இல்லை" என்பதே சைவ சித்தாந்தக் கோட்பாடு ஆகும். வித்தியாகுரு, பிரதிஷ்டா குரு, ஞான குரு என மூன்று வகையான குருவைப் பற்றி எமது சமயம் எடுத்துக்கூறுகின்றது. "ஆசிரியனைத் தெய்வம் எனப் போற்று" (ஆச்சார்ய தேவோ பவ) என்பது இந்துப் பண்பாடு ஆகும். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி ஆகும். ஆசிரியர் சாந்தமாக, சாதுவாக, அளந்து பேசுபவராக, காம குரோதங்களில் இருந்து விடுபட்டவராக இருத்தல்வேண்டும் என்றே இந்து சமயத் திருநூல்கள் எல்லாம் கூறுகின்றன.

ஆலயக் கிரியைகளைச் சிறப்பாகச் செய்து வழிபட்டு வரும் அடியவர்களிடம் ஆத்மீக உணர்வு ஏற்படுவதற்கு வழிகாட்டுபவர் பிரதிஷ்டாகுரு என அழைக்கப்படுகின்றார். பிரதிஷ்டா குருவிற்குரிய இலக்கணங்களைக் காரணாகமம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆச்சார்ய அபிஷேகம் அனைத்தும் பெற்றவராய் ஆகமக்கிரியா வல்லுநராய், குரு, சிவாக்கினி, கடவுள் ஆகிய மூன்றிலும் நீங்காத பற்றுடையவராய், புலன்களை வென்றவராய் இருப்பவரே சிவாச்சாரியராக இருக்கத் தகுதி உடையவர் என ஆகமம் குறிப்பிடுகின்றது. அர்ச்சகருடைய பிரபாவத்தினால்தான் சிலை சிவனாகத் தெரிகின்றது. (அர்ச்ச கஸ்ய பிரபாவேன சிவா பவதி சங்கர) என வடமொழி சுலோகம் கூறுகின்றது.

அஞ்ஞானமாகிய இருளினால் ஒளி மழுங்கிய கண்களை ஞானம் என்கின்ற துலக்கு மாற்றல் வாய்ந்த கருவியால் திறக்கவல்ல திறமையாளன் எவனோ அவனே ஞான குரு என உபநிடதங்கள் கூறுகின்றன. மணிவாகப் பெருமானை இறைவன் திருப்பெருந்துறையிலே குருந்த மர நிழலிலே குருவடிவம் தாங்கி வந்தே ஆட்கொண்டார். இராமகிருஷ்ண பரமஹம்சரின் குருவருளினால்தான் சுவாமி விவேகானந்தர் வீரத் துறவியாகி உலகமெல்லாம் சென்று இந்து சமயத்தின் பெருமையைப்பரப்பினார். யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகளின் குருவருளைப்பெற்று அவரின் ஞானவாரிசாக மாற்றம் பெற்றார்.

அண்மையில் கனடா வேதாந்த ஞான மன்றத்தால் யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்பெற்ற ஒரு நாள் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள் அனைவருக்கும் "அறநெறிக்குரு" என்ற பட்டம் அளிக்கப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான நற்சான்றிதழ்ப் பத்திரம் என மேலே போடப்பட்டுள்ளது. அறநெறிப் பாடசாலை வகுப்பு எதுவும் நடத்தாதவர்கள், அறநெறிப் பாடசாலையில் ஆசிரியர்களாக என்றும் கடமையாற்றாதவர்கள் பலருக்கும் இச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன. நான்கு மணித்தியாலயக் கருத்தரங்கில் பங்குபற்றியவர்களுக்கு நன்றிச்சான்றிதழ் வழங்கியதோடு, பட்டம் வழங்கப்பட்டுள்ளது. போலிச்சான்றிதழ்கள் வழங்கும் இந்தக் குறுக்குவழி நடைமுறைகள் மெதுவாக தமிழழ மண்ணில் புக ஆரம்பித்துவிட்டது. நம்மவர்களும் சங்கக் கடையில் நிவாரணச் சாமான் வாங்குவது போல சுலபமாகப் பட்டங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்ற மனநிலையில் இங்கு கூடுகின்றார்கள். சமய வியாபாரிகள் இணைந்து நடத்தும் இத்தகைய செயற்பாடுகளினால் நமது சமயம் பலருடைய பல்லுக்கும் பதமாகும் சூழ்நிலை ஏற்பட்டு வருகின்றது.

இவ்வாறு சமாதான நீதிவான் பட்டத்தில் இருந்து அறநெறிக்குருப்பட்டம் வரை பல போலிப் பட்டங்கள் தமிழீழ மண்ணில் நச்சுக் காற்றுப் போல உட்புக ஆரம்பித்துவிட்டன. இத்தகைய பட்டங்கள் ஓர் ஆரோக்கியமற்ற, நெறியற்ற சமூகம் உருவாவதற்கு வழிவகுக்கும். கசிப்பு வியாபாரம் செய்பவனில் இருந்து கள்ளத்தனமாக மின்சாரம் எடுப்பவன்வரை செய்கிறவர்களின் செயற்பாடுகள் அனைத்தும் நியாயப்படுத்தப்பட்டுவிடும். தமிழீழமண்ணில் உருவாகிவரும் 'புற்றுநோய் போன்ற இத்தவறான செய்கைகளுக்கு ஆரம்பத்திலேயே முற்றும்புள்ளி வைக்காவிட்டால் அநியாயத்தையும் அதர்மத்தையும் வளர்த்து விடுகின்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கிய பழி நமது சமய, சமூகத்தலைவர்கள் அனைவருக்கும் ஏற்படும். மலர்கின்ற தமிழர் தாயகத்தில் இருக்கின்ற நோய்க்கிருமிகளை அகற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு தமிழ் மக்களின் விடிவுக்காகப் பணியாற்றும் அனைவரினதும் கடமையாகும்.

**- விறன் மிண்டர்.**

## கல்விச்சாலைக் காட்சிகள்



மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவில் புதிய மாணவர்களையும் விருந்தினர்களையும் வித்தியாலய மாணவிகள் வரவேற்று நடனமாடுவதைப் படத்தில் காணலாம்.

*(படம் : தென்மராட்சிச் செய்தியாளர்)*



மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.சு.சுந்தரசிவம் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட மாணவன் செல்வன் கி.தனீசனுக்கு வெற்றிக் கேடயத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் திருமதி ர.சோதிலிங்கமும் காணப்படுகிறார்.

*(படம் : தொல்புரம் செய்தியாளர்)*



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (எ)



அரியாலை ஸ்ரீ கலைமகள் முன்பள்ளி நிலையத்தின் விளையாட்டுப் போட்டியை யாழ். தேசிய சேமிப்பு வங்கிக் கிளையின் உதவி முகாமையாளர் பி.வரதராஜா மங்கள விளக்கேற்றி வைப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் கிராம சேவகர் எஸ்.நாகேந்திரம் மற்றும் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.

# வழுக்கையாறு புனரமைப்பின் ஆரம்பக் கட்ட வேலைகள்

## அளவீட்டுப் பணியில் அதிகாரிகள்

வலி.தெற்கு,மார்ச்2

நியாப் திட்டம் இரண்டின் கீழ் இவ்வருடம் புனரமைப்புச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ள வழுக்கையாறு புனரமைப்புக்கான ஆரம்பக் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நீர்ப்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் வழுக்கையாறு புனரமைப்புக்குத் தேவையான அளவீடு களை மேற்கொள்ளும் பணிகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

ஆரம்ப கட்ட நடவடிக்கைகளாக அராலிப் பாலம் தொடக்கம் புனரமைக்கப்பட வேண்டிய குளங்களின் விஸ்தீரணம், வாய்க்கால்களின் அளவுகள் என்பனவற்றின் அளவீடுகளை மேற்கொள்வதில் கடந்த சிலதினங்களாக நீர்ப்பாசனத் திணைக்களம், நியாப் திட்ட அதிகாரிகள், பொறியியலாளர்கள் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க. முதலியார் வீட்டில் இயங்கிவரும் சம்மேளன அலுவலகத்தை உத்தியோக நிலையமாகக் கொண்டு செயற்பட்டுவரும் இவர்களது பணி இதுவரை கட்டுடை ஐந்துகண் மதவுவரை நடைபெற்றுள்ளது. தொடர்ந்து தமது பணிகளை இவர்கள் மேற்கொண்டு செய்யவுள்ளனர். (எ-152)

### பயணிகள் சிரமம்

பண்டத்தரிப்பு - மாதகல் பிரதான வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதுடன் இவ்வீதியில் உள்ள மதகு ஒன்றும் சேதமடைந்துள்ளதால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்யமுடியாது பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகினறனர். இவ்வீதியையும் மேற்படி மதகையும் புனரமைத்துத் தருமாறு மாதகல் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (203-135)

### தம்பனை வீதி பலத்த சேதம்

வலி.தெற்கு,மார்ச்2

நவாலி கொத்துக்கட்டிப் பிள்ளையார் வீதியில் இருந்து தம்பனை மாரியம்மன் வீதிவரை செல்லும் பாதை நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாது உள்ளமையால் அவ்வீதியால் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.(எ-203-152)

# மனிப்பாய் சுகாதார பணிமனை புதிய கட்டடத்தில் திறந்துவைப்பு

வலி.தென்மேற்கு,மார்ச்2

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள அரச காணியில் புதிதாக நிறுவப்பட்ட மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நேற்றுமுன்தினம் உத்தியோக பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பதில் பொறுப்பதிகாரி க.வருணநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை பணிமனையை சம்பிரதாயமுறைப்படி நாடாவை வெட்டி திறந்துவைத்தார்.

இதனையடுத்து சங்கானை அரசினர் வைத்தியசாலையில் புதிதாக நிறுவப்பட்ட தண்ணீர் தாங்கியையும் பணிப்பாளர் திறந்துவைத்தார். (3-135)

# நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போவதா?

# சுனாமி பாதித்த மக்களின் கேள்வி இது

✦ அரசின் 100 மீற்றர் உத்தரவு சர்ச்சையில்...

✦ 60 நாள்களாகியும் தீராத 100 மீற்றர் பிரச்சினை.

✦ மாற்று ஏற்பாடு இருப்பின் எங்கு போகவும் தயார்!

✦ நிரந்தரமாக ஒரு வீடு கூடக் கட்டப்படவில்லை.

✦ அகதி முகாம் வாழ்க்கை தொடர் கதையாகிறது.

✦ 10 பிரதிநிதிகள் இருந்தும் ஆனது ஒன்றுமில்லை.

ஆழிப்பேரலை தன் கைவரிசையைக் காட்டி அறுபது நாள்களாகிறது. எனினும், பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கான நிரந்தர மீள்குடியேற்றம் பற்றி இன்னும் அறுதியான நிரந்தரத் திட்டமொன்று இல்லையென்று தெரிகிறது. அதற்குப் பிரதான காரணமாக அரசின் 100 மீற்றர், 200 மீற்றர் பிரச்சினை முன்வைக்கப்படுகிறது.

அரசு அறிவித்த 100 மீற்றர் பரப்பு விவகாரம் கடந்த வாரம் ஆர்ப்பாட்டம், போராட்டம் என்ற அமர்க்களத்தின் மத்தியில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக முஸ்லிம்களுககு எதிராக அரசு மேற்கொள்ளும் ஒரு சதித் திட்டம் என்று எதிர்க்கட்சி அரசியலாளர்கள் உரக்கக்குரல் கொடுத்து வருகின்றனர்.

சர்வதேச ரீதியிலே ஏற்றுக்கொள்ளப்பட்டதுதான் இந்த 100 மீற்றர் பரப்பு விவகாரம். இது ஒன்றும் புதிய விடயமல்ல. மக்களே ஏற்றுக்கொள்ளும்போது ஏன் இந்த எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் சுனாமியை அரசியலாக்குகின்றனர் என ஆளுங்கட்சிக்கு ஆதரவான அரசியலாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர். அதற்குள்ளும் பல சிறுபான்மையின அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும் கழுவிய மீனுக்குள் நழுவிய மீனாகப் பிடிகொடுக்காமல் அரசியல் நடத்திவருகின்றனர்.

# உரிய திட்டங்களை விரைவில் வகுத்து நடைமுறைப்படுத்துவது அனைவரதும் கடமை

மக்களின் பாதுகாப்புக் கருதியே 100 மீற்றர் பரப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இன்னுமொரு சுனாமி வந்து மக்களைப் பலியெடுக்கின்றபோது அரசை யாரும் குற்றங்காணக்கூடாது என நியாயமும் கூறிவருகின்றனர்.

சரி, இந்த நியாயத்தை 100 வீதம் ஏற்றுக் கொள்கிறோம். அப்படியெனின், 100 மீற்றர் பரப்பளவிற்குள் வாழ்ந்த 62ஆயிரத்து 949 குடும்பங்களைச் சேர்ந்த 3 லட்சத்து 46 ஆயிரத்து 632 பேரை மீளக்குடியேற்ற அரசு எடுத்த நடவடிக்கை அல்லது மாற்று ஏற்பாடு என்ன? என்று பிரஸ்தாப மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போக முடியாது! இம்முறை 9.0 றிச்டர் அளவில் தாக்கிய சுனாமி 200 மீற்றரை முற்றாக அழித்தது.

மற்றுமொரு சுனாமி 10.0 றிச்டர் அளவில் வந்தால் 500 மீற்றரை அழிக்கும் அப்படியெனின், அனைவரும் மத்திய மலைநாட்டுப் பகுதியில் குடியேறுவதா? அல்லது அதுதான் சாத்தியப்படுமா?

### பாடசாலைகளை மீள இயக்குதல்

200 மீற்றர் எல்லையிலுள்ள வடக்கு - கிழக்கின் 60 பாடசாலைகளை அந்த இடத்திலேயே அமைக்க வேண்டுமென தற்போது குரல் எழுப்பப்பட்டு வருகின்றது. பாடசாலை என்பது அந்தந்தப் பிரதேசத்திற்குரியதே தவிர அப்பிராந்தியத்திற்கு அல்ல என்பதை உணர வேண்டும்.

பாடசாலை இடைவிலகல் (Dropout), பாடசாலைக் கல்வியைப் பெறாதோர் என்ற பகுதி எதிர்காலத்தில் வரக்கூடாது என்பதற்காக கட்டாயக் கல்விச் சட்டம், நவோதயப் பாடசாலை என்று பல திட்டங்கள் கல்வி உலகிலே முன்வைக்கப்பட்டன. அதாவது, பிரதேசத்திற்குத்தான் பாடசாலையே தவிர அந்தப் பிராந்தியத்திற்கு அல்ல என்று கல்வியியலாளர்கள் கூறுகின்றனர்.

சாய்ந்தமருது ஆஸ்பத்திரி மேல்மாடியில் றியாழல்ஜன்னா பாடசாலையை நடத்த முஸ்தீபுகள் மேற்கொள்ளப்பட்டபோது பல எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. அதேவேளை, அங்குள்ள மழ்ஹருஸ்ஷம்ஸ் மகா வித்தியாலயத்தை சாய்ந்தமருது தாமரை மைதானத்தில் அமைக்குமாறு அப்பாடசாலை அபிவிருத்திச் சபை போர்க்கொடி தூக்கியுள்ளது.

இப்பாடசாலை 100 மீற்றர் பரப்பிற்குள் வருவதனால் இச்சபையின் கோரிக்கை நியாயமானது என்று பலரும் பேசுகின்றனர். இன்னும் சிலர் அங்கிருந்து அப்பாடசாலை எழும்பினால் அப்பிரதேசம் அடிபட்டுப் போகுமெனக் கருதுகின்றனர்.

இந்நிலையில், பேராசிரியர் கல்விமான் வித்தகன் விபுலானந்த அடிகளார் பிறந்த காரைதீவு மண்ணில் பழம்பெரும் உயர்தரக் கல்லூரி விபுலானந்தர் நாமத்துடன் இயங்கி வந்தது. அது சுனாமியில் சிக்கிச் சின்னாபின்னமாகியுள்ளது.



அக்கல்லூரியை ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கப்பால் மற்றொரு பிரதேசத்திற்குக் கொண்டுசெல்லச் சிலர் முயற்சிக்கின்றனர். பலர் அப்பாடசாலைப் பகுதியைவிட்டு வெளியே செல்லக்கூடாது. ஒன்றில் ஊரின் மத்தியிலுள்ள குளவெளிப் பகுதியில் அமையட்டும் இல்லாவிடின் இருந்த இடத்தில் அமையட்டும் எனப் பலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எமது பிரதேசத்திலேயே அந்தப் பழம்பெரும் பாரம்பரிய பாடசாலை அமையவேண்டும் என மற்றுமொரு சாரார் பாரிய கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளனர்.

பொறுப்புவாய்ந்த கல்வித்துறை அதிகாரிகள் இது தொடர்பாகக் கல்விச் சமூகத்திடம் ஆலோசனை பெற்றுப் பிரச்சினையின்றி நிறுவ ஆக்கபூர்வமாகச் சிந்திக்கவேண்டும். அரசின் 100 மீற்றர், 200 மீற்றர் பரப்புக்கு வெளியே இவை வருவது குறிப்பிட்டுக் கூறமுடியும்.

### வீடுகளின் மீள் நிர்மாணம்

வடக்கு - கிழக்கில் 80ஆயிரத்து 532 வீடுகள் சேதமாகியுள்ளன. அவற்றில் 62 ஆயிரத்து 949 வீடுகள் முற்றாகச் சுனாமியினால் அழிக்கப்பட்டுள்ளன. அவற்றை மீள அமைக்க பல கோடி ரூபாக்களுடன் பல நாடுகள் வரிசையில் நிற்பதாகக் கூறப்படுகிறது.

இங்கு பிரச்சினை என்னவென்றால், இவ்வீடுகளை அமைப்பதற்கான காணியைத் தெரிவது என்றால் மிகையாது. கிழக்கில் குறிப்பாக, கல்முனைப் பிராந்தியத்தில் அரச காணியைப் பெறுவது முடியாத காரியமாகும். பெரிய நீலாவணை முதல் நிந்தவூர் வரையுள்ள கிராமங்களின் மேற்கேயுள்ள வயல் பரப்புகளில் நவீன வீடமைப்புத் திட்டத்தை நிறுவ ஆரம்பத்தில் உறுதிமொழியுடன் நம்பிக்கை வெளியிடப்பட்டது.

சுனாமி தாக்கி ஒரு மாத காலப்பகுதியில் இவ்வீடமைப்புத் திட்டம் பற்றிப் பரவலாகப் பேசப்பட்டது. தற்போது அக்கதை ஓய்ந்துவிட்டது. அதனால், இத்திட்டம் 'அம்போ' எனக் கைவிடப்பட்டுவிட்டதா? என்ற ஐயம் மக்கள் மத்தியில் துளிர்விடத் தொடங்கியுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து 60 நாள்களாகியும் இன்னும் நிரந்தரக் குடியேற்றத்திற்கான இடம் தெரிவுசெய்யப்படவில்லை. ஆனால், தெற்கில் வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. இது பாரபட்சமெனக் கூறப்படுகின்றது.

"இது பாரபட்சமல்ல, ஜனாதிபதி தெற்கையும், கிழக்கையும் ஒரே கண்கொண்டே நோக்குகிறார். அம்பாறை வீடமைப்புத் திட்டத்திற்கு மதிப்பீட்டுத் திட்டம் தயார். ஆனால், காணியைப் பெறுவதில் சிக்கல் எழுந்துள்ளது. மக்கள் ஒத்துழைத்தால் இன்றும் வீடமைப்புத் திட்டம் அமுலாகும்" என அரசின் வலுவான பிரதிநிதி அமைச்சர் பேரியல் அஷ்ரஃப் மருதமுனையில் பேசியபோது கூறியிருக்கிறார்.

### அனைத்திலும் பாரபட்சம்

அரசிடம் ஒழுங்கான திட்டமில்லை. நிவாரணத்திலும் பாகுபாடு, மீள்குடியேற்றத்திலும் பாரபட்சம், சுனாமி தாக்கி இருமாதம் கடந்தும் உருப்படியான காரியம் ஆகவில்லை. ஒரு வீடு கூட கட்டப்படவில்லை. மக்கள் அகதிமுகாம்களில் முடங்கியுள்ளனர் என்று சாடுகிறார் எதிர்க்கட்சி எம்.பி. மயோன் முஸ்தபா.

இவர்களெல்லாம் பேசிப்பேசியே காலத்தைக் கடத்துகிறார்கள். எரிமலையிலும், மின்னலிலும் முழங்குகின்றார்களே தவிர, 10 எம்.பிக்கள் இருந்தும் அம்பாறையில் ஆனது ஒன்றுமில்லை. பாதிக்கப்பட்ட நாம் பாதிக்கப்பட்டதுதான் என்று கூறுகின்றனர் மக்கள்.

இந்நிலையில், மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட அம்பாறையை மீளக்கட்டியெழுப்புவதை விட காலியை கட்டியெழுப்புவதில் அரசு தீவிரம் காட்டுகிறது.

100 மீற்றர் பரப்புக்கு எதிராக முஸ்லிம்கள் கிழக்கில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனரென ஊடகங்கள் தெரிவித்தன. அது அப்படியில்லை நிவாரணம் வழங்கலில் இப்பிரதேசம் புறக்கணிக்கப்படுகிறதை எதிர்த்தே போராட்டம் நடைபெற்றது எனத் தர்க்கரீதியிலான நியாயம் கூறப்பட்டது.

சாய்ந்தமருது, கல்முனைக்குடிப் பிரதேசங்களில் 50 மீற்றருக்குள் உள்ள கடற்கரை வீதிக்கு மேற்கேயுள்ள பகுதிகளில் தாம் மீளக் குடியேறத் தயார் என்று பலர் கூறிவருகின்றனர். மாற்று ஏற்பாடு இல்லாவிடில் எம்மை பழைய இடத்திலேயே குடியேற்றுங்கள் என்று கூறப்படுகிறது.

சாய்ந்தமருது ஏ.எம்.ஏ.ஜப்பார் மௌலவி கருததுத் தெரிவிக்கையில் "அரசின் 100 மீற்றர் பரப்பை ஏற்கிறோம். அப்படியெனின், கரவாகு வெட்டையில் வீடு கட்டித் தரட்டும். அந்தத் தி[illegible]மும் இல்லை! எனின், மக்கள் என்ன செய்வார்கள்? எனவேதான், 100 மீற்றர் பரப்பு வேண்டாமென்கிறார்கள்" - என்றார்.

ஜ[illegible]பர் காரியப்பர் கூறுகையில், "100 மீற்றர் எல்லை போடும் அரசு எமக்கு உரிய இடத்தைக் காட்டி வீடமைத்துத் தந்தால் நல்லது" - என்றார்.



பிரதேச செயலாளர்களிடம் சென்று மக்களது மீள்குடியேற்றம் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுத்தீர்களெனக் கேட்டதற்கு இந்த 100 மீற்றர் பரப்பை எடுத்துக் கூறுகின்றனர்.

பிரதமர் கூட்டிய கூட்டத்தில்கூட இந்த 100 மீற்றர் பரப்பு விடயம் தெளிவாக அறுதியிட்டுக் கூறப்படவில்லையெனத் தெரிகிறது.

சுனாமியைவிட இந்த 100 மீற்றர் விவகாரம் பெரிதல்ல. ஆனால், இந்தப் பரப்பிற்குள் வாழ்ந்த மக்களுக்கு மீளக்குடியேற மாற்று ஏற்பாடு செய்துகொடுத்தால், பிரச்சினை தீருமென்பதில் ஐயமில்லை என்று முஸ்லிம் நிறுவனப் பிரமுகர் ஹாதியத்துல்லாஹ் கூறுகிறார்.

### பென்னம்பெரிய வினா?

அம்பாறைக் கரையோரப் பிரதேசத்தில் நவீன தொடர்மாடித் திட்டம் பற்றிப் பரவலாகப் பேசப்பட்டுவந்த விடயம் தற்போது அமுங்கிக் கிடப்பதன் காரணம் என்ன? என்று மக்கள் வினவுகின்றனர்.

அமைச்சர் பேரியலும் அரசும் இத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டனரா? அப்படியெனின், பிரஸ்தாப மக்களை எங்கு மீளக்குடியேற்றுவது? என்ற பாரிய வினா தற்பொழுது எழுந்துள்ளது.

பொது இடங்களில் அரச கட்டடத்தை அமைப்பதற்குப் பிரதேச செயலரிடம் கேட்டால் ஊர்கூடி முடிவெடுங்கள் என்று கூறுகின்றார்.

அரச காணியில் ஏதாவது பொதுக்கட்டடத்தை அமைப்பதற்குப் பள்ளிவாசல் முடிவெடுக்க விடுவது எவ்வகையில் நியாயம்? என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

### நழுவல் போக்கு

அமைச்சரும் உயர் அரச நிர்வாகிகளும் இப்படியான நழுவல் போக்கைக் கடைப்பிடித்தால் பிரஸ்தாப மக்கள் தொடர்ந்து அகதி முகாம்களில் வாழ்வதுதான் முடிவா? மாணவரின் எதிர்காலம் என்ன?

**காரைதீவிலிருந்து**
**வி.ரீ.சகாதேவராஜா**

அரசின் கொடுப்பனவான ஐயாயிரம் ரூபா ஒரு தடவை மட்டுமே என்று அதிகாரிகள்கூற, தொடர்ந்து 6 மாதங்கள் வழங்கப்படுமென அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

இதில் எதுசரி என்பதில் மக்கள் தெளிவற்றவர்களாக உள்ளனர்.

ரூ.375 உணவு நிவாரண முத்திரை மட்டும் 6மாதங்களுக்குத் தொடருமெனக் கூறப்பட்டபோதிலும் அதுகூட 4மாதங்களுக்கு (16வாரங்கள்) வரையறுக்கப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது.

அதுவும் சில பல நோ.கூ.சங்கங்கள் தனியாரைவிடக் கூடுதல் விலையில் பொருள்களை விநியோகிப்பதாகவும் பொருள்களின் அளவை மட்டும் குறிப்பிட்டுப் பெறுமதியைக் குறிப்பிடாமல் விடுவதாகவும் நிறைகுறைவதாகவும பரவலாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

உலக உணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பருப்பு, மா என்பனவற்றிக்குப் பதிலாக, வேறுபொருள்களை வழங்குமாறு சாய்ந்தமருது ஏ.எம்.அபூபக்கர் கேட்டுள்ளார்.

மொத்தத்தில் 100மீற்றர் விவகாரம் கிழக்கில் அரசியல் மயமாக்கப்பட்டு வருகிறது. மக்களின் வாக்குகளை வைத்து காய்நகர்த்தும் பணியில் ஈடுபடுகிறார்களே தவிர, அவர்களது எதிர்காலத்தைச் சிறிதும் எண்ண முற்படுகிறார்களில்லை.

ஆழிப்பேரலை அடித்து அறுபது நாள்களாகியும் இன்னும் நிரந்தரமாக இருக்க ஓர் இல்லிடம் இல்லாத நிலையில், வேறு எதைப் பற்றிப்பேச என்று திருக்கோயில் கண்ணன் கேட்கிறார்.

கண்டி திரித்துவக் கல்லூரியிலிருந்து வந்த சில பெறுமதியான பொருள்கள் உரியவர்களுக்குத் தெரியாமல் குடும்பமொன்றின் உறவுகளுள் முடக்கப்பட்டிருப்பது குறித்தும் அகதிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் நிரந்தரமாக இன்னும் ஒரு வீடு தானும் அமைக்கப்படவில்லை எனின், இனிமேல் இடைத்தங்கல் முகாம்கள் தான் அவர்களது இல்லிடமாக இருக்கப்போகின்றது என்ற உண்மை கசப்பாகலாம்.

100 மீற்றர் விவகாரத்தை சர்ச்சையில் மாட்டி அரசியல் லாபம் தேடினால் இன்னும் 100 வருடங்களுக்கு எமது சமுதாயம் பின்நோக்கிச் செல்லும் என்பதில் ஐயமில்லை. பல அரசியலாளர்கள் இது பற்றிப் பேசுவதில்லை. இந்தச் சுனாமி, வேலை நாளில் அல்லது இரவுவேளையில் தாக்கியிருந்தால் இன்னும் பல 100மீற்றர்களைக் கடக்க வேண்டியிருந்திருக்கும். எனவே, நம்பிக்கைதான் அடிப்படை என்பதை வைத்துக்கொண்டு முன்னேற வேண்டும்.

✳




வடமராட்சி கிழக்கு நெல்லியானில் படகு உற்பத்தி மையம் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதி, அகதிகளுக்கான ஐ.நா.தூதரக பிரதிநிதி ஆகியோர் உரையாற்றுவதையும், கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# வடமராட்சி கிழக்கு நெல்லியானில் படகு உற்பத்திமையம் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,மார்ச்2

வடமராட்சி கிழக்கில் நெல்லியான் என்னும் இடத்தில் படகு உற்பத்தி மையம் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

சுனாமிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் சுனாமிக்குப் பின்னான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டத்தினை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள் எங்கும் ஒருங்கிணைத்து முன்னெடுத்து வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் நம்பிக்கை ஒளி, மீண்டும் தொழிலுக்குச்செல்லுதல், இணைந்து செயற படுத்தல் என செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன.

இவற்றுள் வருமானம் சார், பொருளாதார மேம்பாடுசார் செயற்றிட்டங்கள் உள்ளடக்கப்பட்ட செயற்றிட்டத்திற்கமைய மீன்பிடித் தொழிலையே மூலதனமாகக் கொண்டு வாழந்து வந்த மக்களின் இழப்புக்களை நிவர்த்தி செய்து தொழில் வாய்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு கடற்றொழில் உபகரணங்களை வழங்குதல், கடற்றொழில் உபகரணங்களைப் புதிதாகச் செய்து கொடுத்தல், திருத்தம் செய்துகொடுத்தல் போன்ற மீள் கட்டுமான புனரமைப்புச் செயற்பாடுகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கடல் சம்பந்தப்பட்ட பலதரப்பட்ட சேவை நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றது. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதிப்பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டுவரும் இச்செயற்றிட்டத்தின் கீழ் நேற்றுமுன்தினம் வடமராட்சி கிழக்கு நெல்லியான் என்னுமிடத்தில் படகு உற்பத்தி மையம் ஒன்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் ராஜன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான காதர் ஏற்றிவைக்க தேசியக் கொடியினை கடற்புலிகளின் தளபதி மங்களேஸவரன் ஏற்றிவைத்தார்.

இதனையடுத்து படகு உற்பத்தி மையத்தின பெயர்ப்பலகையினை தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் திரை நீக்கம் செய்துவைக்க, படகு உற்பத்தி மையத்தினை கடற்புலிகளின் 'மங்கை படகுக் கட்டுமான' பகுதியின் பொறுப்பாளர் ஆனந்தியால் திறந்து வைக்கப்பட்டது. இதையடுத்து கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் ஸ்ரனிஸ ரோஸ் ஆசியுரையுடன சிறப்புரைகளும் இடம்பெற்றன.

அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் உட்பட கடற்புலிகளின் அரசியல்துறைப பொறுப்பாளர் நிலவன, யுனிசெவ், அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் ஆகியவற்றின் பிரதி நிதிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிக்கொட் திட்டப் பணிப்பாளர் சுடர், கிளி நொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பு பணிப்பாளர்களில் ஒருவரான வின்சன் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊடகப் பிரிவைச் சேர்ந்த சதீஸ் மற்றும் போராளிகள், பொதுமக்கள் எனப் பெரும்பாலோனோர் கலந்துகொண்டனர். (3)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 – 09 – 1957



மறைவு 13 – 03 – 2004

### அமரர் நாகலிங்கம் சிவபாலன்

(உரிமையாளர் - நாகலிங்க்ம் அன்சன், நகைக்கடை, கன்னாதிட்டி)

திதி : ஸப்தமி - 02.03.2005

ஆண்டுகள் நூறானாலும் உங்கள்
நினைவுகள் என்றும் மாறாது; மறையாது

190 ஆம் கட்டை,
நுணாவில் மேற்கு. சாவகச்சேரி. (42569)(39)

அன்பு மனைவி.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 – 09 – 1922



மறைவு 02 – 03 – 2004

### திருமதி செல்லத்துரை அன்னம்

திதி: 02.03.2005

நிலாவொன்று ஒளிவீசி தேய்ந்து ஓராண்டு ஆனதம்மா
வளர்பிறையாகி வளர்ந்து வருவாயென ஓராண்டாக நாமும்
காத்திருக்கின்றோம் காணவில்லை; ஏங்குகின்றோம்!

கண்ணீர் நினைவுகளுடன் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

09. பேக்கரி வீதி,
யாழ்ப்பாணம்.

(42521)(39)


### அதிபர்கள் கூட்டம் பிற்போடப்பட்டது

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு நாளைநடைபெற விருந்த கூட்டம் மார்ச் ஒன்பதாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (117).

## சுனாமி மீள்கட்டுமானத்துக்கு உதவ

# புதிதாக ஐந்து பயிற்சி நெறிகள் தொழில் நுட்பக் கல்லூரியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு வசதியாக பயிற்சி நெறி ஒன்றினை யாழ்.தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தில் நீர்க்குழாய் பொருத்துதல், மரவேலை, கட்டட நிர்மாணம், மின் உருக்கி ஒட்டுதல், வீட்டுமின் இணைப்பு ஆகிய 5 பயிற்சி நெறிகள் அடங்குகின்றன.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்பவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படும் எனவும்-

பயிற்சியின் முடிவில் இம்மாணவர்களுக்கு 5 மாதவேலைத்தளப்பயிற்சி வழங்கப்படும் எனவும் - தெரிவிக்கப்படுகின்றது.

இப்பயிற்சி நெறிகளுக்கு அடிப்படைக் கல்வித் தகைமை தரம் 8 சித்தியடைந்திருத்தல் வேண்டும். இப்பயிற்சி நெறியில் பயில விரும்பும் மாணவர்கள் உடனடியாக யாழ்.தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதிபர் ந.யோகராஜன் கேட்டுள்ளார். (3-12)

# ரூபவாகினி உயரதிகாரி ஒருவர் பதவியை இராஜினாமாச் செய்தார்

கொழும்பு,மார்ச்2

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ மட்டத்தில் உயர் பதவி வகிக்கும் ஒருவர் தனது பதவியை ராஜினாமாச் செய்திருக்கிறார் என நம்பகரமாகத் தெரிய வருகிறது. இந்த ராஜினாமாக்கடிதம் ஊடக அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ள போதும அது ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்பது பற்றி தெரியவரவில்லை.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகள் என்பன ஜே.வி.பியினருக்கு ஆதரவான வகையில் வெளியிடப்பட வேண்டும் என அமைச்சு மட்டத்தில் தமக்குத் தொடர்ச்சியான அழுத்தம் வழங்கப்பட்டு வருவதால் தாம் பதவியை ராஜினாமாச் செய்கிறார் என மேற்படி முக்கியஸ்தர் ஜனாதிபதியிடமும் ஏற்கனவே நேரடியாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த வார இறுதியில் இந்தப்பிரச்சினை ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது. அதேசமயம், அனைத்து ஊடகங்களிலும் ஜே.வி.பியினருக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் குறித்து ஆராய்ந்து கூறுமாறு ஜனாதிபதியினால் உத்தியோகப்பற்றற்ற ரீதியில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. பிரதியமைச்சர்கள் பலர் இந்தக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-3)


## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை, சுழிபுரம்
### பதவி வெற்றிடம்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் சேவைக்கு பின்வரும் வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) நிர்வாக அலுவலர்/கணக்காளர்
2) பயிலுநர் தாதிகள்
3) மருந்தாளர்
4) ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்/பயிலுநர்

விண்ணப்ப முடிவு திகதி: 11.03.2005

தலைவர்,
பணிப்பாளர் சபை,
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வரைவுள்ளது), சுழிபுரம்.

(சு-41347)
(43-14-17)



## பிறந்தநாள் நினைவும் ஆறுமாத ஆறாத நிறைவும்



மண்மகிழ
02-03-1973

கண்நெகிழ
24-08-2004

### அமரர் சுப்பையா சுமேந்திரன் (செல்வா)

சுந்தரமாய் சொந்தமுடன் செல்வமாய் வாழ்ந்தவனே
அப்பாவுக்கும் அம்மாவுக்கும் செல்லமாய் வளர்ந்தவனே
பைந்தமிழ் நாமத்தை பாரினில் பதித்தவனே
தயாள குணத்தோடு தங்கமகனாய் பிறந்தவனே
சுகமான வாழ்வுக்காய் சுமைகளை சுமந்தவனே
குபேரனாய் குடும்பத்தின் சொத்தாகி முத்தானவனே
சந்தனமாய் பண்பினால் மணம்வீசி நின்றவனே
திக்கெட்டும் அன்பினால் புகழ்பெற்று உயர்ந்தவனே
இரப்போர்க்கு இல்லையெனாது அள்ளிக் கொடுத்தவனே
என்றும் உந்தனது நினைவோடு வாழ்ந்திடுவோம்

உன் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.

மிஷாந்த மஹால், மருதங்குள வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (42576)(42-43-14-17)

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

# ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிக்க பொதுஜன வாக்கெடுப்பு சாத்தியமாகுமா?

**ஜனாதிபதி சந்திரிகா எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் முடிவடையவுள்ள தமது ஜனாதிபதிப் பதவிக் காலத்தை எவ்வகையிலாவது நீடித்துக்கொள்ளும் நோக்கில் பல தரப்பட்ட முயற்சிகளில் இறங்கியுள்ளார்.**

**அந்தவகையில் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்துவதன் மூலம் தமது இலக்கை அடையும் திட்டம் குறித்தும் பரிசீலித்து வருகிறார்.**

**அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படுமானால், அதனால் ஏற்படவுள்ள சாதக பாதகங்கள் குறித்து ஆராயும் கலாநிதி ஜெகான் பெரேராவின் இக்கட்டுரை 'ராவய' பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.**

நடந்த காலப் படிப்பினைகளைத் தெளிவாக உணர்ந்து கொண்டு செயற்படாத எந்தவொரு நாடும் ஆரோக்கியமான எதிர்காலத்தைப்பற்றித் திட்டமிட இயலாது.

இலங்கையைப் பொறுத்தவரையில் நாட்டில் நிலவும் முக்கிய பிரச்சினையைப் புறம்தள்ளிவிட்டு அரசியலில் தம்மை முன்னிலைப்படுத்திக் கொள்வதையே அரசியல் சம்பிரதாயமாகக்கொண்டு செயற்படும் அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைமைகளும் மாத்திரமல்ல, முழு நாடுமே இழப்புக்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்த சந்தர்ப்பங்கள் ஏராளமுண்டு.

தற்போது இலங்கையில் சமாதானத்தை நிலை நிறுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் கூட அரசு தனது அரசியல் அபிலாசைகளை முன்நிலைப்படுத்தி அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முனைப்புக்களையே மேற்கொண்டு வருகிறது.

அரசியல் எதிர்காலம் தொடர்பாகக் கடும் அக்கறை செலுத்திக் கொண்டு நாட்டின் முக்கிய பிரச்சினைகளை புறம்தள்ளி விடுவது எமது நாட்டில் அரசியல் சம்பிரதாயமாக மாறியுள்ளது. இன்றைய கூட்டமைப்பு அரசும் அந்த நடைமுறையையே கைக்கொண்டு வருகிறது.

நகர முடியாது சிறைப்பட்டுள்ள சமாதானச் செயற்பாடுகளுக்கு சர்வதேச சமூகங்கள் ஊடாகவோ அல்லது அதன் அவசியத்தை உணர்ந்து செயற்படும் தமிழ், சிங்கள அமைப்புக்கள் ஊடாகவோ உயிர்கொடுக்க இயலாது.

அரசியல் ரீதியான செயற்பாடுகள் ஊடாகவே தீர்வுகாண முடியும். அது போன்றே விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் உருவாகியுள்ள சிக்கல்கள் மற்றும் கருத்து வேற்றுமைகளை அவரவர் மேற்கொள்ளும் அரசியல் அணுகுமுறைகள் ஊடாக மாத்திரமே தீர்த்துக் கொள்ளமுடியும்.

சமாதான முயற்சிகள் மீண்டும் புத்துயிர் பெறவேண்டுமாயின் இரு சாரார் மத்தியிலும் பரஸ்பர நம்பிக்கையும் புரிந்துணர்வும் உருவாதல் அவசியமாகும். அப்போதுதான் இருசாராரும் தத்தமது அபிலாசைகள் குறித்த கருத்துக்களைப் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ள முடியும்.

### மறுதரப்புப் பற்றி எவருக்கும் அக்கறையில்லை

ஆனால், இன்றுவரை இருசாராருமே தமது மறுதரப்பு பற்றி அக்கறை செலுத்துவதாகத் தோன்றவில்லை. முக்கியமாக இக்கூட்டணி அரசு விடுதலைப் புலிகளின் அபிலசைகள் ஓரளவுக்காவது நிறைவேற்றப்படுவதை விரும்புவதாகத் தெரியவில்லை.

இருதரப்பினர் மத்தியிலும் நிலவும் அத்தகைய போக்குகளில் மாற்றம் ஏற்பட்டாலொழிய சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க சந்தர்ப்பம் ஏற்படாது.

தாம் வகுத்துள்ள எதிர்கால அரசியல் வியூகங்களும் விடுதலைப் புலிகள் மீது உள்ள அவநம்பிக்கையுமே அரசின் இவ் விருப்பமின்மைக்குக் காரணமாகியுள்ளது.

விடுதலைப் புலிகளின் அபிலாசைகளை நிறைவு செய்யும் இடைக்கால நிர்வாக அலகை அரசு ஏற்றுக்கொள்ளுமாயின் அதன் காரணமாக சிங்கள மக்கள் மத்தியில் அரசுக்கு இருக்கும் செல்வாக்கு சரிந்து விடக்கூடுமென்று அரசின் சிலதரப்பினர் நம்புகின்றனர்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் தமக்கான செல்வாக்கு கடுகளவும் குறைவடைவதை அரசு விரும்பவில்லை. இன்றைய அரசின் - முக்கியமாக ஜனாதிபதியின் முக்கியநோக்கம் தனது இரு பதவிக் காலங்களும் முடிவடைந்த பின்னரும் தாம் தொடர்ந்தும் அரசியலில் நிலைத்து நிற்கும் வாய்ப்பபை உருவாக்கிக் கொள்வது தான் என்றும் பேசப்படுகிறது.

அதை முன்னிட்டு எதிர்காலத்தில் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்தும் எண்ணத்தை அரசு கொண்டிருப்பதுடன் பெரும்பாலும் அது ஜனாதிபதிப் பதவிக் காலததை மேலும் நீடிப்பது தொடர்பான பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பாக இருக்கக் கூடுமென்றும் நம்பப்படுகிறது.

### தமது நிலைப்பாட்டில் புலிகள் உறுதி

மறுபுறம் எக்காரணத்தை முன்னிட்டும் தமது நிலைப்பாட்டிலிருந்து எள்ளளவும் விட்டுக்கொடுப்பதில்லை என்ற உறுதியுடன் விடுதலைப் புலிகள் செயற்படுகின்றனர் எனத் தோன்றுகிறது.

அதுகூட ஒரு முரட்டுத்தனமான பிடிவாதமேயாகும். ஒருபோதும் அதை நல்லதோர் அறிகுறியாகக் கருத இயலாது. ஆயினும், அவர்களது கடந்தகால வரலாற்றை உற்று நோக்கும்போது அவ்வித அறிகுறிகளே தென்படுகின்றன.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே தமது விட்டுக்கொடுக்காத இறுக்கத் தன்மையில் இணக்கம் காட்டியுள்ளனர்.

அதாவது, கடந்த காலத்தில் தாய்லாந்து நகரான "சதாஹிப்"பில் இடம்பெற்ற முதலாவது சமாதானப் பேச்சுக்களின் போதும் மற்றும் நோர்வே 'ஒஸ்லோ' நகரில் இடம்பெற்றுள்ள இராண்டாம் சுற்றுப் பேச்சுக்களின் போது மட்டுமே விட்டுக்கொடுக்கும் பாங்குடன் நடந்து கொண்டுள்ளனர்.

அச்சந்தர்ப்பங்களின்போது மாத்திரம் அவர்களிடம் அத்தகைய மாற்றம் காணப்பட்டது ஏன? முக்கியமாக அது ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

அன்று பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த இவ்விரு தரப்புக்கள் மத்தியிலும் நிலவிய பரஸ்பர நல்லிணக்கமே இதற்கான ஒரே காரணமாகும். உண்மையில் அன்றைய இரு தரப்பு பேச்சுக்களும் பெரும்பாலும் வெற்றியளித்திருந்தன.

விடுதலைப் புலிகளின் வரலாறு முழுவதிலும் காணப்பட்ட முரட்டுத்தனம் குறைவடைவதற்கு முன்னெடுக்கப்பட்ட முதலாவது செயற்பாடு அதுவாகத்தான் இருக்கமுடியுமென்பதே எனது கருத்தாகும்.

அது போன்றே, தமது அமைப்பு தனியான அரசொன்று பற்றிய எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லையென்றும் "சதாஹிப்" நகரில் பாலசிங்கம் தெரிவித்திருந்தார். அதை அடுத்து ஒஸ்லோவில் இடம்பெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களின்போது, தமது அமைப்பு சமஷ்டி முறைத தீர்வொன்றில் நாட்டம் கொண்டிருப்பது பற்றி மிகத் தெளிவாக விளக்கமளித்திருந்தார். ஆனால், இரு தரப்புக்களுக்கும் இலாபம் கிடடும் விதமாக சமாதானப் பேச்சுக்களை முன் நகர்த்திச் செல்லும் அபிலாசைகள் இந் தக் கூட்டமைப்பு அரசிடம் இல்லையென்றே தோன்றுகிறது.

### தனது தீர்ப்பை திணிப்பதே அரசின் நோக்கம்

ஒரு தரப்பு வெற்றிவாகை சூடும் அதே வேளை மறுதரப்பு மண்கவ்வ வேண்டுமென்பதே இன்றைய அரசின் எண்ணமாக உள்ளது. தன்னிச்சையான தீர்வொன்றைத் தமது அரசு மாத்திரம் எடுக்கவேண்டுமென்ற பெருவிருப்பை இந்த அரசு கொண்டுள்ளதாகத் தென்படுகிறது.

அந்தத் தீர்ப்பு, பலவந்தமாக எதிர்த்தரப்பு மீது திணிக்கப்படவேண்டுமென்ற எதிர்பார்ப்பின் சாயலும் தென்படுகின்றது. ஒத்துழைப்பின் மத்தியில் தீர்வொன்றைப் பெறும் வகையில் தமது எண்ணங்களை இந்த அரசு வெளிப்படுத்தியுள்ளதாகவும் தோன்றவில்லை. இந்த வெளிப்பாடுகள், எதிர்காலத்தில் கூட தமது தரப்பு முன்வைக்கும் தீர்வையே தமிழ் மக்கள் ஏற்கவேண்டுமென்பதே இவர்களது எதிர்பார்ப்பு என்பதும் புலனாகிறது. என்றாலும் அவையனைத்துமே இன்றைய ஜனாதிபதியின் அரசியல் எதிர்காலம் தொடர்பான தீர்ப்பிலேயே தங்கியுள்ளது.

ஜனாதிபதியின் இரு பதவிக்காலங்களும் முடிவுறவுள்ள இன்றைய நிலையில் அவர் அரசமைப்பில் சில மாற்றங்களை மேற்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்பாகவே அதிக கவனம் செலுத்தக்கூடும்.

ஆனால், அது நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாகமாட்டாது. அந்த நிலைப்பாட்டின் மத்தியில் எழக்கூடிய பல்வேறு பிரச்சினைகளுக்கு நாட்டின் தேசியப் பிரச்சினையும் அவற்றைப் போன்றோ அல்லது அவற்றை விடவோ உக்கிர நிலையை அடையக்கூடும்.

அத்தகைய நிலை உருவாக விடுதலைப் புலிகள் எந்த வகையிலும் இடமளிக்கமாட்டார்கள் என்பது தெளிவு. அது போன்றே அதனூடாகத் தெற்கில் இடம்பெறும். அரசியல் நிலைபாடுகள், அதனால் உருவாகும் மாற்றங்கள் பற்றி விடுதலைப் புலிகள் அலட்டிக்கொள்ள மாட்டார்கள் என்பதும் தெளிவு.

அதுபோன்றே ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவின் அரசியல் ஸ்திரம் தொடர்பாகவும் கூட அவர்கள் அக்கறை கொள்ளாதிருக்கக் கூடும்.

### ஜனாதிபதியின் அணுகுமுறை நன்மையானதாக இல்லை

பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் விவகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதி மேற்கொண்டுள்ள அணுகுமுறைகள் எந்தவகையிலும் நன்மை பயக்கவில்லை.

அத்தோடு, அவர் பயணிக்கும் அரசியல் பாதையில் அவர்வகிக்கும் பாத்திரம், அவரரோடு மோதும் நபரோடு அல்லது அமைப்போடு மீளவும் அணுகும் திறன் என்பன திருப்திகரமாக அமையவில்லை.

இது விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் பொருந்தும். எனவே, அவர் எதிர்கால அரசியலில் தனது அதிகாரத்தை விரிவுபடுத்துவது தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய எந்தவொரு முயற்சியின்போதும் அதை முறியடிப்பதற்கு விடுதலைப் புலிகள் முயற்சிப்பார்களாயின் அது புதுமையல்ல.

ஆனால், அத்தகைய அரசியல் செயற்பாட்டை முறியடிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு வன்முறையைப் பயன்படுத்த வாய்ப்பளிக்கப்படுவதிலேயே பயங்கரம் தொக்கி நிற்கிறது.

மறுபுறம் இந் நாட்டிலுள்ள தமிழ் மக்களது அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் இணக்கத்துக்கு மாறாக நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றம் மேற்கொள்ளும் முயற்சிகளின் மத்தியில் தமிழ் மக்களும் அதேவகையில் தன்னிச்சையாக தீர்வொன்றை மேற்கொள்வதற்குரிய உரிமை தொடர்பான அவர்களது எணணங்களை விடுதலைப் புலிகளும் மறந்துவிடமாட்டார்கள்.

அத்தகைய எந்தவொரு முயற்சியும் மீண்டும் சிறிலங்காவில் சகலதையும் சிக்கலுக்குள் தள்ளிவிடும்.

1982 இல் நடத்தப்பட்ட பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் மேலும் சில ஆண்டுகள் நீடிக்கப்பட்டமையை நாம் மறக்கமுடியாது.

இன்றைய ஜனாதிபதியின் அரசியல் வாழ்க்கை மேலும் தொடர்வதற்கு, அதேபோன்றதோர் - அல்லது அதற்குச் சமமான பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்துவது தொடர்பாக அரசியல் வட்டாரத்தில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஆனால், அன்று மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பு சம்பிரதாயத்துக்கு முரணானதாக அமைந்திருந்த போதிலும் அதை சட்டவிரோதமானதாகக் கருத இயலாது. ஆனால், அவ்வாறே எதிர்காலத்திலும் பொதுஜன வாக்கெடுப்பொன்றை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்படுமாயின் அது சம்பிராயத்துக்கு முரணானது மாத்திரமன்றி சட்ட பூர்வமற்றதாகவும் அமையக் கூடும்.

ஏனெனில், தற்போதைய அரசமைப்புக்கு அமைய ஒருவர் இரு தடவைகள் மாத்திரமே ஜனாதிபதிப் பதவியை வகிக்க முடியுமென அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், நாம் அது தொடர்பாக மாத்திரம் கவனத்தில்கொள்ள இயலாது. அந்த வாக்கெடுப்பு இடம்பெற்ற காலகட்டத்தில் பதவியிலிருந்த அரசு இலங்கை அரசியல் வரலாற்றில் பலம் பொருந்திய அரசாக இயங்கி வந்தது. அன்றிலிருந்த அரசும் 5/6 அறுதிப் பெரும்



பான்மைப் பலத்தோடு பலம் பொருந்திய அரசாக இயங்கியது.

அவ்வேளை நாட்டின் பொருளாதாரமும் ஆரோக்கியமானதாகவும் உறுதியானதாகவும் இருந்துள்ளது. அதைவிட அன்று, இன்றுபோல் பாரதூரமான வகையில் இனப்பிரச்சினை தலைகாட்டவில்லை. உண்மையில், அன்று பலம் பொருந்திய ஒன்றுபட்ட தேசமாகவே நமது நாடு காணப்பட்டது.

ஆயினும், 1982 இல் மேற்கொள்ளப்பட்ட பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு நபர் ஒருவரின் அல்லது ஒரு அரசியல் கட்சியின் அதிகாரத்தை அதிகரிக்கும் நோக்கில் மக்கள் மீது வலிந்து திணிக்கப்பட்டது. அந்த நடவடிக்கையின் பிரதிபலிப்பு பின்னர் அரசின் சகல துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியமை இரகசியமானதொன்றல்ல.

இந்த நாட்டில், பல பிரச்சினைகளுக்கு அத்திபாரம் இடப்பட்டவிதத்தில், 1983 ஜூலையில் பெரும் அழிவுகளுக்குக் காரணமானதும் அந்த நிகழ்ச்சியின் மூலம் உருவான தாக்கத்தின் பிரதிபலிப்புக்களே என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

### பொதுஜன வாக்கெடுப்பு சாத்தியமானதா?

இன்றைய நிலையில் அதுபோன்ற பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்று மக்கள் மீது திணிக்கப்படுமாயின், அதனால், ஏற்படவுள்ள பலாபலன்கள் எத்தகையனவாக இருக்கும்?

இன்று நாட்டை ஆள்வது 5/6 வீதமான பலம் பொருந்திய அரசல்ல; பலவீனமான ஓர் அரசாகும், அரச துறைகளிலும் பொருளாதாரம் சரிந்து வீழ்ந்துள்ளது. அதைவிடவும் இன்றிருப்பது பலமிக்க ஒன்றுபட்ட ஒரேநாடு அல்ல இரண்டாகப் பிளவுபட்டுப் போயுள்ள சிறிலங்காவாகும்.

**தமிழில் - சரா**

நாட்டு மக்களிடையே மேன்மேலும் பிரிவினையை உக்கிரமடையச் செய்யும் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு போன்ற ஒன்றை நாட்டில் நடத்த முயல்வது, அத்தகைய ஒன்றின் மூலம் சமூகங்கள் சிதறிப்போகக் கூடிய மேலுமோர் அதிபயங்கர அழிவுக்கு வழிவகுக்கக் கூடிய அதிக வாய்ப்புக்களை உருவாக்கும். ★



நல்லூர் புனித யாக்கோபு ஆலயத்தின் 175 ஆவது ஆண்டு நினைவு மலர் வெளியீட்டு விழாவின்போது எடுக்கப்பட்ட படம் இது.

எஸ்.புத்திசிகாமணி தலைமை உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அருட்தந்தை எஸ்.பி.நேசக்குமார் அடிகளார், சிறப்பு விருந்தினர் அருட்தந்தை தோமஸ் ஜோர்ஜ் அடிகளார் மற்றும் அருட்தந்தையர்களான ஜெயராஜ், ஸ்ரீபன் ஆகியோரும் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (த)

# நெல்லின் உத்தரவாத விலையை நிர்ணயிக்கக் கோரித்தீர்மானம்

வலி.தெற்கு, மார்ச்2

நெல்லின் உத்தரவாதவிலை ஆயிரத்து 200 ரூபாவாக நிர்ணயிக்க வேண்டுமென உடுவில் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாய சம்மேளனங்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

உடுவில் கமநலசேவை நிலையத்தில் நடைபெற்ற விவசாய சம்மேளன உறுப்பினர்களின் விசேட கூட்டத்தில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க.முதலியார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், நெல் அறுவடைக்கான கூலி இவ்வருடம் மிக அதிகமாக இருந்ததாகவும், விளைச்சல் குறைந்துள்ளதாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

விவசாயிகள் தமது விளை பொருள்களை அவசரநிலை கருதி விற்கமுற்படும் வேளையில் நெல் அரிசி ஆலைக்காரர்கள் 900 ரூபாவை விலைகேட்டு விவசாயிகளை நட்டத்திற்குள்ளாக்குகின்றார்கள். எனவே, நெல்லின் உத்தரவாத விலையை இவ்வருடம் 1200 ரூபாவாக ஆக்குவது என விவசாயிகளால் தர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கமநலசேவைகள் அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், செலான் வங்கி நிறுவன அதிகாரிகள், விவசாயிகள் எனப்பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனா,

வழுக்கியாற்றுப் புனரமைப்பு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விவசாய சம்மேளனங்கள் முன்னின்று வேலைத் திட்டத்தை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்கவேண்டும். விவசாயிகள், கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து பயனடைய வேண்டும். கமநல சேவை நிலையங்களூடாக விவசாய வங்கிகள் ஆரம்பிக்கப்படடுள்ளன. இவற்றில் இருந்து விவசாயிகள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும் என கூட்டத்தில் சிறப புரையாற்றிய உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் கேட்டுக்கொண்டார். (3-152)

## சுனாமி மீள்கட்டுமானத்துக்கு உதவ

# புதிதாக ஐந்து பயிற்சி நெறிகள் தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க வசதியாக பயிற்சிநெறி ஒன்றினை யாழ்.தொழில்நுட்பக்கல்வி நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தில், நீர்க்குழாய் பொருத்துதல், மரவேலை, கட்டட நிர்மாணம், மின்உருக்கி ஒட்டுதல், வீட்டுமின் இணைப்பு ஆகிய 5 பயிற்சி நெறிகள் அடக்குகின்றன.

இப்பயிற்சி நெறிகளில் கலந்துகொள்பவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் -

பயிற்சி முடிவில் இம்மாணவர்களுக்கு 5 மாத வேலைத் தளப்பயிற்சி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இப்பயிற்சி நெறிகளுக்குரிய அடிப்படைக்கல்வித் தகைமை தரம் 8 சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இப்பயிற்சி நெறியில் பயில விரும்பும் மாணவர்கள உடனடியாக யாழ்.தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுமாறு அதிபர் ந.யோகராஜன் கேட்டுள்ளார். (3-12)

# ஜேர்மன் நிறுவனம் அமைத்த வீடுகளும் சுனாமியால் சேதம் அடைந்தன

## அதன் அதிகாரி தகவல்.

யாழ்ப்பாணம்,மார்ச்2

கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் ஜி.ரி. இசற் நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட 47வீடுகள் சுனாமி அனர்த்தம் காரணமாகச் சேதமடைந்துள்ளன.

மேற்படி வீடுகள் ஒவ்வொன்றும் தலா 2 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டன என்றும் - இவ்வீடுகளில் மக்களை குடியமர்த்துவதற்கு முன்னரே அவை சுனாமியால் அழிவடைந்து விட்டன எனவும் - ஜி.ரி.இசற் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர்களுக்கான வீடுகள் வேறு இடங்களில் அமைக்க் நடவடிக்கைகளை நாம் எடுத்துவருகின்றோம். அத்துடன், சுனாமியால் தமது சொந்த வீடுகளை இழந்த குடும்பங்களுக்கும் எமது திட்டத்தின் கீழ் உதவவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (3-203)

# சுனாமி நிவாரணக் கொடுப்பனவு தென்மராட்சிக்கு இன்னும் கிட்டவில்லை

தென்மராட்சி,மார்ச்2

சுனாமி கடல் பேரலைகளினால் பாதிக்கப்பட்டு தென்மராட்சி பிரதேசத்தில் தங்கியிருந்த குடும்பஙகளுக்கு நிவாரண உதவிக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய பிரதேசங்களில் தங்கியிருந்த மக்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலகத்துடன் தொடர்புகொண்டபோது -

சுனாமியால் பாதிக்கப்பட்டு பிரதேசத்தில் தங்கியிருந்த 124 குடும்பங்களின் பட்டியல் யாழ். செயலகத்திற்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பல குடும்பங்கள் இதுவரை வங்கிக் கணக்கு இலக்கங்களை வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த குடும்பங்கள் தத்தமது பிரதேசங்களுக்குச் சென்றுள்ளதாகவும் இக்குடும்பங்களின் வங்கிக் கணக்கு இலக்கம் வழங்கியதும் இக்கொடுப்பனவு நிலுவையுடன் வழங்க ஏற்பாடு செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், சாவகச்சேரி மக்கள்வங்கி முகாமையாளருடன் தொடர்புகொண்டபோது இக்கொடுப்பனவு வழங்கும் காசோலைகளோ, அறிவுறுத்தல்களோ இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார். (3-117)

# கற்கடதீவு அந்தோனியார் உற்சவம் சிறப்புற நிறைவு

நல்லூர்,மார்ச்2

கற்கடதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்புற நடைபெற்றது. காலை 7மணிக்கு திருப்பலிப் பூசையையடுத்து. இடம்பெற்ற சுற்றுப்பிகாரத்துடன் திருவிழா நிறைவடைந்தது.

சுமார் ஆயிரத்து 500 இற்கும் அதிகமான யாத்திரிகர்கள் திருப்பலிப் பூசைகளில் கலந்துகொண்டனர். இம்முறை மன்னாரில் இருந்து மிகக் கூடுதலான யாத்திரிகர்கள் வந்திருந்தனர் என்று அங்கு சென்றுதிரும்பிய எமது செய்தியாளர் தெரிவித்தார்.

திருப்பலிப் பூசைகளை நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு ஜெபநேசரட்ணம் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். (த-111)

## கடவுளின் நியமங்களைக் கடைப்பிடிப்போம்

### தவக்காலச் சிந்தனை

### இருபத்தியிரண்டாம் நாள்

உலகத்தில் சிறந்த நாடு எது? நாட்டிலே சிறந்த குடிமகன் யார்? முதல்தர நாடு! மூன்றாம்தர நாடு! பொருள் என்ன? பொருளாதாரத்தையே மையமாக வைத்துப் பிரிக்கப்படுகிறது. அடாவடித்தனம் செய்து பிறநாடுகளைச் சுரண்டிப் பிழைக்கும் நாடுகளே முதல்தர நாடுகளாகக் கணிக்கப் படுகின்றன. முதல்தரக் குடிமகன் நாட்டுப்பற்று மிக்கவன். நாட்டின் சட்டங்களைத் தெரிந்து மதித்து நடப்பவன். முதல்தர நாடுகளின் கடமை பிற நாடுகளை, அவை களின் கொள்கைகளை மதித்து வாழ வழி செய்வதேயாகும். கொள்கைகளை மதித்து, சட் டங்களை மீறுகிற நாடோ, தனிநபரோ தரமிழந்தவர்கள். கானான் தேசம் கடவுளின் கொடை இஸ்ராலேயர் கடவுளின் நியமங்களைக் கடைபபிடித்து ஒழுகினால் இப்பேரின்பமும் ஞானமும் அறிவாற்றலும் கொண்டது என பல நாடுகள் மத்தியில் பெருமை பெறும். (இச-4:6) கடவுளின் நியமங்கள் வாழ்வளிப்பவை. அவை என்றும் அழியாத்தன்மை கொண்டவை. யாரும் அழிக்கவும் முடியாது. நம்மை நாமே சிறப்பாக்கிக் கொள்ள, நம்மைச் சுற்றியுள்ளோரை சிறப்பாக்க நியமங்களைக் கடைப்பீடிப்போம்.

ப.சுதா.

# செய்திக் கொத்து

### மதகு சேதம்; போக்குவரத்து சிரமம்

சாவகச்சேரி,மார்ச்2

நுணாவில் கனகன்புளியடி வீதியில் கனகன் புளியடிச் சந்தியிலுள்ள மதகு உடைந்து காணப்படுவதால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்யமுடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த மதகு உடைந்து நீண்டகாலமாக அப்படியே காணப்படுகின்றது. இதனைத் திருத்துவதற்கு எவரும் நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

எனவே, இதுதொடர்பாக உரியவர்கள் கவனமெடுத்து இந்தப் பாலத்தைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோருகின்றனர். (3-203-31)

### சரசாலை நூலகத்தை புனரமைக்க ஏற்பாடு

வரணி,மார்ச்2

கடந்தகால இராணுவ நடவடிக்கையின் போது தென்மராட்சிப் பிரதேசத்தில் மிக மோசமாகப் பாதிப்படைந்த சரசாலை பொதுநூலகத்தைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தெரிவித்தார். தற்சமயம் நூலகத்தின் ஒரு பகுதியில் குறைந்த வளங்களுடன் இயங்குகின்றது. (3-170)

### மயானத்தின் நிலை மோசம்

செம்பியன்பற்று,மார்ச்2

புலோலி, ஆனைவிழுந்தான் மயானத்திற்கு அருகில் உள்ள காணிகளில் விலங்குக் கழிவுகள் மற்றும் குப்பை கூழங்கள் போன்றவை கொட்டப்பட்டுவதால் இம்மயானத்திற்குச் செல்வோர் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன், இம்மயானம் பற்றைகள் வளர்த்தும் காணப்படுகின்றது.

புலோலி, தும்பளை உட்படப் பல கிராம மக்கள் பயன்படுத்தும் இம்மாயனத்தைத் துப்புரவு செய்து மக்கள் பாவனைக்கு விடுமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.(3-203-36)

### மணற்காட்டு மக்களுக்கு தற்காலிக குடிசைகள்

செம்பியன்பற்று,மார்ச்2

புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் தங்கியிருந்த மணற்காட்டுப் பகுதியைச் சேர்ந்த 47 குடும்பங்களுக்குத் தற்காலிக குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான குடிசைகளை அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் நிதி உதவியுடனும் மலசலகூட வசதிகளை ஜி.ரி.சற் அமைப்பின் நிதி உதவியுடனும் குடிதண்ணீர் வசதிகளை போரூட் நிறுவனத்தின் உதவியுடனும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (3-203-36-173)

### மலசலகூடம் நிறுவ காசோலைகள்

தென்மராட்சி,மார்ச்2

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்தவருடம் மலசலகூட நிர்மாணத்திற்காக மானியம் கோரி விண்ணப்பித்தவர்களில் 300 பேருக்கான காசோலைகள் வந்துள்ளன.

விண்ணப்பித்தவர்கள் மீசாலை ஐயா கடையடியில் உள்ள சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் காசோலையினைப் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவருக்கும் 3 ஆயிரம் ரூபா காசோலை அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-203-117)

### மணல் இன்மையால் கட்டடத் தொழிலாளர் சிரமம்

கரவெட்டி,மார்ச்2

வடமராட்சிப் பகுதியில் மணல் ஏற்றுவதற்கு தடை விதித்துள்ளதால் கட்டடத் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வீடுகள் கட்டிய குறையில் உள்ளதாகவும், புதிதாகக் கட்டடங்கள் அமைப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் உள்ளதாகவும் இந்த நேரங்களில் மணல் விநியோகம் தடைப்பட்டுள்ளமை பெரும் சிரமங்களை ஏற்படுத்துகின்றன எனவும் கட்டடத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக உரியவர்கள் கவனமெடுத்து இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர். (3-203-70)

### சிறுதானியச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

வட்டுக்கோட்டை,மார்ச்2

வலிகாமம் மேற்குப்பகுதி விவசாயிகள் நெல் அறுவடையைத் தொடர்ந்து சிறுதானியப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இவர்கள் நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்ட நெற்காணிகளில் எள்ளு, பயறு போன்ற சிறுதானியங்கள் விதைத்து வருகின்றனர்.

அராலி, வட்டுக்கோட்டை, சங்கரத்தை, அரசடி, சுழிபுரம், குளிப்பன் போன்ற இடங்களில் உளள வயல்களில் சிறுதானியச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (3-203-161)

### வகுப்பறைகள் அமைக்க நடவடிக்கை

வரணி,மார்ச்2

சுனாமி பேரலை அனர்த்தம் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் 11 தற்காலிக வகுப்பறைகள் அமைப்பதற்கு வடமராட்சிக் கல்வி வலயம் நடவடிக்கை எடுத்துள்ளது. வடமராட்சிக் கிழக்கில் இந்த பாடசாலை மிக மோசமாகப் பாதிப்படைந்தமை குறிப்பிடத்தக்கது. (3-170)

### சாவகச்சேரி மயானம் சிரமதானம் மூலம் புனரமைப்பு

சாவகச்சேரி,மார்ச்2

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் ஏறபாட்டில் எதிர்வரும் 6ஆம் திகதி இந்தத் துப்புரவுப பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் -

இந்த சிரமதானப் பணிகளில் பொதுமக்களையும் இணைந்து செயற்படுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (3-203-31)

### வெப்ப நோய்கள் பரவுகின்றன

அரியாலை,மார்ச்2

யாழ்.குடாநாட்டில் கடும் வரட்சி நிலவி வருவதால் மக்கள் மத்தியில் வெப்ப நோய்கள் பரவி வருகின்றன.

காய்ச்சல், தடிமல் மற்றும் அம்மாள் வருத்தம் போன்ற நோய்கள் தற்போது மக்கள் மத்தியில் வேகமாகப் பரவிவருகின்றன.

தற்போது நிலவும் இந்தக் கடும் வெப்பக் காலநிலையால் மக்கள் பகல் வேளைகளில் பெருஞ்சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். (3-203-17)

### நெடுந்தீவு ஆஸ்பத்திரிக்கு ஓட்டோ கிடைக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்2

நெடுந்தீவு வைத்தியசாலைப் பயன்பாட்டிற்கு வாகன வசதிகள் எதுவும் இல்லாமையால் அவர்களின் அவசர தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக முச்சக்கர வண்டி (ஓட்டோ) ஒன்றை வழங்குவதறகான நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஸ் எடுத்துள்ளார்.

அண்மையில் நெடுந்தீவுக்குச் சென்றிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஓட்டோ கிடைக்கும் பட்சத்தில் நெடுந்தீவு மேற்கில் உள்ள வைத்திய நிலையத்திற்கு முன்புபோல் வைத்திய அதிகாரிகள் வாரத்திற்கு இரு தடவை சென்று சிகிச்சைகளைச் செயயலாம் எனவும் -

அவசர நோயாளர்களை மிகவிரைவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்கக் கூடியதாக இருக்கும் என்றும் மேற்படி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-203-111)

### அடிப்படை வசதியின்றி காந்தி கிராம மக்கள் சிரமம்

கோப்பாய்,மார்ச்2

கோப்பாய் மத்தி காந்தி கிராமத்தில் அடிப்படை வசதிகள் குறைவாக உள்ளமையால் அக்கிராம மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இக்கிராமத்தில் 38 குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் அங்கு 10 கழிப்பறைகளும், 2 குழாய்க் கிணறுகளும் உள்ளன.

இதனால், சிறுவர்கள் உட்படப் பெண்களும் அடிப்படை சுகாதார வசதிகள் இன்றிப்பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

அத்துடன் அண்மையில் வன்னியிலிருந்து வந்த மேலும் 10 குடும்பங்கள் இக்கிராமத்தில் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

எனவே, உரியவர்கள் இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து இக்கிராம மக்களின் சுகாதாரத்தைப் பேண உதவவேண்டும் என்று - கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-203-72)

### நாவலர் மண்டபத்தில் மிருதங்கம், வயலின் வகுப்புகள்

யாழ்ப்பாணம்,மார்ச்2

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தின் ஏறபாட்டில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இலவசமாக மிருதங்கம், வயலின் வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

சின்னையா துரைராசாவினால் மிருதங்க வகுப்புகளும், கிருஷ்ணசாமி பத்மநாதனால் வயலின் வகுப்புகளும் நடத்தப்படவுள்ளன.

இவ்வகுப்புகளில் பங்குபற்ற விரும்புவோர் தங்களுடைய விவரங்களை நாவலர் மணி மண்டபத்தில் பதிவுசெய்து கொள்ளலாம் எனவும் -

வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அறிவித்துள்ளார். (எ-203)

# நாட்டுப்பற்றாளர் ஏரம்பு மறையவில்லை; எங்கள் மனங்களில் என்றும் வாழ்வார்!

## புலிகளின் மூத்த பிரமுகர் க.வே.பாலகுமாரன் அஞ்சலி



கிளிநொச்சி,மார்ச்2

நாட்டுப்பற்றாளர் ஏரம்பு மறையவில்லை அவர் எங்கள் மனங்களில் என்றும் வாழப் போகிறார்.

-இவ்வாறு விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.




கடந்த 23 ஆம் திகதி காலமான நாட்டுப் பற்றாளர் ஏரம்புவின் இறுதி வணக்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

நாட்டுப்பற்றாளர் ஏரம்பு பிறருடைய இயல்பை ஏற்று அவர்களுடன் இயைந்து செயற்படும் நற்குணவாளர். அறிவோடு வாழவேண்டும் என்பதை அவர் வாழ்ந்து காட்டியுள்ளார். விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு வாழும் வரலாறாக ஒரு தர்க்க ரீதியான முடிவை எய்திய ஒரு பெருமனிதர் அவர். இவர் தந்தை செல்வாவின் போராட்டம் முதல் போராட்ட வித்துக்களுடன் இணைந்து செயற்பட்டுள்ளார்.

நாட்டுப்பாற்றாளர் ஏரம்பு மறையவில்லை. எங்கள் மனங்களில் என்றும் வாழ்வார். அத்துடன், எம் தேசத்தின் ஆன்மாவாக என்றும் வாழ்வார் என்றார்.

தூயவன் அரசறிவியல் கல்லூரியில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி, தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் அருட்திரு பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஆகியோரும் உரை நிகழ்ததினர்.

நாட்டுப்பற்றாளர் ஏரம்புவின் புகழுடலுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, காவல்துறைப பொறுப்பாளர் ப.நடேசன் ஆகியோரும் - தளபதிகளான கேணல் விதுஷா, கேணல் துர்க்கா, கேணல் தீபன் கேணல் ஜெயம் ஆகியோரும்- மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர்.



இதனைத் தொடர்ந்து நாட்டுப்பற்றாளர் ஏரம்புவின் புகழுடல் கிளிநொச்சி திருநகர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தீயுடன் சங்கமமாகியது. (எ-13)

## ஒட்டுசுட்டானில் வீதி பலத்த சேதம்

ஒட்டுசுட்டான்,மார்ச் 2

ஒட்டுசுட்டான் தட்டையன்மலை வீதி போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றது.

இவ்வீதியின் திருத்த வேலைகளை மேற்கொள்ளவதற்கு முத்தையன்கட்டுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் ஒப்பந்தம் செய்திருந்தபோதிலும் இதுவரை அந்த வீதி திருத்த வேலைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே, இந்த வீதி திருத்த வேலைகளை உடனடியாக மேற்கொண்டு மக்களின் போக்குவரத்திற்கு உதவ முன்வரவேண்மென்று அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(த-341-203)

## வன்னிப் புனர்வாழ்வு அமைச்சரும் உதவி

ஒட்டுசுட்டான்,மார்ச்2

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென ஒரு தொகுதி நிவாரணப் பொருள்களை வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் றிஷாத் பதியுதீன் அண்மையில் அனுப்பிவைத்தார்.

நீரிறைக்கும் இயந்திரம் -18 , கண்ணாடி இழைப்படகு ஒட்டுவதற்குப் பயன்படும் பசை - 13 பரல், நான்காயிரம் பாடசாலைப் பைகள், 204 சமையல் அடுப்புகள் என்பனவே இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(எ-341-204)

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

பரந்தன்,மார்ச்2

சுனாமியினால் பாதிக்கப்பட்ட கல்லாறு சாந்தா முன்பள்ளிச் சிறார்களுக்கும் ஆனையிறவு அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவினர் இவற்றை வழங்கியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டக் கல்வி மேம்பாட்டு நிலைய ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேற்படிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மேற்படி பொருள்களை அந்ததந்தப் பாடசாலைகளில் வைத்து கடந்த 24 ஆம் திகதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வழங்கினர்.

(எ-203-352)

★ ★ ★

புதுக்குடியிருப்பு, மார்ச்2

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வவுனியா மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தினால் பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

சுமார் 41 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த உபகரணங்களை வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.இராகுநாதபிள்ளை முல்லைத்தீவுச் செயலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

(எ-202-353)

## முழங்காவில் ஆஸ்பத்திரி விடுதியில் மலசலகூடத்தைப் பயன்படுத்தத்தடை

### நோயாளர் தரப்பில் முறைப்பாடு

வெள்ளாங்குளம்,மார்ச்2

முழங்காவில் வைத்தியசாலை ஆண் நோயாளர் விடுதியில் உள்ள மலசலகூடத்தை நோயாளர்கள் பயன்படுத்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடுதிக்குரிய மலசலகூடங்கள் அமைக்கும் பணிகள் பூர்த்தியாகியுள்ளன. எனினும், அவற்றைப் பாவிப்பதற்கு நோயாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

இதனால், நோயாளர்கள் இயற்கைக் கடனைக் கழிப்பதற்காக வெகுதூரம் செல்லவேண்டியுள்ளது.

பெருஞ்சிரமப்படும் இந்நோயாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென நோயாளர்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-415-204)






வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம் விவசாயிகளின் நலன்கருதி நெற்கதிரை அறுவடை செய்து சூடு மிதிக்கும் இணைந்த பொறிமுறை இயந்திர அறிமுக விழாவை அண்மையில் கிளிநொச்சியில் நடத்தியது. இந்நிகழ்வில் வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவன முகாமையாளர் சி.புவனேஸ்வரன் அறுவடை இயந்திரம் தொடர்பாக விளக்கமளிப்பதை மேலுள்ள படத்தில் காணலாம். மன்னாரில் கறுக்காய்க்குளம் கிராமத்தில் பிரஸ்தாப இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட படத்தைக் கீழே உள்ள படத்தில் காணலாம்.

*(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*

## துணுக்காய் பிரதேசத்தின் அபிவிருத்தி குறித்து ஆராய்வு

துணுக்காய்,மார்ச்2

துணுக்காய்ப் பிரதேசத்தில் இந்த வருடம் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவதற்கான கலந்துரையாடல் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி பிரதேச அரசியல்துறைச் செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

அரசியல்துறைப் பொறுப்பாளர் கா.செல்வன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மக்களின் பயன்பாட்டில் உள்ள பிரதான வீதிகள் சீரமைத்தல், மின்சார வசதிகளை ஏற்படுத்துதல், பொதுக்கிணறுகள் அமைத்தல், இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியமர்த்தி அபிவிருத்திகளை மேற்கொள்ளல், ஏனைய அபிவிருத்தித் திட்டங்களையும் இதற்கான ஒழுங்குகளையும் மாவட்ட அரச செயலகங்களுடன் தொடர்புகொண்டு தீர்மானித்தல், தொடர்பான பல விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் துணுக்காய் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் அ.அமிர்தலிங்கம், துணுக்காய்ப் பிரதேச திட்டமிடல் பணிப்பாளர் திருமதி காந்தி சிறிகாந்தராஜா, பாண்டியன்குளம் - துணுக்காய் அபிவிருத்திக் கழக இணைப்பாளர் க.ஜீவகாருண்ணியம், முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி ஆகியோர் கலந்துகொண்டனர்.

(த-204)

## வீதி புனரமைக்கப்படுகிறது

ஒட்டுசுட்டான்,மார்ச்2

கற்சிலைமடுவில் இருந்து தினேஸ் சிறுவர் பாடசாலை சென்றடையும் வீதி திருத்த வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

நீண்டகாலமாகத் திருத்தப்படாது இருந்த வீதிகளில் ஒன்றான மேற்படி வீதி ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் உதவியுடன் தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை, கற்சிலைமடு முத்தையன் கட்டு பிரதான வீதி புனரமைப்புச் செய்யப்படாது உள்ளமையால் அவ்வீதியால் செல்லும் பேருந்து சேவையும் தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-203-341)

## சாரணத் தந்தையின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

புதுக்குடியிருப்பு,மார்ச்2

சாரணியத்தின் தந்தை பேடன் பவல் பிரபுவின் நினைவுதினம் அண்மையில் முல்லைத்தீவு சிறீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

சாரண மாணவர் தலைவன் இ.கமித்ராசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியை சாரணர் மாவட்ட உதவி ஆணையாளர் வே.ஜெயம் சபாபதியும் பாடசாலைக் கொடியை அதிபர் செ.இரவீந்திராசாவும் சாரணர் கொடியை சாரண மாணவர் தலைவர் கமித்ராசனும் ஏற்றிவைத்தனர்.

இந்நிகழ்வில் வேலை வாரத்தில் பணம் சேகரித்த மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (எ- 353-202)

## பிரான்ஸ் மருத்துவக்குழு மல்லாவியில் சேவை

மல்லாவி,மார்ச்2

மல்லாவி அரசினர் வைத்தியசாலையில் பிரான்ஸ் நாட்டின் எம்.டி.எம். நிறுவனத்தைச் சேர்ந்த வைத்தியர் குழு சேவையில் ஈடுபட்டுள்ளது.

இந்த மருத்துவக் குழுவினர் வெளிநோயாளர்கள் பிரிவில் பிரத்தியேகமாகவும், விடுதிகளில் அரச மருத்துவர்களுடனும் இணைந்து சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-322-204)

## கால்நடை வளர்ப்போருக்கு பூநகரியில் பயிற்சி வகுப்பு

பூநகரிப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சி வகுப்பு கடந்த 17 ஆம் திகதி குமுழமுனை பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

குமுழமுனை கிராம சேவையாளர் வி.சந்திரபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தியை அதிகரித்தல், சந்தைப்படுத்தல் தொடர்பாக கால்நடை வைத்தியர் டாக்டர் செ.கௌரி திலகன் விளக்கங்களுடன் உரை நிகழ்த்தினார். தொடர்ந்து கால்நடைகளை செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் நல்லின உற்பத்திகள் மேற்கொள்ளல் தொடர்பாக பயிற்சிகளையும், செயன்முறை விளக்கங்களையும் கால்நடை அபிவிருத்தி அலுவலர் க.சூரியகுமாரன் வழங்கினார்.

தொடர்ந்து வீடியோப் படத்தில் விளக்க முறைகள் காண்பிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பெருமளவிலான பண்ணையாளர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-291-204)

## நாச்சிக்குடா பாடசாலைக்கு புதிய அதிபர்

கிளிநொச்சி, நாச்சிகுடா அ.த.க. பா[illegible]லையின் புதிய அதிபராகத் திருமதி ஜெயா[illegible] வாசகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி ஜெ.தனபாலசிங்கம் இப்பா[illegible]லையின் அதிபராகக் கடமையாற்றி கிளிநொ[illegible] புனித திரேசா பெண்கள் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து மேற்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ-323-202)

## தண்ணீரூற்றில் 50 பேருக்கு வீடுகள் கையளிக்கப்பட்டன

முல்லைத்தீவு,மார்ச்2

சுனாமியால் பாதிக்கப்பட்ட தண்ணீரூற்றுப் பாடசாலை நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 50 குடும்பங்கள், முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பில் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட சுனாமிப் புனர்வாழ்வு செயலணிக் குழுவின் பணிப்பாளர் றெஜி, கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான தளபதி தினேஷ், செயலணிக்குழு இணைப்பாளர் ஈழமாறன், சுனாமி அனர்த்த வேலைத்திட்ட ஒருங்கிணைப்புப் பணிப்பாளர் வின்சன், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், தமிழர் புனர்வாழ்வுக் கழக முல்லைத்தீவு மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தி, சிறுவர் நலத்திட்டப் பணிப்பாளர் ரவி ஆகியோர் வீடு கையளிப்பில் கலந்துகொண்டனர்.

(3-204)

## உடனடி வேலைவாய்ப்பு

- COMPUTER GRAPHIC DESIGNER
- TYPESETTER
- BINDER TRAINEE

திறமை, அனுபவம் ஆகியவற்றை வெளிக்காட்டும் ஆதாரங்களுடன் எதிர்வரும் 05.03.2005 சனி காலை 9.00-12.00 இடையே நேரில் வரவும்.

**சுந்தர் வெளியீடு**

844, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 7086.
(கோயில் வீதிச் சந்திக்கு அருகில்)
(42620)(42-11-18-26)


## கண்ணீர் அஞ்சலி

**அமரர் கொன்ஸ்ரன்ரயின் யேசுதாஸ்**
(முத்துராசா)



அச்சுவேலி மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் உறுப்பினரும் புத்தூர் கமநல சேவைகள் குழுவின் உறுப்பினருமான

கொன்ஸ்ரன் ரயின் யேசுதாஸ்
(முத்துராசா)

அவர்கள் 2005.02.26ஆம் திகதி சனிக்கிழமை காலமானதையிட்டு மிகவும் துயருறுகின்றோம். பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கமநல சேவைகள் உதவி ஆணையாளர்,
பெரும்பாக உத்தியோகத்தர்,
கமநலக் குழுத் தலைவர், உறுப்பினர்கள்,
கமநல சேவை நிலைய ஊழியர்கள்,
விவசாய சம்மேளனங்கள்.

கமநல சேவைகள் நிலையம்.
புத்தூர். (42614)(42-11-18-26)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 1932 - 05 - 06

விண்ணில் 2005 - 01 - 31



**திருமதி முருகன் அன்னப்பிள்ளை**

பாசத்தின் இருப்பிடமாய் பண்பின்
பிறப்பிடமாய்த் திகழும் எங்கள் குடும்பத்தின்
குல விளக்கே!
உன்னை எங்கும் தேடுகின்றோம்
ஆயிரம் உறவிருந்தும் அம்மா என்றழைக்க
நீ இல்லையே ~ கனத்த மனதுடன்
காத்திருக்கின்றோம்.

இன்று (02.03.2005) புதன்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பலாலி றோட்,
உரும்பிராய் வடக்கு,
மடத்தடி. (42622) (24-11-18-26) - குடும்பத்தினர்.


## உடன் தேவை

அச்சகத்தில் வேலைசெய்த முன் அனுபவமுள்ள கணனி கிராபிக் தெரிந்தவர் தேவை. அத்துடன், ஓவ்செற் மெசினில் உதவியாளராகப் பணிபுரியக் கூடிய வேலை தெரிந்த ஒருவரும் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:
American Ceylon Mission Press,
Undergraduate Section,
No. 464, Hospital Rd., Jaffna.
(42609)(42) (23-11-18)

## துளசி நெற் கொம்

எம்மிடம்......
அனைத்துத் தொலைபேசித் தொடர்புகளுடன் எல்லாவித கொம்பியூட்டர் ரைப் செற்றிங் வேலைகளும்,
★ ஸ்கிறீன் பிறின்ரிங்
★ ஓவ்செற் வேலைகள்
அனைத்தும்
சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

31, ஆடியபாத வீதி
(கல்வியங்காடு சந்தை பின்புறம்)
T.P.: 021 4590746
(42619)


## சேவைநலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்2

சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை உப அதிபராகக் கடமையாற்றிய ஏ.சி. சண்முகலிங்கத்தின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும், மலர் வெளியீடும் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் சு.சண்முககுலகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சங்குவேலி பிள்ளையார் கோயில்பூசகர் சிவஸ்ரீ வா.பாலசுப்பிரமணியக்குருக்களின் ஆசியுரையையும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உபஅதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் சிறப்புரையும் இடம்பெறும்.

வாழ்த்துரைகளைத் தொடர்ந்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் இ.மருதலிங்கம் மலர்வெளியீட்டுரையை நிகழ்த்தி மலரினை வெளியிட்டுவைப்பார். (3-204)

## உயர்கல்வி மாணவர்கள் 50 பேருக்கு பேரவை உதவி

யாழ்ப்பாணம்,மார்ச்2

சுனாமியால் பாதிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவன மாணவர்களில் தெரிவுசெய்யப்பட்ட 77 மாணவர்களில் 50 பேருக்கு முதல்கட்ட உதவிக் கொடுப்பனவுகள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் வழங்கப்படவுள்ளன.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் வூஸ்க் (Wusc) நிறுவனம், றீடோ (REERDO) ஆதரவில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இந்த முதல்கட்ட உதவிகளைப் பெறத் தெரிவான 50 மாணவர்களின் விவரங்களை அறிவதற்கு நாளை வியாழக்கிழமை பேரவைக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-12)

## கட்டாக்காலி நாய்களை அழிக்குமாறு உத்தரவு

தென்மராட்சி, மார்ச்2

உள்ளூராட்சிச் சபை பகுதிகளில் கட்டாக்காலிகளாக அலையும் நாய்களைப் பிடித்து அழிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவித்துள்ளார்.

சுனாமி கடல் பேரலை அனர்த்தங்களின் போது கைவிடப்பட்ட நாய்களால் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் -

கட்டாக்காலி நாய்களை அந்தந்தச் சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து பிடித்து அழிக்குமாறும் - அவர் கேட்டுள்ளார்.(எ-117)

## வரணி வடக்கில் மணல் அகழ்வு

வரணி வடக்குப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழந்தெடுக்கப்படுவதால் அப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. அங்குள்ள காணியில் ஆறு அடி ஆழத்திற்கு மேல் மணல் அகழ்ந்தெடுக்கப்படுவதாகவும் -

வருடாவருடம் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நின்று மக்கள் இடம் பெயர்ந்து வருவதாகவும் - கூறப்பட்டது.

தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் இவ்வாறு மணல் ஏற்றிச் செல்வதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. (எ-117)

## வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இன்று கடமையைப் பொறுப்பேற்பர்

யாழ்ப்பாணம்,மார்ச்2

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடமாற்றத்திட்டத்தின் பிரகாரம் யாழ். மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்கள் இன்று தமது புதிய வலயங்களில் கடமையைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

இதன்படி, யாழ்.கல்விவலயத்தில், வடமராட்சி கல்வி வலயத்தில் பணியாற்றிய வே.தி.செல்வரட்ணமும் -

வடமராட்சி கல்வி வலயத்தில் தென்மராட்சி கல்வி வலயத்தில் பணியாற்றிய வ.செல்வராசாவும் -

தென்மராட்சி கல்வி வலயத்தில் வலிகாமம் கல்வி வலயத்தில் பணியாற்றிய திருமதி றெஜினா இருதயநாதனும் -

வலிகாமம் கல்வி வலயத்தில் யாழ்.கல்வி வலயத்தில் பணியாற்றிய ப.விக்கினேஸ்வரனும் -

தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர். (எ-12)


உ

## வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயில்

(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்)

**பதவி வெற்றிடம்**

1. இரவுப்பாதுகாப்பு ஊழியர் (ஆண்கள்)
2. அறநெறிப்பாடசாலை ஆசிரியை (ஜி.சீ.ஈ.சா/த, உ/த சித்தி)

ஆலயத்துக்கு அருகில் உள்ளவர்க்கு முன்னுரிமை
(சனி, ஞாயிறு பொதுவிடுமுறை நாள்களில் வகுப்பு நடைபெறும்)
☞ இரு பதவிகளுக்கும் ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
தகுந்த வேதனம் வழங்கப்படும்.

655, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (42624)(26-11-18)
வி.மாணிக்கம் (செயலாளர்)

15 வருடங்களுக்கு மேலாக இன்றும் முன்னணி இசைக்குழுக்களில் ஒன்றான
தலைசிறந்த இசையமைப்பாளர்கள்
**ஸ்ரீகுகன் சிவராமின்** இசையமைப்பில்
ஈழத்தின் முன்னணிப் பாடகர்கள்
முன்னணி இசை நட்சத்திரங்கள்
ஒருங்கே சங்கமிக்கும்

**ஸப்தஸ்வரா இசைக்குழு**

எம்மை அழைத்திட தொடர்புகொள்ள வேண்டிய இடம்:

ஸ்ரீகுகன் - துளசி நெற் கொம்
கல்வியங்காடு சந்தை பின்புறம்
ஆடியபாதம் வீதி.
T.P.: 021 - 4590746

S.நிரோஜன்,
மத்தியூஸ் வீதி,
சுண்டிக்குளி.
T.P.: 0777 - 262405

(42618)(26-11-18)

வெதுப்பக உற்பத்தி சம்பந்தமான
## இலவச கருத்தரங்கு

எஸ்.கே.என்ரபிறைஸ் நிறுவன அதிபர் K.சிவகுமாரன் அவர்களின் அனுசரணையில் யாழ்.மாவட்டத்தில் வெதுப்பக உற்பத்தி சம்பந்தமான இலவச கருத்தரங்கு ஒன்று ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.
இடம்: தினேஸ் வெதுப்பகம் – மானிப்பாய்
காலம்: 03.03.2005 வியாழக்கிழமை காலை 9.00 - 3.00 வரை
வழங்குபவர்: றொபேட் டி மெயர்
ALGIST BRUGGEMAN COMPANY பெல்ஜியம்
(சர்வதேச வெதுப்பக ஆலோசகர்)
வெதுப்பக உற்பத்தியாளர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய். -தினேஸ் வெதுப்பகம்.
(42621)(42-11-18-26)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



**திருமதி தம்பிப்பிள்ளை சரஸ்வதி**

தோற்றம் 06-11-1931

மறைவு 31-01-2005

பொழுதுகள் மௌனத்துக்குள் கரைந்தாலும்
முப்பத்தொரு நாள்கள் மட்டுமல்ல
ஆண்டுகள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகள் ஆறாது அம்மா!

கடந்த 31.01.2005 அன்று அமரத்துவமடைந்த எமது அன்னையின் மறைவுச் செய்தி அறிந்து எமக்குப் பல்வேறு வகைகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (02.03.2005) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். - குடும்பத்தினர்.

வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கு. (42617)


**An Indian Leading Enterprise in Computer & Electronics has Introduced their marvellous Technology in Jaffna along with their team**

All of our Engineers are well Qualified & experienced

* All with 3 years immediate Replacement warranty

The only centre for motivated designs in Computer Hardware

OUR SPECIAL PACKAGES

Compaq PIII
550, 600, 733, 800, 1GHz
128 SDRAM,10GB Hard Disk,
1.44FDD, 52X CDROM,
15" color Monitor,
Keyboard, Mouse
Rs. 32,000/- முதல்

Intel PIV
128 SDRAM,40GB Hard Disk,
1.44FDD, 52X CDROM,
ATX Tower with Front USB & Audio, 15" color Monitor,
Keyboard, Mouse
Rs. 48,900/- முதல்

Proud be An Indian Technology at Jaffna

Knowledge beyond the technology. That's CeSCO

முழு டிஸ் அன்டெனா செட் 12999/- முதல்

பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட யப்பான் டெலிவிசன்கள் மற்றும் ஓடியோ வீடியோ சாதனங்கள்

டிஸ் எல்என்பி மற்றும் ரிசீவர்



Institutions, Schools & Dealers க்கு விசேட சலுகைகள் உண்டு

Our New introduction Special Satellite Channel interfaces with Computer

தரம் சாதாரம் மற்றும் நிரந்தரம் எமது தாரக மந்திரம்

CeSCO

56/15, Stanly Road, Jaffna. (Behind Bank of Ceylon)

வலிகாமம் வலய மென்பந்துக் கிரிக்கெட்

# சகல ஆட்டங்களிலும் வென்று ஸ்கந்தா அணி சம்பியனானது

யாழ்ப்பாணம்,மார்ச்2

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையில் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மென்பந்துத் துடுப்பாட்டத்தில் சகல ஆட்டங்களிலும் வெற்றி பெற்று சுன்னாகம் ஸ்கந்தாக் கல்லூரி சம்பியனானது.

வலய மட்டத்தில் நான்கு கோட்டங்களில் இருந்தும் 12 அணிகள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றின.

தாம் பங்குபற்றிய ஆட்டங்களில் எல்லாம் வெற்றிபெற்று இறுதியாகச் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய அணியுடன் ஸ்கந்தா அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானைச் சிவப்பிரகாச அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய ஸ்கந்தா அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தப் போட்டியில் இரண்டாம் இடத்தைச் சங்கானைச் சிவப்பிரகாச ம.வியும், மூன்றாம் இடத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரியும் பெற்றன.

இப்போட்டிகள் யாவும் ஸ்கந்தா மைதானத்தில் நடத்தப்பட்டன. இந்தப் போட்டிகளை முநடராசா ஒழுங்கு செய்திருந்தார்.

(3)

# ஸ்ரான்லி - பற்றிக்ஸ் மோதல்

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்றுவருகின்ற சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டத் தொடரில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் ஸ்ரான்லி கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் பற்றிக்ஸ் கல்லூரி அணி 141 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றிக்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 177 ஓட்டங்களை மட்டும்பெற்றது.

ஜெனன்ராஜ் 30 ஓட்டங்களையும், லூட்சன் 49 ஓட்டங்களையும், விதுபாலா 27 ஓட்டங்களையும், அருண் 26 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி வீரர்கள் ரஜீவ்குமார் 44 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், சுதர்சன் 28 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், சியாம்சன் 60 ஓட்டங்களைக்கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

கஜதீபன் 49 ஓட்டங்களையும் சத்தி 21 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களான சுரேன் 26ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், பத்மமுரளி 26 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தா




டிய பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 7 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை மட்டும் பெற்று ஆட்டத்தினை இடைநிறுத்தியது.

லூட்சன் ஆட்டம் இழக்காமல் 60 ஓட்டங்களையும், அருண் 29 ஓட்டங்களையும் விதுபாலா 23 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி வீரர் சியாம்சன் 41 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

232 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பந்துவீச்சில் பற்றிக்ஸ் கல்லூரி அணி வரர்களான சுரேன் 19 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், ஜீனத்ராஜ் 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் பத்மமுரளி 08 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

(3-190)

## கிறீன் கிங்ஸ் வி.கவுக்கு விளையாட்டு உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்2

யாழ். கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு நிதியில் இருந்து 25ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவநேசன் இதற்கான ஒதுக்கீட்டை வழங்கியுள்ளார்.

(3-190)

## சக்தி வி.க. வெற்றி

தொல்புரம்,மார்ச்2

தொல்புரம் சக்தி விளையாட்டுக் கழகத்தினருக்கும் மூளாய் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தினருக்கும் இடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் தொல்புரம் சக்தி விளையாட்டுக் கழகத்தினர் வெற்றி பெற்றனர். (3-ரி)

## மெய்வன்மைப் போட்டி

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் க.பிலேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவநேசன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு. ம.பெ. ஞானரத்தினம் அடிகளார், பெரியவிளான் பங்குத்தந்தை அருட்திரு. ஆர்.எம்.ஜி.நேசநாயகம் ஆகியோர் கலந்துகொள்வர்.

(3-135)



யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட ஏ.பிரிவு போட்டியில் வெற்றிபெற்ற பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணித் தலைவர் எ.டைமனிடம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் இ.ஆனல்ட் அவர்கள் வெற்றிக் கிண்ணத்தினை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, செயலாளர் மு.பிரான்சிஸ் ஆகியோர் நிற்பதைக் காணலாம். (190)

# எல்லைப்படை மாவீரர் நினைவாக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

## இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகிறது

வலி.வடக்கு,மார்ச்2

எல்லைப்படை மாவீரர் நினைவுக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியை இம்மாதம் நடுப்பகுதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைத் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவினர் செய்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட அணி ஒன்றும் கிளிநொச்சி மாவட்ட அணி இரண்டும் மற்றும் தென்மராட்சி பிரதே அணியொன்றும் முதல் தடவையாக கலந்துகொள்கின்றமை சிறப்பம்சமாகும்.

போட்டிகளில் 53 அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் லீக், பருத்தித்துறை லீக் மற்றும் வலிகாமம் லீக் ஆகியவற்றுக்கு உட்பட்ட பெரும்பான்மையான அணிகள் இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்கின்றன.

இந்த மாத நடுப்பகுதியில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதற்கான நிரல் ஒழுங்குகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (3-86)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் குழுநிலைப் போட்டிகள்

## சனியன்று ஆரம்பமாகின்றன

தென்மராட்சி,மார்ச்2

தென்மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான குழு நிலைப் போட்டிகள் எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

குழுநிலைப் போட்டிகள் நடைபெறவுள்ள தினங்களும், மைதானங்களும் வருமாறு:-

**கிரிக்கெட் (ஆண்கள்)**

மார்ச் 5,6 ஆகிய திகதிகள் வரணி மகா வித்தியாலய மைதானம்

**கிரிக்கெட் (பெண்கள்)**

மார்ச் எட்டாம் திகதி - மட்டுவில் வளர்மதி வி.க.மைதானம்

**எல்லே (ஆண்கள், பெண்கள்)**

மார்ச் 12,13 ஆகிய திகதிகள்- மட்டுவில் வளர்மதி வி.க.மைதானம்

**கரபந்தாட்டம் (ஆண்கள்)**

மார்ச் 19 ஆம் திகதி கைதடி சரஸ்வதி வி.க. மைதானம்

**கரபந்தாட்டம் (பெண்கள்)**

மட்டுவில் வளர்மதி வி.க. மைதானம்

வலைப்பந்தாட்டம் மார்ச் 25ஆம் திகதி- மட்டுவில் வளர்மதி வி.க. மைதானம்

**உதைபந்தாட்டம்**

மார்ச் 29ஆம் திகதி - மட்டுவில் வளர்மதி வி.க.மைதானம்

போட்டிகள் யாவும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகுமென பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் எஸ்.சதீஸ்குமார் தெரிவித்துள்ளார்.

(10-117)

# கொக்குவில் இந்துவை இன்னிங்ஸால் வென்றது சென். ஜோன்ஸ் கல்லூரி

யாழ்ப்பாணம்,மார்ச்2

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்று வருகின்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டித் தொடரில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி ஓர் இன்னிங்ஸாலும் 53 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் ரஜிந்தன் 31 ஓட்டங்களையும் பிரதாபன் 31 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிவீரர்களான நிருபன் 21 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், சஞ்சீவன் 15 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், கஜரூபன் ஆறு ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினர் சகல விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் மதன்ராஜ் 77 ஓட்டங்களையும், சகிந்தன் 41 ஓட்டங்களையும் சஞ்சீவன் 30 ஓட்டங்களையும் நிருபன் 25 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிவீரர்கள் செந்தூரன் 109 ஓட்டங்கைளக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் வினேசன் 26 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்களுடன் சுருண்டது.

இதில் செந்தூரன் 17 ஓட்டங்களையும் வல்லவகுமரன் 13 ஓட்டங்களையும் ரம்யராகுலன் ஆட்டம் இழக்காமல் 21 ஓட்டங்களையும் தம் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர் மதன்ராஜ் 16 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், நிருபன் 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், சஞ்சீவன் 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

(3-190)




# யாழ்.இந்து - மகாஜன ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது

வலி.வடக்கு,மார்ச்2

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவுற்றுள்ளது.

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 207 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் மகாஜனக் கல்லூரி வீரர்களான ஜெயப்பிரியந்தன் 69 ஓட்டங்களையும் மயூரன் 37ஓட்டங்களையும் ரவிகாந்த் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

யாழ்.இந்துக் கல்லூரி வீரர்கள் பந்து வீச்சில் தீனதக்சன் 40 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் அருண்குமார் 37 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி 155 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தர்சன் 46 ஓட்டங்களையும் ஜனார்த்தனன் 25 ஓட்டங்களையும் அருண்குமார் 23 ஓட்டங்களையும் ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக் கொண்டனர்.

மகாஜனக் கல்லூரி வீரர்களான புவனேசன் 31 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் ரஜீவ் 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் திலீபன் 33 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் மகாஜனக் கல்லூரி 9 விக்கெட்டை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நேரம் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஆட்டம் முடிவடைந்தது.

தனஞ்செயன் 39 ஓட்டங்களையும் ரவிசாந் 28 ஓட்டங்களையும் ஜீவசங்கர் 17 ஓட்டங்களையும் ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

யாழ். இந்துக்கல்லூரி வீரர்களான ஜனார்த்தனன் 17ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் தீனதக்சன் 37 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டையும் மற்றும் கேமகுமார், உமாதரன் ஆகியோர் முறையே 19, 20 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிக்கொண்டனர். (3-86)

# அழைப்புக் கட்டளை

**சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்**

பெருமாள் கேதீஸ்வரன்
366, திருநகர், கிளிநொச்சி
- வழக்காளி

வழ.இல.05/2005
மணநீக்கம்

எதிர்

கேதீஸ்வரன் பெண் செல்வநாயகி
மே/பா சு.செல்வகுமார்
பொன்மின்னேற்றல் நிலையம்
கண்டி வீதி, கிளிநொச்சி
- எதிராளி

மேற்படி எதிராளிக்கு.

மேற்குறித்த வழக்காளி தங்களிடமிருந்து மணநீக்கம் பெறுவதற்கு இந்த நீதிமன்றில் உமக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார். ஆதலினால் இவ்வழக்கிற்கான பிராதுக்கு உமது மறுமொழியை 2005 ஆம் ஆண்டு 3 ஆம் மாதம் 23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக இந்த நீதிமன்றில் கோப்பிடுமாறு வேண்டப்படுவதோடு குறித்த திகதியில் அல்லது அதற்கு முன்னதாக மறுமொழியை அணைக்கத் தவறும் பட்சத்தில் எதிராளியான நீவிர் இல்லாமலே ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்படும் என்பதை அறிந்து கொள்ளுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீங்கள் தோன்றாவிடின் சட்ட முறையான அறிவித்தலுக்கான யாவற்றையும் சேர்ப்பிக்கக்கூடிய முகவரி ஒன்றை மன்றில் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2005 ஆண்டு 2 ஆம் மாதம் 24 ஆம் திகதி

வரைவு,
ப.குகனேஸ்வரன்,
வழக்காளியின் சட்டத்தரணி.

மன்றின் கட்டளைப்படி
V.நடராசா
பதிவாளர், சாவகச்சேரி
மாவட்ட நீதிமன்றம்.

(42629)(29-43-11-18)

# குறிஞ்சித்தமிழ் சஞ்சிகை சப்பிரகமுவவில் வெளியீடு

சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தின் தமிழ்க் கலாசார மன்றம் 'குறிஞ்சித் தமிழ்-2004' என்னும் சஞ்சிகையை வெளியிட்டுள்ளது. இந்த நிகழ்வு கடந்த மாதம் 18ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. 'குறிஞ்சித்தமிழ்-2004' சஞ்சிகையை இலக்கிய விமர்சகர் லெனின்மதிவாணன் வெளியிட்டு வைத்து விமர்சன உரை மற்றும் அறிமுக உரைகளை நிகழ்த்தினார். தொடர்ந்து இந்தப் பல்கலைக்கழகத்தின் மொழித் துறையின் முதுநிலை விரிவுரையாளர் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் சிறப்புரை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாணவர் சங்கத் தலைவர், ஆங்கிலத்துறைப் போதனாசிரியர் யேசுநேசன், விவசாயபீடத்தின் விரிவுரையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தச் சஞ்சிகை மொழிததுறை விரிவுரையாளர்களின் கட்டுரைகளும், பல்கலை மாணவரிடையே நடத்தப்பட்டு வெற்றி பெற்ற கவிதை, சிறுகதை, நாவல் போன்ற ஆக்கங்களையும் தாங்கி வெளிவந்துள்ளது.

(எ-204)

## தேவை

எமது அலுவலகத்தில் கடமையாற்றுவதற்கு லிகிதர்/உதவியாளர் தேவை. விண்ணப்பங்களை 12.03.2005 ஆம் திகதிக்கு முன் தபால் மூலம் சமர்ப்பிக்கவும்.

நிர்வாகி

நியூ பிஜறற் கல்வி நிலையம், யா/மாட்டின் வீதி.

(21-11-18) (42612)(42)

# மரண அறிவித்தல்கள்

## முருகன் வயிரவன்



மருதங்குளம் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த முருகன் வயிரவன் நேற்று (01.03.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னமுத்துவின் அன்புக் கணவரும் சிவயோகம், அப்பையா (இ.போ.ச. முன்னாள் நடத்துநர் - வவுனியா), பூமணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சின்னையா, அன்னபூரணம், கிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான குஞ்சுப்பிள்ளை, அன்னம்மா மற்றும் தம்பிராசா, இளைப்பாறிய அதிபர்களான சின்னத்துரை, அப்புத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி, தர்மலிங்கம் மற்றும் சண்முகம், இராசம்மா, நல்லம்மா, தங்கம்மா, சிவசம்பு, ஆகியோரின் மைத்துனரும் கனடாவில் வசிப்பவர்களான விஜயகுமார் - சித்திரா, விஜயானந்தன் - சுஜிலா, விஜயரூபன் - சுகன்யா, சுவிஸில் வசிப்பவர்களான சதீஸ்வரன் - வாணி, வசீகரன் - மதி, ஜேர்மனியில் வசிப்பவர்களான லோகேஸ்வரன் - விஜயலதா, யசிதரன், லண்டனிலுள்ள விஜயநிர்மலா - ரவிகரன், ஹொலண்டில் வசிப்பவர்களான ஜெயா - நாகநந்தினி, சிறீதரன் (மக்கள் வங்கி - ஸ்ரான்லி வீதிக் கிளை), நிர்மலா (ஆசிரியை யா/கலைவாணி வித்.கைதடி), ஜீவாதரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2005) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் தெற்கு சின்னத்துா மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மருதங்குளம் வீதி,*
*மட்டுவில் தெற்கு.*
(42627)(43-11-18)

தகவல்:
கி.ஜீவாதரன்
(பேரன்).

## திருமதி கந்தசாமி கண்மணி
### (தங்கம்மா)



வாதரவத்தை, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி கண்மணி 28.02.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், பொன்னுத்துரை கந்தசாமி (ஓய்வு பெற்ற அரசாங்க ஒப்பந்தகாரர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்) அவர்களின் அன்பு மனைவியும் தர்மகுலசிங்கத்தின் (தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி) பாசமிகு தாயாரும் சிவகுமாரியின் மாமியாரும் பிரபாஜினி, சஞ்சீவன், நிஷாந்தினி, ராம்பிரசாத் ஆகியோரின் பேர்த்தியும் கனகமணி, பாலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி), தவமணி, பூபதி, சிவனேசம், காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - ஆச்சிபிள்ளை தம்பதிகளின் மருமகளும் முத்துச்சாமி, துரைச்சாமி, அண்ணாச்சாமி, மகாலிங்கம், முத்தையா, செல்வலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), சிவபாக்கியம் (டென்மார்க்), ஆசைப்பிள்ளை (சுவத்துரை), காலஞ்சென்றவர்களான இரத்தினசாமி, அருந்ததியம்மா, சொர்ணலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2005) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வாதரவத்தை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*வாரவத்தை,*
*புத்தூர்*
(42626+42632)(43-11-18)

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு
(உரிமையாளர், நாகேஸ்வரி ஸ்ரோர்ஸ் கண்டி/யாழ்ப்பாணம்)
(நயினாதீவு, கந்தர்மடம்)



நயினாதீவுச் சுவாமிகள் என அழைக்கப்படும் நயினை ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமிகளின் வழித்தோன்றலும், நயினாதீவு சோமஸ்கந்தர் ஆலய (முத்துச்சுவாமிகளின் சமாதிக் கோவிலின்) மூத்தபரிபாலகரும், நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 22, குமாரசாமி றோட், கந்தர்மடத்தை வதிவிடமாகக் கொண்டவரும், நாகேஸ்வரி ஸ்ரோர்ஸ் (கண்டி/யாழ்ப்பாணம்) முன்னாள் உரிமையாளருமானவேலுப்பிள்ளைதிருநாவுக்கரசு அவர்கள் 28.02.2005 அன்று காலை இறைவனடி எய்தினார்.

அன்னார் அமரர் வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் அமரர் கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் ஏகமருமகனும் சரஸ்வதியின் பாசமிகு கணவரும் திருமகள் செல்வி (பிரான்ஸ்), விவேகானந்தன் (பிரான்ஸ்), சிவானந்தன் (ஜனதா ஸ்ரீவ்ஸ், கொழும்பு), குகானந்தன் (பிரான்ஸ்), தேனுகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் முத்துலிங்கதாஸ் (பிரான்ஸ்), யாழினி (பிரான்ஸ்), பகீரதி (மருந்தாளர்- அரசினர் வைத்தியசாலை, வவுனியா), ஜசிதா (பிரான்ஸ்), இந்திரகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவபாதமணி, வடிவாம்பிகை, ஞானப்பூங்கோதை மற்றும் மணிமேகலை ஆகியோரின் அன்புச் சகோதரனும் மாணிக்கவாசகர் (வர்த்தகர்), காலஞ்சென்றவர்களான நாகலெட்சுமி, கனகசபை மற்றும் இரத்தினசபாபதி (வர்த்தகர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாகேஸ்வரி (பிரான்ஸ்), மயூரி (பிரான்ஸ்), தர்சிகா (பிரான்ஸ்), கஜனிதா (பிரான்ஸ்), அனுசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும், நடராசா, மயில்வாகனம் செல்வரெத்தினம் தம்பதிகளின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2005) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**22, குமாரசாமி வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

தகவல்:.
**தி.விவேகானந்தன் (மகன்).**
(சி-41262)(43-11-18)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

1st BIRTHDAY HAPPY




நிரஞ்சன் - நிரஞ்சனா தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி நீற்றா தனது முதலாவது பிறந்தநாளை இன்று (02.03.2005) புதன்கிழமை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் வெகுகுதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

நீற்றாவை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பாட்டி லண்டனில் வசிக்கும் நிமல் சித்தப்பா, றீகன் சித்தப்பா, அன்ராமார், ஆசை மாமா, அத்தைமார், சுவிஸில் வசிக்கும் குகன் மாமா குடும்பம், லண்டனில் வசிக்கும் குலம் மாமா குடும்பம், ஜேர்மனியில் வசிக்கும் கவிதா அத்தை குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பிலாவடி அம்மன் அருள்பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

அன்புடன்: செ.சதாசிவம்
(அம்மப்பா).
சிவன் கோயிலடி, புத்தூர். (42607)

# மனையியல் கண்காட்சி

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் தையல் - மனையியல் கண்காட்சி கடந்த திங்கட்கிழமை புத்தூர் மத்திய சனசமூக நிலைய மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்றது. பிரதேசகிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜீ.ரி.ஞானசேகரவேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் சி.மகேந்திரன் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தியாகமூர்த்தி, கிராம அலுவலர் க.வைத்தியநாதன் புத்தூர் மத்தி சனசமூக நிலையத் தலைவர் மா.ராதாகிருஷ்ணன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(எ-86)

# சமுர்த்தி வங்கிக்கு காணிகிடைத்தது

வரணியில் சமுர்த்தி அலுவலகம் அமைப்பதற்குரிய காணியை திக்கில் கந்தசாமி கோவில் நிர்வாகம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

காணி வழங்கப்பட்டதையடுத்து கட்டட வேலைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 9 லட்சத்து 50ஆயிரம் ரூபாவை கட்டட நிதிக்காக சமுர்த்தி அதிகார சபை ஒதுக்கீடு செய்துள்ளதாகக் கூறப்பட்டது.

(எ-170)

# முதியோர் இல்லம் நிறுவ ஏற்பாடு

மானிப்பாய் வடக்கு முதியோர் நலன்புரிச்சங்கம் சுமார் 100 முதியோர்களைப் பராமரிக்கக் கூடிய முதியோர் இல்லம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. முதியோர் இல்லத்துக்கு இலவசமாகக் காணி வழங்க விரும்புவோரை அப்பகுதிக் கிராம சேவகருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(எ-90)

# Jayoda ஜயோதா ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6697002 முதல் 6709327 வரை
சீட்டிழுப்பு இல. 113 திகதி 28-2-2005

வெற்றி எண்கள் **4 7 8 7 5 3** சுப்பர் எண் **16**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,97,93,950/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,97,93,950/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 108 | 5,000/- | 5,40,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,089 | 500/- | 5,44,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,876 | 50/- | 5,43,800/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 107,790 | 10/- | 10,77,900/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 111 | 1,000/- | 1,11,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,082 | 100/- | 1,08,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,773 | 20/- | 2,15,460/- |
| மொத்தம் | 131,859 | | 53,88,460/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 53,88,460/-

இந்த வியாழக்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. **2,00,96,375/-**

தொடர் இல. 7655674 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 பெபரவரி 03 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6697988-1-84
6705274-7-31
6702711-4-64
6708729-2-32
6702238-6-23
6705764-8-22
6701415-7-67
6701651-2-50

# ஆசிரிய நியமனம் பெற்ற...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சத்தியப் பிரியா நவரத்தினம் (சாம்பல்தீவு, திருகோணமலை), புனிதகௌரி பேரின்பநாதன் (கோப்பாய் தெற்கு, கோப்பாய்), கேசினி பூபாலசிங்கம் (சித்தன்கேணி), சாமினி மரியரட்ணம் (தும்பளை, பருத்தித்துறை), செந்துமதி சிவபுண்ணியம் (தும்பளை, பருத்தித்துறை), றஜனிதேவி நடராஜா (வேலனை - 6), சிறிகேதீஸ்வரி கணபதிப்பிள்ளை (ஊர்காவற்றுறை), புஸ்பவேணி வீரமுத்து (கொழும்புத்துறை, குமுதினி முருகையா (நீர்வேலி மத்தி), மணியம் சாந்ரூபன் (கரவெட்டி கிழக்கு), காயத்திரி இராயதுரை (கோப்பாய் வடக்கு), சிவச்செல்வி கந்தப்பசேகரம் (வைரவர் கோயிலடி, கைதடி), செல்வராஜா மதனரூபன் (கைதடி கிழக்கு), றெஜினோல்ட் சேவியர் செல்வசோதி குலாஸ் (வங்காலை, மன்னார்) -

பிரேமிலா சுதாராஜா (பத்தித்தோட்டம், மன்னார்), லதீஸ்லாஸ் அமலநாதகுமார் (தாழ்வுப்பாடு, மன்னார்), கனகசபை பஞ்சாட்சரம் (பல்வராயன் கட்டு, பூநகரி), சமுர்தீன் முகமது றிபான் (புவேலிகாம), எம்.ஐ.அஸாம் அஹமட் இன்ஜாட் (மாத்தறை), ஐஸ்மியா பர்வீன் ஜலீல் (எருக்கலம்பிட்டி, பாலாவி), பாத்திமா சிபானி முகமது சஹீர் (மடவல பஸார்), பாத்திமா நவாஸ் முகமது நவாஸ் (குருநாகல் றோட், பொத்துகெற), முகமது சலீம் நூறி (தெல்தொட்ட), அசனா மறைக்கார் மருஜூனா (ஒலுவில் - 4), உதுமாலெப்பே நசீரா பர்வின் (கல்முனை - 5), முசாறபா மெக்ரா முஹைதீன் (அக்கரைப்பற்று - 1), முஹமது முஹைதீன் இருசாத் (பொத்துவில் - 2), றஞ்சனி கோணாமலை (மல்வத்த - 2, அம்பாறை), கமலினி வடிவேல் (நாவலடி, மட்டக்களப்பு).

ஜெனந்தினி தம்பிரட்ணம் (செட்டிபாளையம் வடக்கு), இராசதுரை ஜீவானந்தராஜா (பெரியபோரதீவு), செல்வரட்ணம் தேவகுமார் (கணேசபுரம், மண்டூர்), தமிழினி முனிதாஸ் (செட்டிப்பாளையம் வடக்கு), குருகுலசிங்கம் சஞ்ஜயன் (களுவாஞ்சிக்குடி - 9), கந்தசாமி தேவசந்திரராஜா (கிரான்குளம் வடக்கு), அசானர் நபீசத்துள் தஸ்மீன் (ஏறாவூர் - 3), பிரியந்தினி கோவிந்தசாமி (களுவாஞ்சிக்குடி), சுகந்தினி செல்வராஜா (மூதூர்), அஜந்தினி அருளானந்தர் (திருகோணமலை), சின்னயைா ராஜரட்ணம் (இயற்றாளை, வரணி), பிருந்தா வனிதை நடராசா (கண்டி றோட், சாவகச்சேரி), ஜோசப் நிக்கிலஸ் றொசன் (உரும்பிராய், கிழக்கு), கேமவர்த்தனி நடராஜா (கோப்பாய் வடக்கு), சறோஜினி தவமணி (கைதடி வடக்கு), மோகனவதனி தியாகராசா (மிருசுவில்), சுவர்ணா கதிரேசன் (சரசாலை தெற்கு, சாவகச்சேரி), சிவசுப்பிரமணியம் சிவசங்கர் (ஆணைப்பந்தி), கனிதா கணேஸ் (மந்துவில், கொடிகாமம்), தர்சினி சங்கரப்பிள்ளை (அராலி கிழக்கு), ஜேசுதாசன் தர்மதுரை (நெடுந்தீவு), பிரபாஜினி தவரட்ணம் (இருபாலை கிழக்கு), சுரேக்கா தங்கராஜா (மாதகல்), ஜெயரூபி நல்லையா (மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி), செல்வநாயகம் அருள்குமரன் (சிவன்கோவில் றோட், புத்தூர்).

நடேசு துஷியந்தன் (கரணவாய் வடக்கு), சுகாசினி சிவானந்த நடராஜா (அல்வாய் கிழக்கு), வேதநாயகம் கணேந்திரன் (இணுவில் கிழக்கு) -

கணேசு விமல்ராஜ் (வண்ணார்பண்ணை, யாழ்.), சிஜானி இராஜேஸ்வரன் (மாங்குளம்), வசந்தமலர் பாலசுப்பிரமணியம் (உடையார் கட்டு வடக்கு), மேரி சுஜாதா ஜோன்சன் (மன்னார்), விசா அந்தோணி (மடு), இம்மானுவேல்பிள்ளை ஜேசுராஜா (வட்டக்கண்டல்), அனுசா தயாபரன் (அக்கராயன், கிளிநொச்சி), கோசலாதேவி பரநிருபசிங்கம் (வட்டக்கச்சி, கிளிநொச்சி), தாரணி பழனிவேல் (ஸ்கந்தபுரம், கிளிநொச்சி), சந்திரவதனி உதயகுமார் (பல்லவராயன்கட்டு), முப்தியா மஹ்றூப் (புளியங்குளம்), சத்தியா நடனசபேசன் (நேலுக்குளம், வவுனியா), மஹ்றூபா உவைத்தா (முள்ளிப்பொத்தானை), கீதா முருகேசு (மீசாலை மேற்கு), தயாநிதி செல்வமாணிக்கராஜா (சுன்னாகம்) -

ஞானசௌந்தரி (வல்வெட்டித்துறை), நாகசந்திரன் (செல்வச்சந்திரன் (ஆலடி, ஆனைக்கோட்டை), ஆனந்தகலாதர்சினி சிற்பதி (பருத்தித்துறை), இரட்ணசிங்கம் நவசீலன் (உடுவில் கிழக்கு), எஸ்.வினோத்குமார் (அரியாலை), தவச்செல்வன் முகுந்தன் (புளியங்கூடல், ஊர்காவற்றுறை), சீவரத்தினம் கமலதாஸ் (நீர்வேலி), நடராஜா விமலகுமார் (சாவகச்சேரி), பாலசுப்பிரமணியம் ரகுநாதன் (பருத்தித்துறை), சிவராசா சுரபாஸ்கரன் (திருநெல்வேலி கிழக்கு), சுதர்ஜினி புஸ்பராஜா(கரவெட்டி கிழக்கு), கலைச்செல்வி சின்னத்தம்பி (துன்னாலை வடக்கு, கரவெட்டி), சாந்தனா பத்மநாதன் (புலோலி தெற்கு, புலோலி), கோகிலவாணி சற்குணம் (ஒட்டுசுட்டான்).

ஓசன் சஹிவு ஜலெக்ஸா (உப்புக்குளம், மன்னார்), ஜெயகீதா வீரசிங்கம் (கண்டாவளை, பரந்தன்), சிவாஜினி சிவசுப்பிரகாசம் (கறுக்காய் தீவு, பூநகரி), பத்மசிறி செல்வராசன் (பெரியகுளம், வவுனியா), பாத்திமா அஸ்மியா ஹமதுகாசீம் (காத்தான்குடி).

(எ-3-7-12-202-203-204-205)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய லொறி நீதிமன்றில்

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த லொறியை 90 நாள்கள் நீதிமன்றில் தடுத்துவைக்க சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலீஸாரால் கடந்த திங்களன்று நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான், லொறியின் சாரதியான் கிருஸ்ணபிள்ளை சுதாகரன் என்பவருக்கு 20 ஆயிரம் ரூபாவை அபராதம் விதித்ததுடன், ஏற்கனவே இப்பாரஊர்திக்கு எதிராக இந்த நீதிமன்றில் வழக்கு இருந்ததை பொலீஸார் சுட்டிக்காட்டியதை அடுத்து லொறியை 90 நாள்கள் நீதிமன்றில் தடுத்துவைக்குமாறும் உத்தரவிட்டார்.(எ-117)


**NEW STOCK**

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட IBM, DELL கணனிகள் உத்தரவாதத்துடன் மிகக்குறைந்த விலையில்

PENTIUM II, 266MHz, 64MB 4.2 GB
PENTIUM II, 300MHz, 64MB 6.4 GB
PENTIUM II, 350MHz, 64MB 6.4 GB
PENTIUM II, 400MHz, 64MB 6.4 GB
PENTIUM III, 500MHz,128MB 10 GB
WITH 15", 17" DELL, SIEMENS MONITORS
ரூபா 22000.00 லிருந்து

மேலதிக விபரங்களிற்கு

STP Your Partner in IT Solution
Kantharmadam, Jaffna. T.P:0212222674
web:www.stpjaf.com


**மீன்பிடியியல் டிப்ளோமா 4ஆம் அணியினருக்கான அவசர கலந்துரையாடல்**

இந்த அவசர கலந்துரையாடலானது நாளை (03.03.2005) வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்துக்கு முன்பாக நடைபெற வுள்ளது. இதற்கு அனைத்து 4ஆம் அணி மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறும் அத்துடன், திருகோணமலை செல்வதற்கான ஆயத்தத்துடன் வருகைதருமாறும் வேண்டப்படுகின்றீர்கள்.

(42633) 4 ஆம் அணி மாணவர்கள்.


**மனோகரா** யாழ்ப்பாணம்




காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

**லக்ஷ்மி சினிமா** இணுவில்

விக்ரம், கிரன் மற்றும் பலர் நடித்த

ஜெமினி (ரீல்ஸ்)

தினசரி: 11.00, 3.00, 7.00

**நிரஞ்சனாஸ்** சங்கானை

ஜெயம்ரவி, அஸ்வினி, நதியா, பிரகாஷ்ராஜ் நடித்த

M.குமரன் Sun Of மகாலட்சுமி

காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.) (C/40667)

**நாதன்ஸ் சினிமா**

விக்ரம் - திரிசா - விவேக் - விஜயகுமார் நடித்த

சாமி

தினசரி 10.30. 2.30 6.30.9.30. (பு.நே.)

எமது அடுத்த வெளியீடு தாவடி மைந்தன் ஜெய்ஆஹாஷ் நடிக்கும்

குருதேவா

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்



விஜய், திரிஷா, சாயாசிங் மற்றும் பலர் நடித்த

திருப்பாச்சி (ரீல்ஸ்)

தினசரி 11.00. 3.00. 7.00. (பு.நே.) (C/40664)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு அஜித், திரிஷா, மணிவண்ணன், விஜயகுமார் நடிக்க



4ஆம் திகதி முதல் சிம்பு, ஜோதிகா நடித்த மன்மதன் (ரீல்ஸ்)

காட்சிநேரம்:10.30, 2.30, 6.30, (பு.நே.)


**HNB Assurance நடத்தும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி**

தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்ட எமது சுற்றுப்போட்டி எதிர்வரும் 06.03.2005 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது என்பதனைச் சகல பங்குபற்றும் திணைக்களங்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இதுதொடர்பான விவரங்களை நாளை (02.03.2005) HNB அசூரன்ஸ் யாழ். கிளையில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உங்கள் அனைத்தையும் நாம் பாதுகாப்போம்.
HNB Assurance
212, 214, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P 0212226016
(42634)



ஓம் சக்தி
மேல் மருவத்தூர்

**ஆதிபராசக்தி பீடம்**

கிளானை - அல்வாய்

**அருள்திரு அம்மாவின் அவதாரத்திருவிழா**

03.03.2005 வியாழக்கிழமை (65 ஆவது ஆண்டு)

அன்புடையீர்!

மேற்படி விழா பின்வருமாறு கொண்டாடப்படும்
காலை 7.00மணி - அபிடேகம்
காலை 8.00மணி - குத்துவிளக்கு கலச வேள்வி (யாகம்)
காலை 10.00மணி - மக்கள் நலன் வேண்டி தொடர் அர்ச்சனை

கலியுகத்தின் கேடுகளைக் களைய வந்த கல்கி அவதாரம் அருள்திரு அம்மாவின் அவதார விழாவிற் கலந்து அன்னையின் பேரருளுக்குப் பாத்திரமாகுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னைக்குச் சாத்தப்பட்ட பட்டுக்கள், அன்னையின் பிரசாதம், படங்கள், புத்தகங்கள், கலசங்கள் என்பன விற்பனை செய்யப்படும்.

அன்னையின் திருப்பணி வேலைகளிலும் பங்குகொண்டு ஊழ்வினைகளைக் களைந்து இகபரசுகங்களை அடையும்படி வேண்டுகின்றோம்.

ஓம் சக்தி! ஆதிபராசக்தி!

ஆலயத்திற்குச் செல்லும் பாதை
யாழ்ப்பாணம்,
நெல்லியடி, திக்கம் வீதி,
அல்வாய் மத்தி. (42634) - பீட நிர்வாகம்.

# மரண அறிவித்தல்கள்

## நாகநாதர் குமாரசாமி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் மேற்கை வாழிடமாகவும் கொண்ட ப.நோ.கூ.சங்கக் கிளையின் முன்னாள் முகாமையாளரும் பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவாளருமாகிய நாகநாதர் குமாரசாமி அவர்கள் 25.02.2005 வெள்ளிக்கிழமை நெடுந்தீவில் இயற்கை எய்தினார்.

அன்னார் வடிவழகம்மாவின் அன்புத் துணைவரும் நாகம்மா (பிரான்ஸ்), கணேஸ் (ஆசிரியர் - லண்டன்), கலாமதி (லண்டன்), குட்டி (கனடா) ஆகியோரின் அன்பு உடன் பிறப்பும் ஜெயவதி (ஆசிரியர் - லண்டன்), சந்திரகுமார் (லண்டன்), இராசன் (கனடா), வரதலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிருபாகரன் (ஆசிரியர் - வட்டக்கச்சி ம.வி.), வசந்தி, சாந்தி, ரேணுகா ஆகியோரின் சிறிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் 26.02.2005 சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நெடுந்தீவு மேற்கு பனங்காணி இந்து சுடுகாட்டில் எரியூட்டப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நெடுந்தீவு. திருவாட்டி வரதலட்சுமி இலட்சுமணபிள்ளை.
(42630)

## திருமதி கதிரித்தம்பி மகேஸ்வரி

உடையார்வளவு, புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி மகேஸ்வரி அவர்கள் கடந்த 28.02.2005 அன்று காலமானார்.

அன்னார் அமரர்களான செல்லத்துரை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கதிரித்தம்பியின் அன்பு மனைவியும் சரஸ்வதி, காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் சின்னத்தம்பி, காலஞ்சென்ற பூபதி மற்றும் சிவகாமிப்பிள்ளை (கங்கா), காலஞ்சென்ற இளையதம்பி ஆகியோரின் சகோதரியும் இராசேந்திரம், சிவநேசன் (சூட்டி), மனோகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசகுமாரி, மகாலக்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் யனுஷா, ரதினி, சல்கவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை வியாழக்கிழமை (03.03.2005) காலை 10 மணியளவில் விலங்கன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*உடையார் வளவு,*
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு.* (42638) தகவல்: சி.கதிரித்தம்பி (கணவர்).

## கார்த்திகேசு மதியாபரணம் (J.P.)

(முன்னாள் பொரளை வர்த்தகரும், முன்னாள் புங்குடுதீவு கிராமசபைத்தலைவரும்)

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கல்லூரி வீதி, நீராவியடியை வதிவிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய கார்த்திகேசு மதியாபரணம் அவர்கள் 01.03.2005 (செவ்வாய்) அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - செலலம்மாவின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் யோகசுந்தரி (கனடா), இளமதி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விநாயகமூர்த்தி (கனடா), சபாபதிப்பிள்ளை (புகையிரதத் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் பத்மப்பிரியா, ஐங்கரன், அருளநந்தி, அச்சுதன், அனுசன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இராசேந்திரம் ஆகியோரின் சகோதரனும் சிவக்கொழுந்து, யோகம்மா காலஞ்சென்றவர்களான கந்தையா, குமாரசுவாமி, கணபதிப்பிள்ளை, பாக்கியலட்சுமி, செல்வராசா மற்றும் தெய்வநாயகி, நல்லையா ஆகியோரின் மைத்துனரும் கனகாம்பிகை சேனாதிராஜா (கனடா), புவனேஸ்வரி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*82,கல்லூரி வீதி,* (42639)
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* தகவல்: திருமதி க.மதியாபரணம் (மனைவி).

## திருமதி பூமாலைராசா சந்தானலட்சுமி அம்மா (யசோதா)



வீரமாணிக்கம் தேவன்துறை, மயிலிட்டியைப பிறப்பிடமாகவும் நவாலி வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமாலைராசா சந்தானலட்சுமி அம்மா நேற்று (01.03.2005) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சுப்பையா பூமாலைராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்வராசா - சிவபாக்கியம் தம்பதிகளின் மகளும் நந்தகுமாரின் (நந்தன்) அன்புத் தாயாரும் காலஞ்சென்ற செல்வநாச்சியார் மற்றும் தங்கேஸ்வரி, செல்லச்சோதி, பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2005) வியாழக் கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் காக்கைதீவு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

'திருத்தணிகை' நவாலி றோட்,
ஆனைக்கோட்டை. (42640) தகவல்: குடும்பத்தினர் நந்தன் (மகன்).

## குருசுப்பிள்ளை ஸ்ரனிஸ்லஸ் இராசையா

(ஓய்வுபெற்ற உப அஞ்சல் அதிபர், திடீர் மரணவிசாரணை அதிகாரி)

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் தாழையடியை வசிப்பிடமாகவும் தற்பொழுது ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட குருசுப்பிள்ளை ஸ்ரனிஸ்லஸ் இராசையா நேற்று (01.03.2005) செவ்வாய்க் கிழமை ஆஸ்திரேலியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசுப்பிள்ளை றோசுமுத்துவின் அன்பு மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருட்சகோதரி மேர்சி அஞ்சலா, A.C., மற்றும் றோசலீன் (செம்பியன்பற்று), அமிர்தநாயகம் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜீவரட்ணம் (டென்மார்க்) மற்றும் ஜெறோம், மரியதாஸ் (ஆஸ்திரேலியா), அசந்தா (பிரான்ஸ்), பேர்ப்பெத்துவா (டென்மார்க்), தவசீலி (ஆஸ்திரேலியா), கிறேசியன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இது தொடர்பான அறிவித்தல் பின்னர் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செம்பியன்பற்று.* (42642) தகவல்: ஸ்ரீபன் (மருமகன் - ஓய்வுபெற்றகிராம அலுவலர், செம்பியன்பற்று).

# புலிகள் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுள்ளது. இது புலிகளை மேலும் சீண்டிவிட்டுள்ளதுடன், கடும் சீற்றமுறவும் வைத்துள்ளது.

எனவே, இது குறித்துத் தமிழ்ச்செல்வன் நேற்றிரவு அவசரமாக நோர்வே அரசுக்குத் தமது சீற்றத்தைத் தெரியப்படுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஊடாக தமிழ்ச்செல்வனின் செய்தி நேற்றிரவே நோர்வே அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதேவேளை, பெண் போராளிகள் மீதான தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் நேற்று ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

28.02.2005 அன்று விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி உள்ளிட்ட மூன்று போராளிகள் மீது ஆயுதக்குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர்கள் மூவரும் படுகாயமடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி மற்றும் சசிமதி, அகநிலா ஆகியோர் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் கொக்கட்டிச்சோலையிலிருந்து தங்கவேலாயுதபுரத்தை நோக்கி ஓட்டோ ஒன்றில் சென்றுகொண்டிருந்தனர். அப்போது தம்பிலுவில் சவக்காலைக்கு அண்டையில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர்கள் மூவரும் படுகாயமடைந்தனர். பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

போராளிகள் சென்றுகொண்டிருந்த ஓட்டோவை இடைமறித்துத் தாக்குதல் நடத்திய நபர் அதன் பின்னர் அருகேயுள்ள படைமுகாமினுள் சென்றமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் விதிமுறைகளுக்கமைய இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிராயுதபாணிகளாக அரசியல் பணியில் ஈடுபட்டுவரும் எமது போராளிகள் மீது தாக்குதலை மேற்கொள்வது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும்.

இத்தாக்குதல் நடைபெற்ற வீதியில் விசேட அதிரடிப்படையினர் சகல வாகனங்களையும் சோதனையிட்டு வருவதால் அதிரடிப்படையினரின் ஒத்துழைப்பின்றி ஆயுதக்குழுவினர் இத்தாக்குதலை மேற்கொண்டிருக்க முடியாது.

படைத்தரப்பின் அனுசரணையுடனும் ஆதரவுடனும் மட்டு. - அம்பாறை மாவட்டங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வாறான தாக்குதல்கள், தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கும் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கான நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் பெரும் பங்கம் விளைவிக்கும். 3 வருடகாலமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கும் அது பாரதூரமான விளைவையே ஏற்படுத்தும் என நாம் அஞ்சுகிறோம்.

யுத்தநிறுத்த காலப் பகுதியில் பல பொறுப்பாளர்களையும் போராளிகளையும் இவ்வாறான துரோகத்தனமான தாக்குதல்களால் இழந்தும் கூட பொறுமைகாத்துவரும் தமிழ்மக்களையும் விடுதலைப் புலிகளையும் தொடர்ந்து சீண்டும் நடவடிக்கையாகவே இவ்வாறான சம்பவங்கள் அமைகின்றன.

இவற்றினால் ஏற்படப்போகும் விளைவுகள் தொடர்பாக இலங்கைப்போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவானது தனது அவதானிப்பையும் அறிக்கையையும் வெளியுலகிற்குத் தெரியப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (த-க)

# மாவின் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபைக்கும் தாம் அறிவிக்கவுள்ளார் எனவும் நேற்றுத் தெரிவித்தார்.

மானியம் நிறுத்தப்பட்டாலும், கோதுமை மா விலையைத் தான்தோன்றித்தனமாக அதிகரிக்க பிறிமா நிறுவனத்திற்கு அதிகாரமில்லையென அரசு அறிவித்திருந்தபோதும், அந்த நிறுவனம் மா விலையை அதிகரித்துள்ளது.

இந்த விலை அதிகரிப்பின்படி, இதுவரை திருகோணமலை பிறிமா நிறுவனத்தில் கோதுமை மாவின் மொத்த விற்பனைவிலையாக இருந்த கிலோ ஒன்றுக்கு 22 ரூபா என்பது இப்போது 28 ரூபா 50 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், கொழும்புச் சந்தையில் கோதுமை மாவின் விலை போக்குவரத்துச் செலவு அடங்கலாக கிலோவொன்று 31 ரூபா 50 சதத்திற்கு விற்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பிறீமா நிறுவனம் மா விலையை அதிகரித்தாலும் அரசு குறைந்த விலையில் பாவனையாளர்களுக்குக் கோதுமை மாவைப் பெற்றுக்கொடுக்குமென்று வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நேற்றுத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

அரச மானியம் இடைநிறுத்தப்பட்டடையடுத்து பிறிமா நிறுவனம் மா விலையை அதிகரித்ததென்பது இயல்பானது. அதற்கான அதிகாரம் அவர்களுக்குள்ளது. ஆனால், அரசிற்கு இது பிரச்சினையல்ல. அதே கோதுமை மாவை நாம் குறைந்த விலையில் விற்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கோதுமை மாவின் மொத்த விலையை 28 ரூபா 50 சதமாக பிறிமா நிறுவனம் நிர்ணயம் செய்துள்ளது. எனினும், நாம் கோதுமை மாவை 24 ரூபாவிற்கு விற்பனை செய்வோம். இது குறித்து மக்கள் கிஞ்சித்தும் கவலை கொள்ளத் தேவையில்லை - என்றார் அமைச்சர். (த-க-7-190)

# பல்கலை கழக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரணி அங்கிருந்து பலாலி வீதி வழியாகக் கந்தர் மடம் சந்திக்கு வரும். பின்னர் அங்கிருந்து அரசடி வீதி ஊடாக நல்லூர் பின் வீதியை அடைந்து கோவில் வீதியூடாக நகரும். அப்போது நல்லூரில் அமைந்திருக்கும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் வதிவிடப் பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப்படும். தொடந்து கோவில் வீதிவழியே செல்லும் பேரணி அந்த வீதியில் உள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் தரிக்கும். பேரணி ஏற்பாட்டாளர்களால் அங்கு வைத்து கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளிடம் மகஜர் ஒப்படைக்கப்படும். பேரணி செல்லும் வழியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பணிமனையிலும் மகஜர் கையளிக்க ஏற்பாடாகி உள்ளது.

இறுதியாகப் பேரணி யாழ்.அரச செயலகத்தை அடைந்ததும் அரசுக்கான மகஜர் அங்கு வைத்து அரச அதிபரிடம் கையளிக்கப்படும். பேரணியில் கலந்துகொண்டோர் சார்பில் கோரிக்கைகளை விளக்கும் பேரணிப் பிரகடனம் அங்கு வாசிக்கப்படும்.

இன்றைய பேரணியில் சகலதரப்பினரையும் பங்கு கொள்ளுமாறு பொது அமைப்புகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாணவர் அமைப்புகள் சார்பில் கோரிக்கைகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன.

பேரணி நடைபெறும் வேளையில் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்படும். வர்த்தகர்கள் அனைவரும் பேரணியில் கலந்துகொள்வர் என்று வர்த்தக சங்கங்கள் அறிவித்திருக்கின்றன.

பொதுப் போக்குவரத்து சேவைகள் வழமைபோல இடம்பெறும். பேரணியில் கலந்து கொள்வோர் நலன் கருதி விசேட வாகன சேவைகளும் இடம்பெறும். (ஐ-7-12-15-17-86-173-190)

# கண்காணிப்புக் குழுவினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னியா மாவட்ட இணைப்பாளரும், அவருடைய உதவியாளரும் என்னைச் சந்திக்க வந்திருந்தனர். இன்று (நேற்று) மக்கள் சந்திப்பு தினம் என்பதால் நான் மக்களை சந்தித்துக்கொண்டிருந்தேன். அவ்வேளையில் அங்கு வந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் எங்களுடைய அனுமதி எதையும் பெற்றுக்கொள்ளாது போராளிகள் தங்குமிடத்துக்கு - மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தின் பிற்பகுதிக்கு - அத்துமீறிச் சென்றனர்.

இச் செயற்பாடு ஓர் அநாகரிகமான நடவடிக்கை. அப்போது எமது மொழிபெயர்ப்பாளர், இதுபோராளிகளின் தங்குமிடம். இவர்கள் சொந்தத் தேவைக்காகப் பயன்படுத்துமிடம். நீங்கள் அலுவலகத்தின்முன்பகுதியிலேயே பேசலாம் என்று கூறினார்.

அவ்வேளை, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட இணைப்பாளர், இல்லை நாங்கள் பேசவந்த விடயம் முக்கியமானது. இந்த இடத்தில் வைத்தே அதனைப் பேசவேண்டும் - என்று கூறி வாக்குவாதப்பட்டுள்ளார்.

பின்னர் நான் அவ்விடத்திற்கு விரைந்து உரியமுறைப்படிபேச்சுக்களைநடத்த ஒழுங்கு செய்யப்பட்ட இடத்திற்குச் செல்வோம் என்று கூறினேன்.

ஆனால், அதற்கு அவர்கள் தாங்கள் எங்கு போவதற்கும் உரிமை உள்ளவர்கள், எந்த இடத்தில் வைத்தும் கதைக்கலாம் என்று என்னோடு வாதிட்டனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் எந்த நோக்கத்துடன் வந்தார்கள் என்பதும் - ஏன் இவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பதும் - எமக்குத்தெரியவில்லை.

அவர்களுடைய செயற்பாட்டை அநாகரிகமான - அத்துமீறிய - நடவடிக்கையாகவே நாங்கள் கருதுகின்றோம். - என்றார்.

இதேவேளை - இச்சம்பவம் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில், நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாமைப் பரிசோதனை செய்யவில்லை. எனினும், அது தொடர்பான பேச்சுக்களை நடத்தவே எமது பிரதிநிதிகள் அங்கு சென்றிருந்தார்கள் - என்றார்.

# குவேனியைச் சுட்டவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று வைத்தியசாலைக்கு வந்திருந்த குறிப்பிட்ட நபரை அங்கிருந்த ஆண் போராளிகள் அடையாளங் கண்டுகொண்டனர்.

சந்தேக நபர் வைத்தியசாலையை விட்டு வெளியேறியதும் போராளிகள் அவரைப் பின்தொடர்ந்தனர். அவர், கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையில் அமைந்துள்ள - ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான - நலன்புரி நிலையத்திற்குள் சென்றார்.

போராளிகள் உடனடியாக இதுகுறித்து நிலையத்தில் இருந்த அதிரடிப் படையினரிடம் முறையிட்டனர். அவர்கள் சந்தேகநபரைக் கைதுசெய்தனர். பின்னர் அவர் கல்முனைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். குறிப்பிட்ட சந்தேகநபர் கல்லாறைச் சேர்ந்த பிரதீபன் என்பவராவார் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை-

படுகாயமடைந்த குவேனி நேற்றிரவு 7 மணியளவில் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டுசெல்லப்படவிருந்தார்.

அம்பாறை, உகணவிலிருந்து சிறியரக விமானம் மூலம் அவர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட இருந்தார். அவரது மார்புப் பகுதியில் பாய்ந்த துப்பாக்கிக் குண்டு முதுகுப்புறமாக வெளியேறியுள்ளது. ஏனைய இரு பெண் போராளிகளும் வயிற்றில் காயமடைந்துள்ளனர். (த-க-7-190)

# மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொன்றில் இவர்தங்கியிருந்தார். தனிப்பட்ட தேவை நிமித்தம் பார் வீதிக்குச் சென்றிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்று பொலீஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட இவர், நேற்று அதிகாலை 1.30 மணியளவில் சிகிச்சை பயனின்றி மரணமடைந்தார் என வைத்தியசாலைப் பொலீஸார் தெரிவித்தனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலீஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை, உயிரிழந்த தயாநிதி முன்னாள் இராணுவச் சிப்பாய் என்று மற்றொரு தகவல் தெரிவித்தது.

புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி மற்றும் இரு பெண் போராளிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு சுமார் இரண்டரை மணி நேரத்தின் பின்னர் தயாநிதி சுடப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(த-க)

# அரசுக்கு ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விப்பு அரசுக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சி யான ஜே.வி.பியைச் சீற்றமுற வைத்திருப்பது தெரிந்ததே.

இந்தப் பின்னணியிலேயே -

அரசின் மேற்படி அறிவிப்பு வாபஸ் பெறப்படவேண்டும் என்றும், அப்படிச் செய்தால் மாத்திரமே ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியில் தொடர்ந்தும் அங்கம் வகிக்க முடியும் என்றும் ஜே.வி.பி. வற்புறுத்துகின்றது.

அரசுக் கூட்டமைப்புக்குள் நிலவும் உட்பூசல்களைத் தீர்த்துக்கொள்வது குறித்து ஆராய்வதற்காக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவிற்குமிடையிலான பேச்சொன்று அமைச்சர் கதிர்காமரின் இல்லதில் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போதே ஜே.வி.பியின் மேற்படி உறுதியான நிலைப்பாட்டை முன்வைத்து அதற்கான காரணத்தையும் விளக்கியிருக்கிறார் சோமவன்ஸ.

இரண்டு மணிநேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது அரசின் பிரதானபங்காளியினரான ஜே.வி.பியினர் அரச விவகாரங்களில் அசட்டை செய்யப்படுகிறார்களென்ற குற்றச்சாட்டை முன்வைத்த ஜே.வி.பி.தலைவர், தேசியப் பிரச்சினைகள் குறித்து தமது கட்சியினருடன் ஆராயாமல் எந்த முடிவையும் அரசு எடுக்கக் கூடாது எனவும் வலியுறுத்தினார் எனத் தெரிகிறது.

சமாதான முயற்சிகள் சம்பந்தமான அரசின் நிலைப்பாடும் செயற்பாடும் தேர்தல் காலத்தில் கூட்டமைப்பு வழங்கிய வாக்குறுதிகளை மீறுவதைப் போல் அமைந்துள்ளன. எனவே, இவ்வாறான நிலைமையில் உண்மை நிலையை மக்களுக்குக் கூறுவதைத் தவிர தங்களுக்கு வேறு வழியில்லை என்றும் ஜே.வி.பியின் தலைவர் அப்போது குறிப்பிட்டிருக்கிறார்.

இதேவேளை - ஜே.வி.பியின் இந்த நிலைப்பாடு குறித்து அமைச்சர் கதிர்காமர் நேற்று ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துக் கூறிய போதும், ஜனாதிபதியிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் எதுவும் வெளியிடப்படவில்லையென்று ஜனாதிபதி மாளிகை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(த-க)

# புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் நடந்த தாக்குதல்களில் ஏதாவது பயங்கரவாதக் குழு அல்லது குழுக்கள் அல்லது வேறு சக்திகள் தொடர்புபட்டுள்ளனவா என்பது குறித்தும் விசாரிக்கும்படி இந்த ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதிபணித்துள்ளார்.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பிக்கும் தினத்தில் இருந்து ஒரு மாத காலத்துக்குள் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார் என ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கை மேலும் கூறியது.

(த-க)

CD/DVD களுக்குரிய
Orignal NAKODA ஸ்ரிக்கர்கள்
பலவித வர்ணங்களிலும் பலவடிவங்களிலும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவுவிலையில்
(C/41268) உடன்பெற்றுக்கொள்ளலாம்.
Music World
141c, தபால்பெட்டிச்சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.

## மரண அறிவித்தல்

### திருமதி அப்பாத்துரை அபயலக்ஷ்மி



சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் தற்போது மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்பாத்துரை அபயலக்ஷ்மி அவர்கள் 01.03.2005 அன்று இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரையின் மனைவியும் திருமதி கமலாதேவியின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம், சிவஞானம் ஆகியோரின் சகோதரியும் சு.சிவகுமாரன் (உரிமையாளர், சுந்தர்ஸன்) அவர்களின் அன்பு மாமியாரும் பிரதிபன், சியாமி, றொபிக்கா, பிறிந்தி, நிதர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (02.03.2005) புதன்கிழமை 3.00 மணியளவில் (பழைய நேரம்) பிப்பிலி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/41268)

தகவல்: சு.சிவகுமாரன்
(உரிமையாளர் - சுந்தர்சன். மானிப்பாய்.)

COLLEGE OF ENGLISH
பிறவுண் வீதி யாழ்.
SPOKEN ENGLISH WITH GRAMMAR
BY:T.THANENDRAN.
S.L.T.S.2-II, B.com. H.N.D.A.,P.G.dip.in.Edu.
பகுதி நேரவிரிவுரையாளர் (ENGLISH) தொழிநுட்பக்கல்லூரி)
புதியபிரிவு ஆரம்பம் வியா. வெள். 5.30p.m.03.03.2005

பவர் செலூலர் ரேடிங் கம்பனி
185, முதலாம் மாடி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.







யாழ். நகரில் அதிரடி தள்ளுபடி
விலையில் பைக்கேச் இணைப்புகளுடன்
மொபிரெல், டயலொக் மேசைத்
தொலைபேசிகள், அன்ரனா மூலம்
எப்பிரதேசத்திற்கும் சிக்கல் இல்லாத்
தெளிவான முறையில் பொருத்தப்படும்.
உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
உத்தரவாதம் உண்டு
தொடர்புகளுக்கு:
0777 299362, 0714 182500

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.